# எங்கள் தேசம்

மாதம் இரு முறை

QD/13/NEWS/2014

மனிதம் வாழுமிடமெல்லாம் எங்கள் தேசமே!

Engal Thesam எංගල් දේසම්

மலர்: 13 | இதழ்: 05 | 2014 மார்ச் 01 – 14 | ஹிஜ்ரி: 1435 | பக்கங்கள்: 20 | விலை: ரூபா 30.00 | 264



RAFA EXPORTS (PVT)LTD

R & E அபாயா

ஏற்றுமதி தரத்தில் தயாரிக்கப்பட்ட Casual, Functional, Wedding, Coloured, Coat போன்ற அபாயாக்கள் விற்பனைக்கு உண்டு.

R & E அபாயாக்களின் சிறப்பம்சங்கள்

- அதி தரமான புடைவை
- குறைந்த விலை
- அனைவருக்கும் ஏற்ற அலங்காரம்

வியாபாரிகளுக்கு விஷேட கழிவு

126/7C, Kandy Road, Thihariya

(பெற்றோல் நிரப்பு நிலையத்திற்கு முன்பாக)

Tel: 0332293096 Mobile: 0777060950

Web: rafaexports.com





பொறுப்புக் கூறலில் வழங்கப்பட்டிருந்த வாய்ப்பை சரியாகப் பயன்படுத்தவில்லை 07





நேர்காணல்:
சமூகம் கரிசனையுள்ள தலைவர்களை வேண்டி நிற்கிறது 10





இனச்சுத்திகரிப்பின் பின்புலத்தில் பிரான்ஸின் காலணித்துவக் கனவுகள் 13


# இந்நாட்டில் சிறுபான்மையினருக்காக குரல் கொடுப்பவர்களுக்கு பாதுகாப்பே இல்லை



## முஸ்லிம்களுக்காக குரல் கொடுத்ததால் கொலை அச்சுறுத்தல் - விஜித தேரர்

அலுவலக நிருபர்

முஸ்லிம்களுக்காக குரல் கொடுத்துவரும் உறுப்பினர்களுக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கும் பொதுபலசேனா போன்ற இனவாத அமைப்புகள் இந்நாட்டில் இருக்கும் வரை சிறுபான்மையினரின் உயிருக்கு எந்தவோர் உத்தரவாதமும் இருக்காது என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மஹியங்கணை பிரதேசசபை உறுப்பினரான விஜித தேரர் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது; முஸ்லிம் மக்களுக்காக குரல் கொடுத்த எனக்கு ஆளுங்கட்சி உறுப்பினர் என்று கூட பார்க்காது பொதுபலசேனா கொலை அச்சுறுத்தல் விடுத்தது. இந்த அச்சுறுத்தலுக்கு பயந்து சுமார் 6 மாத காலமாக தலைமறைவாகவே வாழ்ந்து வருகின்றேன்.


➡ 16


## 5 பிள்ளைகள் பெற்றால் 5000 ரூபாவாம்

சிங்கள இனத்தின் எதிர்காலத்தை பாதுகாக்க விசேட திட்டமொன்று வகுக்கப்பட்டுள்ளது. ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட குழந்தைகளையுடைய சிங்களக் குடும்பங்களுக்கு நிதி உதவி வழங்க இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

2013 ஆம் ஆண்டின் பின்னர் ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட பிள்ளைகளைக் கொண்ட சிங்களக் குடும்பங்களுக்கு மதாந்தம் உதவு தொகையாக ஐயாயிரம் ரூபா வழங்கப்பட உள்ளது. இந்த தொகை தொடர்ச்சியாக பதினேழு ஆண்டுகளுக்கு வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பிரான்ஸ் நாட்டின் பௌத்த விகாரையின் மஹாநாயக்கர் பரவாஹெர சந்திரரத்ன தேரர்


➡ 16


## முஸ்லிம்களின் நாடும் இலங்கையே சவூதியோ பாகிஸ்தானோ அல்ல



### புத்தளத்தில் ஜனாதிபதி

இங்கு பல சமயங்களைப் பின்பற்றுபவர்களும் உள்ளனர். எல்லா இன மக்களும் தாய் நாட்டில் ஒன்றாக வாழுகின்றார்கள். பிரிந்து வாழும் நிலை இல்லை. இந்நாடு எமது நாடு. முஸ்லிம்களாகிய உங்கள் நாடு இலங்கை. உங்கள் நாடு சவூதி அரேபியாவோ, மத்திய கிழக்கு நாடுகளோ, பாகிஸ்தானோ அல்ல. எனவே இந்நாட்டு மாணவர்களுக்குச் சரியான பாதையைக் காட்டி அவர்கள் சமூகத்தில் பயனுள்ள பிரஜைகளாக வாழும் நிலையை உருவாக்க வேண்டிய வசதிகளைச் செய்துகொடுக்க . வேண்டியது எமது கடமையாகும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.


➡ 16


## ரவூப் ஹக்கீம் முஸ்லிம் மயப்படுத்துகிறார்

### ஜாதிக ஹெல உறுமய குற்றச்சாட்டு



நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் நாட்டின் நீதித்துறையை இரகசியமாக முஸ்லிம் மயப்படுத்துவதற்கு சதி செய்வதாக ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது. ஜாதிக ஹெல உறுமயவின் ஊடக செயலாளரும் மேல் மாகாணசபை வேட்பாளருமான நிசாந்த விடுத்துள்ள அறிக்கையொன்றிலேயே இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளார்.

நீதி அமைச்சின் கீழ் வரும் துறைகளில் முஸ்லிம்கள் அதிகமாக உள்வாங்கப்படுவதாகவும் நீதியமைச்சுக்கு பதவிகள் வழங்கப்படும் போதும் சட்டக்கல்லூரிக்கு மாணவர்களை உள்வாங்குவதிலும் சமாதான நீதவான்கள் நியமிப்பதிலும் முஸ்லிம்களுக்கு முன்னுரிமை அளிப்பதாகவும் சிங்களவர்களுக்கு அநீதி இழைக்கப்படுவதாகவும் அவர் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளன.


➡ 16



## பேஸ்புக் போகிற போக்கு சரியில்லை

### ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ

நான் மூன்று, நான்கு ஆண்டுகளுக்கு முன்னரேயே எதிர்வு கூறினேன் பேஸ்புக் போகின்ற போக்கு சரியில்லை; பெற்றோர் இவ்விடயத்தில் கூடுதலான கரிசனை காட்ட வேண்டும் என்று. ஹட்டிப்பொல மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற விழாவொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்; பிள்ளைகள் இது தொடர்பில் பூரண தெளிவுபெற வேண்டும். அதற்காக நாங்கள் பேஸ்புக்கினால் ஏற்படும் நன்மை, தீமைகள் பற்றி சதா சொல்லிக்கொண்டே இருக்க வேண்டும்.


➡ 16

உலகின் மிகப்பெரிய தாவரவியற் பூங்காவனமாக மன்னர் அப்துல்லா சர்வதேச பூங்காவனம் சவூதி தலைநகர் ரியாதில் நிர்மாணிக்கப்படவுள்ளது.

## சிறுபான்மை என்ற மனப்பான்மை தோல்வி மனப்பான்மையை உருவாக்குகின்றது




### கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி

எஸ்.எம். ஸஜாத்

சிறுபான்மை சமூகம் என்பது பலவீனமான சமூகமாக இருக்கக் கூடாது. ஒரு சிறுபான்மை சமூகம் சக்திவாய்ந்த சமூகமாக இருக்கலாம். அதற்கு அந்த சமூகம் அடிப்படை வரலாற்றை உணர்ந்திருத்தல் வேண்டும். ஏனென்றால், சிறுபான்மை என்ற மனப்பான்மை எங்கள் சிலரில் தோல்வி மனப்பான்மையை உருவாக்குகிறது.


➡ 16


## இனி ஆர்ப்பாட்டம் செய்யமாட்டோம்



### பொதுபலசேனா திடீர் அறிவிப்பு

பொதுபலசேனா இதன் பின்னர் ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள் எதிலும் ஈடுபடப் போவதில்லை. பௌத்த தேரர்கள் அரசியலில் ஈடுபடுவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும். நாம் புத்தருடைய காலத்தையும் மிஞ்சிப்போய் தலிபான்களாக மாறுவது எமக்குப் பொருத்தமற்றது என அவ்வமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் அறிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள பொதுபலசேனா இயக்கத்தின் காரியாலயத்தில் நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.


➡ 16



நீங்களும் ஒரு Engineer ஆகலாம்...

City & Guilds World's top rated qualifications

Quantity Surveying (QS)
Civil Engineering
Automobile Engineering

Chartered Engineer UK
↑
City & Guilds Post Graduate Diploma
↑
City & Guilds Graduate Diploma
↑
City & Guilds Advance Technicain Diploma
↑
City & Guilds Technicain Diploma
↑
G.C.E. A/L

Entry requirement:
(A/L) two passes in any stream

INSIGHT

தங்குமிட வசதிகள் உண்டு

Insight School of Engineering
@ Mawanella Campus

For details: Type 'engineering' & sms to
077 3171 722

Insight Institute of Management and Technology
18A, Palmyrah Avenue, Colombo - 03

Hotline: 077 3171 722
Email: insight.soe@gmail.com

Des. Shafeek





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு தமிழர்களுக்கு சிங்களம் தெரியாது தெற்கு சிங்களவர்களுக்கு தமிழ் தெரியாது

## அமைச்சர் வாசுதேவ நாணயக்கார



இலங்கையில் சிங்கள மொழி மாத்திரமின்றி, தமிழ் மொழியும் தாய் மொழியாகும். எனவே இந் நாட்டில் இரண்டு தாய் மொழிகள் உள்ளன. அவற்றைக் கற்று சமூக மாற்றத்திற்கு வித்திட வேண்டும் என தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார சுட்டிக்காட்டினார்.

அரச கரும மொழிகள் திணைக் களத்தில் இடம்பெற்ற சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கு தமிழர்களுக்கு சிங்களம் தெரியாது; தெற்கு சிங்களவர்களுக்கு தமிழ் தெரியாது. இதன் காரணமாக நாடு மொழிரீதியாக பிளவுற்றுக் காணப்பட்டது. மாத்திரமின்றி, வரலாற்றில் இனப் பிரச்சினை தோன்றியமைக்கும் மொழியே காரணம் என்பது இரகசியமல்ல.

மொழிரீதியாக பிளவுற்ற இந் நாட்டை அதனூடாக ஐக்கியப் படுத்த வேண்டும். இதற்காக மொழி, கலாசார, பண்பாடுகளினூடாகவே இனங்களுக்கிடையில் ஒற்றுமையை ஏற்படுத்தலாம். இத்தகைய மாற்றத்தினை பாடசாலைகளினூடாக ஏற்படுத்தினால் எதிர்காலச் சந்ததிகள் இன ரீதியாக பிளவுபடாமல் ஐக்கிய இலங்கைக்குள் ஒற்றுமையாக வாழ்வார்கள்.

நமது சமூகம் ஆங்கில மொழிக்கு முக்கியத்துவம் வழங்குவதைப் போன்று தமிழ் மொழிக்கும் வழங்கவேண்டும். இந்நாட்டில் சிங்கள மொழி மாத்திரமின்றி, தமிழ் மொழியும் தாய் மொழியாகும். எனவே, இந்நாட்டில் இரண்டு தாய் மொழிகள் காணப்படுகின்றன. அம்மொழிகளினூடாகவே சமூக மாற்றத்திற்கு வித்திட வேண்டும் என்றார்.

# பேஸ்புக் தவறாக பயன்படுத்தப்படுகிறது

facebook

## கலாநிதி பிரனீத் அபேசுந்தர

இளம் சமூகம் பேஸ்புக் மற்றும் சமூக இணையதளத்தை தவறான முறையில் பயன்படுத்துவதால் அதிகளவான பாதிப்புக்கள் ஏற்பட்டு வருகின்றன என ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் சமூக விஞ்ஞானம் மற்றும் மானிடவியல் பிரிவின் விரிவுரையாளர் கலாநிதி பிரனீத் அபேசுந்தர கூறுகின்றார்.

சமூக இணையத்தளங்களை பயன்படுத்துவது தொடர்பில் இளைஞர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியுள்ளதாகவும் கலாநிதி பிரனீத் அபேசுந்தர கூறியுள்ளார்.

இதேவேளை, உள ரீதியில் பலர் பேஸ்புக்கிற்கு அடிமையாகியுள்ளதாகவும் இளைஞர்கள் பலர் பேஸ்புக்கை பயன்படுத்துவதற்காக அதிக நேரத்தை வீண்விரயம் செய்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பேஸ்புக் சமூக இணையத் தளத்திற்கு இலங்கையில் தற்காலிகமாக தடைவிதிக்கப்பட்டுள்ளதாக போலிப் பிரசாரம் முன்னெடுக்கப்படுவதாகவும் தடை தொடர்பில், அரசாங்கத்தினால் எவ்வித தீர்மானமும் எடுக்கப்படவில்லை எனவும் அவர் மேலும் தெரிவிக்கின்றார்.

# கிழக்கு மாகாணசபை வேலைத்திட்டங்களில் எந்த இனமும் புறக்கணிக்கப்படமாட்டாது

## -முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத்-



கிழக்கு மாகாணசபையால் முன்னெடுக்கப்படும் சகலவிதமான செயற்பாடுகளிலும் சமநிலைத்தன்மை பேணப்படுவது உறுதிப்படுத்தப்படுமென கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத் தெரிவித்தார். திருகோணமலை விவேகானந்தா கல்லூரியில் நடைபெற்ற, கிழக்கு மாகாணத்தில் உள்ள 121 பாடசாலைகளுக்கு நனஸ வேலைத்திட்டத்தின் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்; கிழக்கு மாகாண சபையின் அமைச்சரவையில் தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தலைவர்கள் எவரும் இல்லையென யாரும் கவலையடைய வேண்டியதில்லை.

அரச நிறுவனங்களால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள், மாகாணசபையால் நடைமுறைப்படுத்தப்படும் வெளிநாட்டு நிதியுதவியுடனான விசேட கருத்திட்டங்கள், வேலை வாய்ப்பு உருவாக்கம், சமூக நலம் உட்பட சகல செயற்பாடுகளிலும் மாகாணத்தின் மூன்று மாவட்டங்களினதும் அனைத்து இன மக்களுக்கும் கிடைக்கப் பெறும் வகையிலேயே எமது கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் அமைந்துள்ளன.

அத்துடன், இவற்றில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறும் கடப்பாடு சமத்துவம் என்பன உறுதி செய்யப்படுவதோடு இன நல்லிணக்கம் மற்றும் துறைரீதியான சமநிலைத் தன்மையும் பேணப்படும். நிர்வாக செயற்பாடுகள் மற்றும் அபிவிருத்தி நடைமுறைகளின் ஒவ்வொரு கட்டத்திலும் இவற்றை கருத்திற்கொண்டே செயற்படுமாறு மாகாணத்தின் அரச உயர் அதிகாரிகளையும் தான் அறிவுறுத்தியுள்ளதாகவும் முதலமைச்சர் தெரிவித்தார்.

# கண் பார்வையைப் பறித்த ஸ்மார்ட் போன்



இரவு நேரங்களில் அதிகளவில் தொடர்ந்து ஸ்மார்ட் போன் பார்த்து வந்த சீன பெண்ணொருவரின் கண் பார்வை பாதிக்கப்பட்டுள்ளது.

சீனாவைச் சேர்ந்த லியூ என்ற பெண் ஒரு நாளைக்கு தொடர்ந்து 2 முதல் 3 மணிநேரம் வரை இரவில் ஸ்மார்ட் போனில் வீடியோ கேம் விளையாடி வந்துள்ளார். இதைத் தொடர்ந்து இவரது வலது கண்ணின் பார்வை சிறிது சிறிதாக மங்கி, பார்வை இழப்பு ஏற்பட்டது. லியூ இரவு நேரங்களில் தொடர்ந்து ஸ்மார்ட் போனைப் பயன்படுத்தி வந்ததால், அவருடைய வலது கண்ணின் விழித்திரையின் ஒரு பகுதி பாதிக்கப்பட்டுள்ளது என்று இவரைப் பரிசோதித்த டாக்டர் தெரிவித்துள்ளார்.

# பெண்களுக்கான விழிப்புணர்வு கருத்தரங்கு

கந்தளாய் நிருபர்

மூதூர் பிரதேச இந்துக் குருமார் சங்கத்தின் ஏற்பாட்டில் கரித்தாஸ் இலங்கை சொடக் மகளிர் அபிவிருத்திப் பிரிவின் அனுசரணையுடன் மூதூர் தெற்கு பாரதிபுரம் பாரதி முன்பள்ளி பாடசாலையில் பெண்களுக்கான விழிப்புணர்வு கருத்தரங்கு பிரதேச இந்து குருமார் சங்கத்தின் தலைவர் இ. பாஸ்கரன் குருக்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கருத்தரங்கினை திருகோணமலை கரித்தாஸ் மகளிர் அபிவிருத்திப் பிரிவின் உத்தியோகத்தர் செல்வி. சூரியா நிகழ்த்தினார்.

இக்கருத்தரங்கில், பெண்கள் வெளிநாடு செல்வதால் குடும்பத்தில் ஏற்படும் பிரச்சினைகள் பற்றி விரிவாக சுட்டிக்காட்டப்பட்டதுடன் வெளிநாடு சென்று பாதிக்கப்பட்டவர்களைக் கண்டறிவதற்கு பெண்கள் குழுவொன்றும் இக்கருத்தரங்கின் போது ஸ்தாபிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பாரதிபுரம், மேன்கமம், விதவைகள் சங்க உறுப்பினர்கள் முன்பள்ளி ஆசிரியர்கள் மற்றும் இப்பிரதேசத்திலுள்ள தமிழ், முஸ்லிம் பெண்கள் என நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டார்கள்.

# ஜம்இய்யத்துல் உலமா வவுனியா கிளையின் புதிய நிர்வாகம்

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் வவுனியா மாவட்டத்திற்குரிய பட்டாணிச்சூர், சூடுவெந்தபுலவு, செட்டிக்குளம், சாளம்பைக்குளம் ஆகிய பிரதேசக் கிளைகளினதும் வவுனியா மாவட்டக் கிளையினதும் புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இந்நிகழ்வு, அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் அஷ்ஷெய்க் எஸ்.எம். ஜுனைத் (மதனி), அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் கிளைகளுக்கான ஒருங்கிணைப்பாளர் அஷ்ஷெய்க் ஏ.சி.எம். பாழில், அஷ்ஷெய்க் அப்துல் வஹ்ஹாப் ஆகியோர் உள்ளடங்கிய குழுவின் மேற்பார்வையின் கீழ் வவுனியா நகரப் பள்ளிவாசலில் நடைபெற்றது. இதன்போது பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்: அஷ்ஷெய்க் என்.பி. ஜுனைத் (மதனி) B.A

செயலாளர்: அஷ்ஷெய்க் எஸ்.எம். ஷிப்லி (மீஸானி) B.A

பொருளாளர்: அஷ்ஷெய்க் எம். நவ்பான் (தப்லீகி)

உப தலைவர்கள்: அஷ்ஷெய்க் எஸ்.எச். தாஹிர் (ஹாமி) B.A

அஷ்ஷெய்க் எம்.எம். மஹ்ரூப் (நத்வி)

உப செயலாளர்: அஷ்ஷெய்க் எஸ்.எம். நஸீர் (ஷரபி)

உறுப்பினர்கள்: அஷ்ஷெய்க் எஸ்.எம்.ஏ. மஜீத் (காஸிமி), அஷ்ஷெய்க் எம்.எப். சாதிகீன் (பாரி), அஷ்ஷெய்க் ரி.எஸ். சாஜித் (காஸிமி) BA, அஷ்ஷெய்க் எம்.எம். அஸ்கர்தீன் (மனாரி), அஷ்ஷெய்க் எம்.எஸ். ஜெஸ்மின் (நஜாஹி), அஷ்ஷெய்க் கே. நபீஸ் (நஜாஹி).





ஹெம்மாதகம அல் அஸ்ஹர் கல்லூரியில் தரம் 12 இல் கல்வி கற்கும் மாணவியான பஸ்ரா பரீட் எழுதிய "பிரிவின் துயரினிலே" என்ற நூல் வெளியீட்டு விழா கல்லூரி அதிபர் நிஸ்தார் தலைமையில் கல்லூரி கேட்போர்கூடத்தில் இடம்பெற்றது. பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட இலங்கை ஊடகத் துறைக்கான குறைகேள் அதிகாரி எம்.ஏ. அமீர் ஹுஸைன் பிரதியை பெற்றுக் கொள்வதையும் நிகழ்வில் கலந்து கொண்டோரையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துறவறமா நாடாளுமன்ற பதவியா ரத்ன தேரர் என்ன செய்யப் போகிறார்?



இலங்கையின் முக்கிய பௌத்த பீட பிரிவான அமரபுர சிறீ சத்தம்ம வங்ஷிக பௌத்த பீடத்திற்குரிய பௌத்த பிக்குகள் அரசியலில் ஈடுபடுவதற்கு தடைவிதித்து அண்மையில் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வந்தது. இந்த தீர்மானம் காரணமாக ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினரும் சம்மந்தப்பட்ட பௌத்த பீடத்தின் பிக்குவுமான அத்துரலியே ரத்ன தேரருக்கு துறவறமா அல்லது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியா என்ற இரண்டில் ஒன்றை தெரிவு செய்யும் இக்கட்டான நிலைமை ஏற்பட்டுள்ளது.

குறித்த தீர்மானத்தை அடுத்து அமரபுர பீடத்தின் பிக்குவான அத்துரலியே ரத்ன தேரர் தொடர்பில் எடுக்கப்போகும் நடவடிக்கை குறித்து கருத்து வெளியிட்ட அந்த பீடத்தின் மாநாயக்கர் சீல விசுத்தி தேரர், அத்துரலியே ரத்ன தேரர் எமது பீடத்தில் இருந்து விலகி வேறு சிலரை இணைத்துக் கொண்டு தனியான பௌத்த பீடமாக செயற்பட புத்தசாசன அமைச்சிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

எனினும் புத்தசாசன அமைச்சு அதற்கு அனுமதி வழங்கவில்லை. இதனால் அத்துரலியே ரத்ன தேரர் எமது பௌத்த பீடத்தின் பிக்கு அல்ல என்றே என்னால் கூற முடியும். எம்முடன் மீண்டும் இணைய வேண்டுமானால் அவர் அரசியல் நடவடிக்கைகளை கை விட வேண்டிய நிலைமை ஏற்படும்.

இவ்வாறான நிலைமையில் அத்துரலியே ரத்ன தேரரின் பௌத்த பிக்கு என்ற அடையாளம் பாரதூரமான நெருக்கடிக்குள் சிக்கியுள்ளது.

# உலகிலுள்ள எல்லா மக்களுக்கும் இலவச இண்டர் நெட் சேவை




உலகிலுள்ள எல்லா மக்களுக்கும் விரைவில் இணையதள சேவை இலவசமாகக் கிடைக்க இருக்கிறது.

அவுட்டர் நெட் என்று பெயரிடப்பட்டுள்ள இத்திட்டத்தின் மூலம், விண்வெளியில் இருந்து சட்லைட் 'வை ஃபை' வழியாக உலகிலுள்ள எல்லாக் கணினியிலும் ஸ்மார்ட் தொலைபேசிகளிலும் இணையதள சேவை இலவசமாகக் கிடைக்கச் செய்யவேண்டும் என்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

நியூயோர்க்கைத் தலைமையகமாகக் கொண்ட மீடியா டெவலப்மெண்ட் இன்வெஸ்ட்மெண்ட் ஃபண்ட் எனும் புகழ்பெற்ற நிறுவனமே இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த இருக்கிறது.

2013 செப்டெம்பரில் இதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் 2015 ஜூனுக்குள் இது நடைமுறைக்கு வரலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

# சிங்கள ராவயவை எதிர்த்து ஹனீபா (மதனி) முறைப்பாடு



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அக்கரைப்பற்று மாநகரசபை உறுப்பினர் எஸ்.எல்.எம். ஹனீபா (மதனி) அவர்களினால் கடும்போக்கு சிங்கள ராவய அமைப்புக்கு எதிராக அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அவரது முறைப்பாட்டில், சிறுபான்மை முஸ்லிம்களின் உரிமைகளுக்கு எதிரான சிங்கள ராவயவின் நடவடிக்கைகளுக்கு எதிராக பொலிஸார் சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது.

அம்முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; மாடறுப்பதை அரசாங்கம் உடனடியாக தடைசெய்ய வேண்டும் என்றும் அப்படி தடைசெய்யாது விட்டால், சிங்கள ராவய அமைப்பிலுள்ளவர்கள் தமக்குத்தாமே தீவைத்து தற்கொலை செய்து கொள்வார்கள் எனவும் தெரிவித்திருந்தனர். மேலும், இந்த நாட்டிலுள்ள முஸ்லிம் சமூகத்தினை இஸ்லாமியப் பயங்கரவாதிகள் எனவும் சிங்கள ராவய அமைப்பின் தலைவர் அக்மீமன தயாரத்ன கூறியிருந்தார்.

அக்மீமன தயாரத்ன தேரர், குறித்த கூற்றினூடாக நமது நாட்டின் நடைமுறையிலுள்ள இலங்கை தண்டனை சட்டக் கோவையின் பிரிவுகளான: 291 (ஆ), 300, 301, 485 ஆகியவற்றின் படி குற்றங்களைப் புரிந்துள்ளார்.

இதேவேளை, சிங்கள ராவய அமைப்பினர் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட நீதிமன்றத்தால் தடை விதிக்கப்பட்டிருந்த நிலையிலேயே கொழும்பு புறக்கோட்டை புகையிரத நிலையத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்திலும் சத்தியாக்கிரக நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருந்தனர்.

இவர்களின் இந்த நடவடிக்கைகள், நமது நாட்டின் மதிப்புக்குரிய நீதித்துறையை அவமதிக்கும் செயற்பாடுகளாகும்.

மேலும், அமைதிக்குப் பங்கம் ஏற்படுத்தும் வகையிலும் முஸ்லிம் சமூகத்தின் சமய உணர்வுகளை பாதிக்கும் வகையிலும் மனக்கிலேசத்தை ஏற்படுத்தும் வகையிலும் இந்த அமைப்பு நடந்து வருகிறது. இவையனைத்தும் சட்டத்தின்படி குற்றச் செயல்களாகும்.

மனித உயிர்களை தீக்குளிக்கச் செய்து தற்கொலை புரியத் தூண்டுவதென்பது பௌத்த தர்மத்துக்கு மட்டுமன்றி, நாட்டின் சட்டத்துக்கும் எதிரான செயற்பாடாகும். ஆகவே, இவ்வாறு சட்டம், ஒழுங்கு, நீதித்துறை, மனித நாகரிகம் மற்றும் பௌத்த தர்மம் போன்றவற்றை பகிரங்கமாக மீறிச் செயற்படும் சிங்கள ராவய அமைப்பின் தலைவரையும் இந்த செயற்பாடுகளுடன் தொடர்புடைய அவ்வமைப்பின் நபர்களையும் கைதுசெய்து, சட்ட நடவடிக்கை எடுக்குமாறு வினயமாக கேட்டுக்கொள்கின்றேன்.

## உலகிலேயே மிகப்பெரிய தாவரவியல் பூங்கா சவூதி ரியாத் நகரில் நிர்மாணம்



உலகிலேயே மிகப்பெரிய தாவரவியல் பூங்காவை சவூதி அரேபிய தலைநகர் ரியாத்தில் உருவாக்க இருப்பதாக சவூதி அரசு உத்தியோகபூர்வமாக தகவல் வெளியிட்டுள்ளது.

21 ஆம் நூற்றாண்டில் அதிநவீன முறையிலான கட்டிடக் கலையுடன்கூடிய ஆராய்ச்சி கூடங்கள், அலுவலக விடுதிகள், கடைகள், உணவகங்கள், பார்வையாளர்களுக்கான வசதிகள் மற்றும் காட்சி தியேட்டர்கள் என பல்வேறுபட்ட வசதிகளை உள்ளடக்கியதாக இப்பூங்கா அமைக்கப்படவுள்ளது.

இதற்கு, மன்னர் அப்துல்லாஹ் சர்வதேச பூங்காவனம் என பெயர் சூட்டப்பட்டுள்ளதுடன், இதற்கான அடிக்கல் நடும் விழா இடம்பெற்றுள்ளதாகவும் உலகிலேயே மிகப் பெரிய பூங்காவாக இது அமையும் எனவும் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

# களனி பல்கலைக்கழகத்தில் அஷ்ஷிபா நிகழ்வு

களனி பல்கலைக்கழகத்தின் ராகமை வைத்திய பீடத்தின் முஸ்லிம் மஜ்லிஸின் ஏற்பாட்டில் வருடாந்தம் நடத்தப்பட்டுவரும் அஷ்ஷிபா நிகழ்வு பல்கலைக்கழக பிரதான கேட்போர் கூடத்தில் மஜ்லிஸ் தலைவர் வைத்தியபீட மாணவன் எம்.ஐ. நூருல் இர்ஷாத் தலைமையில் இடம்பெற்றது.

பல்கலைக்கழகத்திற்கு புதிதாக நுழைந்த மாணவர்களுக்கான வரவேற்பு, இவ்வருடம் வெளியாகின்ற மாணவர்களுக்கான விடைபெறுகை ஆகியன வைபவமாக இடம் பெற்ற இந்நிகழ்வில், பிரதம அதி தியாக ஜம்இய்யதுஷ் ஷபாப் நிறுவனத்தின் பிரதி பணிப்பாளர் அல் ஹாஜ் தாஸிம் மௌலவி கலந்து கொண்டதோடு, ADRT நிறுவனத் தின் செயற்திட்ட முகாமையாளர் அஷ்ஷெய்க் A.J.M ஸிஹான் (நளீமி) சிறப்புரையாற்றினார்.

# முஸ்லிம் எய்ட் இனால் 31 வீடுகள் நிர்மாணம்




முஸ்லிம் எய்ட் இனால் 31 நிரந்தர வீடுகளை முசலி பொற்கேணி கிராமத்தில் அமைப்பதற்கான அடிக்கல் நடும் வைபவம் ஒன்று நடைபெற்றது. பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக்குழுவின் தலைவருமான ஹுனைஸ் பாரூக் அடிக்கல் நட்டு நிகழ்வினை ஆரம்பித்து வைத்தார். முசலி பிரதேச செயலாளர் எஸ். கேதீஸ்வரன், பிரதேச சபை செயலாளர் திரு. அல்போன்ஸ், முஸ்லிம் எய்ட் சிறீலங்கா பணிப்பாளர் ஜனாப் பைசர் கான் ஆகியோர் விசேட பிரமுகர்களாக இந்நிகழ்விற்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

கடந்தகால யுத்தத்தினால் கடுமையாகப் பாதிக்கட்டு, தமது வாழ்விடங்களை விட்டு வெளியேற்றப்பட்ட சமூகங்களில் முசலி பிரதேச மக்களும் அடங்குவர். இவர்கள் பல்வேறு பிரதேசங்களில் தற்காலிகமாக குடியமர்ந்து அண்மைக்காலமாக தமது பாரம்பரிய கிராமங்களுக்கு மீளத் திரும்பி வருகின்றனர். வதிவிடங்கள், வாழ்வாதாரங்கள் மற்றும் பல்வேறு உள்ளகக் கட்டுமாணங்களும் அழிக்கப்பட்ட நிலையிலுள்ள பொற்கேணி கிராமத்தில் பாதிக்கப்பட்டு மீளக் குடியேறியுள்ள 31 குடும்பங்களுக்கான நிரந்தர வீடுகளை அமைக்கும் கருத்திட்டம் முஸ்லிம் எய்ட் நிறுவனத்தினால் முன்னெடுக்கப் படவுள்ளது. பிரதேச செயலாளர் மற்றும் சமூகத் தலைவர்களுடன் கலந்துரையாடி பயனாளிகள் அடையாளம் காணப்பட்ட பின்னர் இவ்வீட்டுத் திட்டம் ஆரம்பிக்கப்படுகின்றது.

# AumsA வினை வலுவூட்டும் நிகழ்ச்சித்திட்டம்

2012 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட அனைத்து பல்கலைக் கழக முஸ்லிம் மாணவர் ஒன்றியமான AumsA பல்கலைக்கழக மாணவர்களின் குரலாக ஒரு தசாப்த காலத்தை பூர்த்தி செய்துள்ளதை முன்னிட்டு, அதனது செயற்றிறனை அதிகரிக்கும் முகமாக பணி மீளாய்வொன்றை செய்ய விருப்பதாக அறிவித்துள்ளது.

சமூக, பொருளாதார, கலாசார, அரசியல் சூழலுக்கேற்ப தனது பணிகளை வலுவூட்டுவதற்காகவும் AumsA தொடர்பான பல்கலைக்கழக மாணவ சமூகத்தின் எதிர்பார்ப்புகளை கருத்திற்கொண்டுமே புதிய மறுசீரமைப்பு மேற்கொள்ளப்படவுள்ளதாக அவ்வமைப்பு தெரிவித்துள்ளது.

அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற AumsA வினை வலுவூட்டுவதற்கான மூலோபாயத் திட்டமிடல் பற்றிய முழு நாள் கலந்துரையாடலில், AumsA வின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர்கள், பழைய நிருவாகக்குழு அங்கத்தவர்கள் பல்கலைக்கழக மாணவர்கள் கலந்துகொண்டனர். இக்கலந்துரையாடலின் ஒரு முடிவாகவே AumsA வினை வலுவூட்டுவதற்கான முன்மொழிவுகளையும் ஆலோசனைகளையும் உத்தியோகபூர்வமாக பெற்றுக் கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது. எனவே AumsA வினை வலுவூட்டுவது தொடர்பிலான உங்கள் கருத்துக்களை aumsaresearch@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு 2014.03.15 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பிவைக்குமாறு அவ்வமைப்பு வேண்டிக் கொண்டுள்ளது.



கொழும்பு கம்பன் கழகம் நடத்திய 2014 ஆம் ஆண்டுக்கான அமரர் பொன். பாலசுந்தரம் ஞாபகார்த்த மேற்பிரிவு திறந்தமட்ட கவிதைப் போட்டியில், கவிதாயினி தியத்தலாவ எச்.எப். ரிஸ்னா இரண்டாம் இடம் பெற்றமைக்காக வெள்ளிப்பதக்கமும் சான்றிதழும் வழங்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் தேசம்
மலர் : 13 இதழ் : 05 மார்ச் 01 - 14

77, ஸ்ரீ வஜிரஞான மாவத்தை, கொழும்பு– 09, இலங்கை
தொலைபேசி: 0112 698771 / 0777 412561, பெக்ஸ்: 0112 686030,
மின்னஞ்சல்: engalthesamnews@gmail.com

# இந்திய எதிர்ப்புகளை மூட்டை கட்டிவிட்டு நல்லுறவைப் பேணுவதே இலங்கைக்கு உகந்தது

மார்ச் மாதம் அமெரிக்கா மற்றும் பிரித்தானிய நாடுகளின் முன்னெடுப்புகளுடன் ஜெனீவா மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்படவுள்ள பிரேரணையை ஆதரிப்பதா, எதிர்ப்பதா? என்பது பற்றி இந்தியா இதுவரை எவ்விதத் துலக்கங்களையும் வெளியிடவில்லை. 2013 ஆம் ஆண்டு மசோதாவுக்கு இந்தியா ஆதரவு அளித்தமையால் இம்முறையும் கட்டாயமாக அதே நிலைப்பாட்டையே எடுக்கும் என்று நிமல்கா பெனாண்டோ ஓர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். அமெரிக்கப் பிரேரணையின் உள்ளடக்கத்தை பொறுத்தே தமது ஆதரவு தீர்மானிக்கப்படும் என்று இந்தியா தெரிவித்துள்ளதாக ஊடகங்கள் கூறின. 2013 இலும் அமெரிக்கா இந்தியாவின் ஆதரவைப் பெறுவதற்காக உள்ளடக்க வசனத்தில் சிறிய திருத்தம் கொண்டு வந்தமையும் குறிப்பிடத்தக்கது. 1983 இல் கொழும்பில் தமிழ் மக்கள் தாக்கப்பட்டமை, அவர்களது உரிமைகள் அழிக்கப்பட்டமை, தொடர்பிலும் இந்தியா 1984 அமர்வில் இலங்கைக்கு எதிரான ஒரு பிரேரணையைக் கொண்டுவர முயற்சித்தமையும் இங்கு நினைவுபடுத்தத்தக்கவை.

இலங்கை குறித்த சர்வதேச விசாரணை வேண்டும் என்ற அமெரிக்காவின் மசோதாவுக்கு ஆதரவு வழங்கும் நிலையிலே இந்தியா காணப்படுகிறது என இங்கிலாந்தின் டெலிகிராப் பத்திரிகை ஒரு செய்தியை வெளியிட்டுள்ளது. நாட்டுக்கெதிராக பாரிய அச்சுறுத்தலுடன் கூடிய சர்வதேச அழுத்தம் அதிகரித்து வரும் வேளையில் இலங்கை அரசாங்கம் அதனைச் சாட்டாக வைத்து மாகாணசபைகளை வென்றெடுக்கும் முயற்சியில் ஈடுபடும்போது தமிழ்நாட்டு வாக்குகளில் குறிவைத்து இந்தியாவும் ஜெனீவா பற்றிய தீர்மானத்தை எடுப்பதில் பிழை இருப்பதாகக் கூறமுடியாது. தமிழ்நாட்டின் இரு முக்கிய அரசியல் கட்சிகளான தி.மு.க, அ.தி.மு.க ஆகியன இலங்கைத் தமிழர் விடயத்தில் ஜெனீவாவில் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்படும் பிரேரணை சமமான நிலைப்பாட்டைக் கொண்டுள்ள நிலையில், இந்தியாவும் இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது என்பதையும் மறுப்பதற்கில்லை.

2009 யுத்த வெற்றியுடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தியப் பிரதமருக்கு அளித்த வாக்குறுதியில் 13 ப்ளஸ் தீர்வுத்திட்டம் பற்றி குறிப்பிட்டிருந்தார். இந்தியப் பாணியிலான அதிகாரப் பரவலாக்கம் 13 ஐ முழுமையாக அமுல் நடத்துவதுடன் அதற்கப்பாலும் அதிகார பகிர்வு செய்தல் போன்ற விடயங்களில் இரு நாட்டுத் தலைவர்களும் இணக்கப்பாடு தெரிவித்திருந்தனர். ஆனால், அந்த வாக்குறுதியை இலங்கை மீறியுள்ளமை குறித்த அதிருப்தியும் இந்தியாவுக்கு உண்டு. இந்தியாவை இலங்கைக்கு எதிரான பிரேரணையின் பங்குதாரராக மற்றும் முயற்சியும் தமிழ்நாட்டுக்கு கட்சிகளால் முன்னெடுக்கப்படும் நிலையில் சர்வதேச சதி என்பதற்கு அப்பால் இந்தியாவின் நிலைப்பாடு இலங்கைக்கு எதிரான மசோதாவின் முக்கிய காரணியாக அமைவதும் தவிர்க்க முடியாதது. இந்தியாவின் வற்புறுத்தலின் பேரில் நடத்தப்பட்ட வட மாகாணசபைத் தேர்தலில் வெற்றிபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டமைப்பு இந்தியாவுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுவருவதும் இலங்கை வட மாகாணசபையை நடத்துவது தொடர்பாக இந்தியா அதிருப்தியடைந்துள்ள விடயமும்கூட இங்கு குறிப்பிடப்பட வேண்டியதே.

இலங்கையில் நிலவும் முதலீட்டு வாய்ப்பும் இந்தியாவின் போட்டி நாடான சீனாவுக்கு வழங்கப்படுவது குறித்தும் இந்தியாவின் அதிருப்தி அடிக்கடி வெளிப்பட்டுள்ளது. அது அமெரிக்காவையும் இந்தியாவையும் நெருங்கிப் பணியாற்றும் நிலைக்குத் தள்ளிவிட்டுள்ளது என்றும் கூறலாம். இந்திய- இலங்கை மீனவர் பிரச்சினையும் பல தடவை பேசி தீர்க்கப்பட்டதாகக் கூறப்பட்டாலும் தொடர்ந்தும் ஒன்றுக்கொன்று செய்யும் விவகாரமாகத்தான் காணப்படுகின்றது. ஜே. ஆர். ஜயவர்தன அமெரிக்காவை நம்பி இந்தியாவைப் புறக்கணித்தமைக்காக இந்தியா ஆகாயமார்க்கமாக உணவுப் பொதிகளை இலங்கையில் தூவி அதிர்ச்சி வைத்தியம் செய்தமையும் நினைவுபடுத்தப்பட வேண்டியதே. இந்தியாவுக்கு எதிராக உலகின் எந்த நாடும் இலங்கைக்கு உதவ முன்வருமா என்பது கேள்விக்குறியே. எப்படியும் இந்திய எதிர்ப்புகளை மூட்டைகட்டி வைத்துவிட்டு எவ்வாறு நல்லுறவை வளர்ப்பது, பேணுவது என்பது பற்றிக் கருத்தூன்றிச் சிந்திப்பதே இலங்கைக்கு உகந்தது என்பதை தயக்கமின்றிக் கூறலாம்.




## சொல் வெட்டு



■ தமிழக அரசியல்வாதிகள் இலங்கை விடயத்தை உதைப்பந்தாக மாற்றியுள்ளனர்.

–அமைச்சர் சம்பிக்க ரணவக்க

கோள் போடுவாங்களா?




■ பொதுபல சேனாவுக்குள் பிளவு; நீக்கப்பட்ட பிக்குகள் எச்சரிக்கை.

–செய்தி

துள்ளுர மாடு பொதி சுமக்குமுண்ணு சும்மாவா சொன்னாங்க?



■ குறுகிய காலத்தில் பல அபிவிருத்திகளை செய்துவிட்டு அரசியலிருந்து விலகிவிடுவேன்.

–விநாயகமூர்த்தி முரளிதரன்

நீங்க பிரிஞ்ச நோக்கம் இன்னும் நிறைவேறல்லியே சார்...



■ எவர், எந்த வகையில் சர்வதேச விசாரணைக்கு தள்ளிவிட முயற்சித்தாலும் ஜனாதிபதியின் தீர்க்கதரிசனமான அரசியல் நகர்த்தல்களால் அவை தவிடுபொடியாகி விடும்.

–அமைச்சர் வாசுதேவ நாணயக்கார

சும்மாவா, தண்ணிக்குள்ளால நெருப்புக் கொண்டுபோற மனிசர்.



■ ஜயலலிதாவைப் போலவே இலங்கையில் விக்னேஷ்வரன் செயற்படுகிறார்.

–தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம்

காய்க்கிர மரத்துக்குத்தாணே கல்லெறியும் பொல்லெறியும்.




■ புதையல் தோண்டிக் கொண்டிருந்த தேரர், பூசாரி உற்பட நான்கு பேர் கைது.

–செய்தி

தனித்துவ சிறைச்சாலைக்கும் ஆக்கங்கள் தேவதான்!



■ பௌத்தர்களின் உரிமை மட்டுமல்ல, தமிழர்களின் உரிமைகளை பாதுகாக்கவும் செயற்பட்டு வருகிறோம்.

–பொதுபலசேனா–

புதையல் தோண்ட பூதம் புறப்பட்ட கததான்

**எங்கள் தேசம் சந்தா விபரம்**

உள்நாடு
தனிப்பிரதி: 30.00
வருட சந்தா: 1200.00
ஆறு மாதங்கள்: 600.00

வெளிநாடு
இந்தியா, பாகிஸ்தான், மாலைதீவு, மலேஷியா, சிங்கப்பூர்:3600.00
மத்திய கிழக்கு நாடுகள்: 3750.00
அவுஸ்திரேலியா, தென்கொரியா: 4700.00
இங்கிலாந்து: 5750.00, அமெரிக்கா, கனடா: 6900.00, ஜப்பான்: 4800.00

எங்கள் தேசத்துக்கு காசுக்கட்டளை அனுப்ப விரும்புபவர்கள்: காசுக்கட்டளை பெறுவோர், Engal Thesam, தபால் நிலையம் Dematagoda எனவும் குறிப்பிட்டு அனுப்பவும். முகவரி: 77, Dematagoda Road, Colombo - 09.
Accont Name: SLJEI | Bank Account No. BOC: 372132 | Commercial Bank: 1320009182
தொடர்புகளுக்கு: 077 2992220

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார தடையைவிட மாகாண வெற்றியை பொருட்டாகப் பார்க்கும் அரசாங்கம்

மூனா ஹானா

நாடு ஓர் இக்கட்டான நிலையை எதிர்கொண்டுள்ள இவ்வேளையில் அரசாங்கமும் எதிர்க்கட்சியும் நடந்துகொள்ளும் விதம் ஆச்சரியமாக இல்லையா? மாகாணசபைத் தேர்தலை வென்றெடுத்தால் எல்லாம் சரி என்ற மனப்பாங்கில் செயலாற்றுவதைப் பார்க்க முடிகிறதல்லவா? செயற்கையாக மாகாணசபைகளைக் கலைத்துவிட்டு மனித உரிமைப் பேரவை அமர்வின் வாக்கெடுப்பு நடைபெறும் தினத்தை அண்டியதாக தேர்தல் தினத்தைத் தீர்மானித்துள்ளமையை எவ்வாறு நோக்குவது. பிரபாகரனைக் கொன்று நாட்டை மீட்டெடுத்த தலைவருக்கு எதிராக மேலை நாடுகள் சதி செய்கின்றன. அதனைத் தோற்கடிக்க தலைவரை நாம் பலப்படுத்த வேண்டும். அதற்கு ஒரேவழி மாகாணசபைகளில் அரசை வெல்லவைப்பதே என்ற போலியான நாட்டுப்பற்றை உருவாக்கி குழம்பிய குட்டையில் மீன் பிடிப்பதுபோன்று வாக்குகளை அள்ளிக்கொள்ளும் பணியில் மும்முரமாக ஈடுபட்டுள்ள அரசாங்கத்தின் செயலை உண்மையில் தேசப்பற்றுள்ள செயலாக கருத முடியுமா?

சர்வதேச நெருக்கடியை எதிர்கொள்ளும் வகையில் மக்களைத் தயார்படுத்தும் உண்மைப் பிரசாரம் தேர்தல் மேடைகளில் செய்யப்படுகின்றதா என்றால் இல்லை, என்பதே பதில். சர்வதேச நெருக்கடிகளின் கீழ் மக்கள் வாயை, வயிற்றைக் கட்டி வாழவேண்டி வரும் என்றோ, எதிர்காலத்தில் இலங்கை கிரிக்கட் அணி உள்நாட்டில் கிரிக்கட் விளையாடுவதுடன் மட்டும் நின்றுவிடுவதை நாம் பார்க்க முடியுமான நிலை வரலாம் என்பது பற்றியெல்லாம் மக்களின் கவனத்துக்கு கொண்டு வரப்படுவதாகத் தெரியவில்லை. 30 வருட யுத்த காலத்தில் வட பகுதி மக்கள் அனுபவித்த தடைகளை நாடும் அனுபவிக்க வேண்டி வரலாம். அதற்குத் தயார் என்றால் இந்த தேர்தலை அதற்கோர் ஒப்பம் கோடலாக, கருத்துக்கணிப்பாக பயன்படுத்துங்கள் என்று வாக்காளரிடம் கேட்கப்படுகின்றதா?

அரசாங்கம் உண்மையை விளக்கத் தவறியிருப்பின் எதிர்க்கட்சிகள் அதனைச் செய்திருக்கலாம். அவர்கள் மாகாணசபை உறுப்பினர் பதவிகளில் தொங்கிக்கொண்டு அரசை மாற்றும் கனவுகளில் மிதக்கின்றனரேயன்றி உண்மையின் பக்கம் சாயவில்லை. நாடு எதிர்கொண்டுள்ள உண்மையான நிலையை அவர்கள் மக்களுக்குச் சொல்லவில்லை. அவர்கள் இத்தேர்தலைப் பகிஷ்கரித்து நாட்டின் இக்கட்டான நிலையைப் பிரகடனப் படுத்தியிருக்கலாம். அல்லது நிலைமையை மக்களுக்கு விளக்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்திருக்கலாம். தேசியப் பத்திரிகைகளும் நாடு எதிர்கொண்டுள்ள அனர்த்தம் பற்றி அலட்டிக்கொண்டதாகத் தெரியவில்லை. சமய பீடங்களும் சமயத் தலைவர்களும்கூட உண்மையை உணர்ந்து அரசாங்கத்துக்கு ஆலோசனை கூறியதாகத் தெரியவில்லை. ஐ.நா. சபைக்கோ, நவநீதம்பிள்ளைக்கோ அல்லது அமெரிக்காவுக்கோ எதிர்ப்பு தெரிவிப்பதால் பயனேதும் ஏற்படப்போவதில்லை. இப்போதுகூட ஜெனீவாவை திருப்திபடுத்தும் ஒரு பொறிமுறை பற்றி ஆராயலாம். ஆனால், மாகாணசபையின் வெற்றியை நாட்டின் பொருளாதாரத் தடையை விட முக்கியமாகப் பார்க்கும் அரசு இது பற்றிச் சிந்திக்கப் போவதில்லை.



# முஸ்லிம் காங்கிரஸ் VS அரசாங்கம்

## ஆட்டம் தொடங்குகிறது

ஏ. முஹம்மத் பாயிஸ்

மார்ச் மாதம் 23 ஆம் திகதி ஐ.நா. மனித உரிமை மாநாட்டில் இலங்கை எதிர் கொள்ளப் போகும் நெருக்கடி குறித்த விடயமே முக்கிய பேசுபொருளாக ஊட கங்களில் இடம்பிடித்திருக்கிறது. ஜெனீவா மாநாட்டில் நவநீதம்பிள்ளையால் முன் வைக்கப்படவுள்ள 74 பக்கங்களைக் கொண்ட அறிக்கை இலங்கை அரசுக்கு பல்வேறு அழுத்தங்களைக் கொடுத்துள்ளது.

இலங்கை அரசினால் மீறப்பட்ட தாகக் கூறப்படும் மனித உரிமை மற்றும் யுத்தக் குற்றம் போன்ற விடயங்களைக் கொண்ட அவ்வறிக்கையில் நவநீதம் பிள்ளை இலங்கை வந்தபோது அவரிடம் முஸ்லிம் காங்கிரஸினால் கையளிக்கப் பட்ட அறிக்கையும் உள்ளடக்கப்பட்டுள் ளது. இவ்வறிக்கையில் இலங்கையில் முஸ்லிம் மக்கள் பாதிக்கப்பட்ட விபரங் கள் மற்றும் அண்மைக்காலமாக முஸ்லிம் களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட இன வாதச் செயற்பாடுகள் என்பன குறிப்பிடப் பட்டுள்ளன. இவ்வறிக்கை சமர்ப்பித்தலை யடுத்து அரசுக்கும் காங்கிரஸுக்கும் இடையில் முரண்பாடுகள் தலைதூக்கி யுள்ளன. அமைச்சர் விமல் வீரவன்ஸ காங்கிரஸின் இச்செயற்பாட்டை வன் மையாக கண்டித்திருந்தார்.

முஸ்லிம் காங்கிரஸின் இந்த அறிக்கை சமர்ப்பிப்பானது இலங்கை அரசு எதிர் கொள்ளும் பிரச்சினைக்கு தூபமிடுவ தாகவே அமைந்துள்ளது. கடந்த ஆண்டு களில் ஜெனீவா மனித உரிமை மாநாடு களின் போது இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்பட்ட தீர்மானங்களுக்கு எதிராக மனித உரிமை ஆணைக்குழுவில் அங்கம் வகிக்கும் பெரும்பாலான முஸ்லிம் நாடுகள் வாக்களித்திருந்தன. ஆனால், காங்கிரஸின் இவ்வறிக்கை முஸ்லிம் நாடு களின் வாக்களிப்பில் மாற்றத்தைக் கொண்டுவரலாம் எனவும் எதிர்பார்க்கப் படுகிறது. அத்தோடு ஜெனீவா மாநாட்டில் சவூதி அரேபியா மற்றும் குவைத் ஆகிய



நாடுகள் இலங்கைக்கு எதிராக வாக்களிக் கப் போவதாக அறிவித்துள்ளமையும் குறிப் பிடத்தக்கது.

இந்நிலையில் காங்கிரஸ் கையளித்த அவ் அறிக்கையை ஒட்டி அமைச்சர் பஷீர் சேகுதாவூத் முஸ்லிம்களின் பிரச்சினைகள் உள்நாட்டிலேயே தீர்க்கப்பட வேண்டு மெனவும் சர்வதேசமயப்படுத்தப்பட வேண்டியதன் அவசியம் எழவில்லை யெனவும் அறிக்கை வெளியிட்டிருந்தார். இவரின் அறிக்கை தொடர்பில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸைச் சேர்ந்த வன்னிமாவட்ட பாராளுமன்ற உருப்பினர் ஹுசைன் பாரூக்: வடபுலத்திலிருந்து வெளி யேற்றப்பட்ட முஸ்லிம்களின் பிரச்சினைகள் சர்வதேச மயப்படுத்தப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டு வரும் இச்சந்தர்ப்பத் தில் அமைச்சரின் இவ்வறிக்கையானது வடபுல முஸ்லிம்களின் அபிலாஷைகளை யும் ஆசைகளையும் கொச்சைப்படுத்துவ தாக உள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் மூன்று தசாப்தங்களாக நடைபெற்ற உள்நாட்டுப் போரில் தமிழ் மக்களே பாதிக்கப்பட்டுள்ளனர் என்ற மாயை சர்வதேசரீதியாக தோற்றுவிக்கப் பட்டுள்ளது. இதனால், சர்வதேசத்தின் உதவிக்கரங்கள் அவர்களை நோக்கிய தாகவே அதிகளவில் நகர்த்தப்படுகின்றன. ஆனால், 1990 ஆம் ஆண்டு வெளியேற் றப்பட்டு சுமார் 23 வருடங்களுக்கு மேலாக அகதி முகாம்களில் வாழும் வடக்கு முஸ்லிம்கள் மற்றும் யுத்தத்தால் பாதிப்புக் குள்ளான கிழக்கு முஸ்லிம்கள் தொடர் பில் சர்வதேசத்தின் உதவி போதியளவில் கிட்டுவதாகத் தெரியவில்லை. முஸ்லிம் களின் பிரச்சினைகள் சர்வதேசப்படுத்தாத தால் இவர்கள் பின்னடைவை எதிர்நோக்கி யுள்ளனர். அமைச்சர் பஷீர் சேகுதாவுதின் இவ்வறிக்கை ஒரு தலைப்பட்சமானதும் அரசியல் நோக்குடையதும் என்பதையே சுட்டிக் காட்டுகிறது.

ஜெனீவா மாநாட்டில் அரசு எதிர் கொள்ளவுள்ள விடயம் தொடர்பில் காங்கிரஸின் செயலாளர் ஹஸன் அலி: இணக்கப்பாட்டின் ஊடாக எமது சமூ கத்தை முன்னெடுத்துச் செல்லவே முயற் சிக்கிறோம். நாம் அரசாங்கத்தின் கை பொம்மைகளோ, வாய்மூடி வேலை செய்ப வர்களோ அல்ல. இலங்கையில் இடம் பெறும் முஸ்லிம் சமூகத்திற்கு எதிரான அடக்குமுறைகள் தொடருமாயின் ஜெனீ வாவில் இலங்கை அரசாங்கம் முஸ்லிம் நாடுகளின் பெரும்பான்மையை இழந்து விடும் நிலை ஏற்படும். இன்றுள்ள நிலையில் அரசாங்கம் சரியான தீர்வை எடுக்க வேண்டும் என்ற வேண்டுகோளையும் விடுத்துள்ளார்.

இம்மாதம் 29 ஆம் திகதி நடைபெற வுள்ள தென், மேல் மாகாணசபைத் தேர்தலை ஜெனீவா மாநாட்டை குறிவைத்தே அரசு நடத்துகிறது. யுத்தத்தை வென்றெடுத்த ஜனாதிபதியின் கரத்தைப் பலப்படுத்த வேண்டும், இலங்கைக்கு எதிரான சர்வ தேசத்தின் சதிகளை முறியடிக்க வேண் டும் என்பதே ஆளுங்கட்சியின் பிரச்சார மாக உள்ளது. அதேநேரத்தில் அரசின் சார்பாகப் போட்டியிடும் முஸ்லிம் வேட் பாளர்கள் மற்றும் முஸ்லிம் அமைச்சர் களின் பிரச்சாரம் முழுவதும் முஸ்லிம் காங்கிரஸை வம்புக்கிழுப்பதாகவும் காங்கி ரஸின் பிரச்சாரம் வழமை போன்று அர சாங்கத்தை தூற்றுவதாகவும் அமைந்துள் ளன. வழமை போன்று முஸ்லிம்களை ஆக்ரோசப்படுத்தி வாக்குகளை பெற்றுக் கொண்டு அரசோடு ஒட்டிக்கொள்ளும் நிலையே காங்கிரஸுக்கு ஏற்படுவதைத் தவிர வேறொன்றுமில்லை.

இதேவேளை, கிழக்கு மாகாணசபை முதல்வருக்கான பிரச்சினையும் இரு தரப் புக்குமிடையில் தலைதூக்கத் தொடங்கி யுள்ளது. 2012 ஆம் ஆண்டு செப்டம்பர் 09 ஆம் திகதி நடைபெற்ற கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 14 ஆசனங்களைப் பெற்று ஆட்சியமைக்க தடுமாறிக்கொண்டிருந்த போது உடன்படிக்கையின் பிரகாரம் காங்கிரஸ் அரசுடன் இணைந்தது. இவ் உடன்படிக்கையில் முக்கியமானதுதான் 4 வருட ஆட்சிக்காலத்தைக் கொண்ட மாகாணசபையில் முதலமைச்சர் பதவியில் முதல் இரண்டு வருடங்களை அரசாங்கத் தரப்பும் மீதி இரண்டு வருடங்களை காங்கிரஸ் தரப்பும் இருக்கவேண்டும் என்ற உடன்பாடு. இதனடிப்படையில் முதல் இரு வருடங்களும் முடிவதற் கிடையில் காங்கிரஸ் தரப்புக்கு முதல மைச்சர் பதவி கொடுக்கப்பட வேண்டும் என்ற முன்னறிவிப்புகளும் இதனால் இரு தரப்புக்குமிடையில் ஏற்படும் முரண்பாடு களும் இவ் உடன்படிக்கை அமுல்படுத் தப்படுவதில் இழுபறியை ஏற்படுத்தக் கூடும். இதற்கிடையில் காங்கிரஸ் மா காணத்தில் அரசுடன் இணைந்திருக்குமா என்பது கேள்விக்குறியாகும். ஆனால், மாகாணத்தில் காங்கிரஸ் அரசுடன் இணைந்திருப்பது கேள்விக்குறியானாலும் மத்திய அரசாங்கத்தை அரசை விட்டு அது வெளியேற முடியாத நிலையும் அரசு காங்கிரஸை வெளியேற்ற முடியாத நிலையுமே காணப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் தேசம், 2014 மார்ச் 01 – 14

# நவீனத்துவத்தின் பிடியிலிருந்து காத்துக்கொள்வது பெற்றோரினதும் ஆசிரியரினதும் பொறுப்பாகும்

எஸ்.எல். அப்துல் அஸீஸ்



நவீனத்துவ வளர்ச்சியின் பிடியில் கலாசாரத்தையும் மாணவர்களையும் காத்துக்கொள்வது பெற்றோரினதும் ஆசிரியரினதும் பொறுப்பாக இருக்கிறது என கல்முனை மாநகரசபை உறுப்பினரும் அம்பாரை மாவட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மக்கள் பிரதிநிதிகளின் செயலாளருமான ஏ.எம். பறக்கத்துல்லாஹ் தெரிவித்தார்.

கல்முனை அல் மிஸ்பாஹ் மகா வித்தியாலத்தில் இடம்பெற்ற உள்ளக மேடை திறந்துவைக்கும் அங்குரார்ப்பண நிகழ்வு மற்றும் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களை கௌரவிக்கும் புலமைப் பூக்கள் ஆகிய நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றுகையிலே அவர் மேற்கண்டவாறு உரையாற்றினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது; இன்றைய நவீன காலத்தின் ஓட்டம் அனைவரையும் சுறுசுறுப்புடன் இயங்க வழியேற்படுத்தும் அதேவேளை, அந்த நவீனத்துவங்களை சரியாக விளங்கிக்கொள்ளாமல் தவறான வழியில் கையாள்கையில் அவை எம்மை பிழையான முடிவுகளுக்கு இட்டுச் செல்கின்றன.

ஒரு மனிதன் இன்னொரு மனிதனைத் தொடர்பு கொள்வதற்கான ஊடகங்கள் எதுவும் இல்லாத காலங்களில் மனிதர்களிடத்தில் நம்பிக்கையும் நாணயமும் காணப்பட்டன. ஆனால் இன்று நிலையான தொலைபேசிகள், கையடக்கத் தொலைபேசிகள், சமூக வலயமைப்புகள், ஸ்கைப், வைபர், வட்ஸ் அப், ஈமெயில் என்ற இணையத்தள ஊடகங்கள் ஏராளமானவை புழக்கத்தில் வந்திருக்கின்ற போதும் ஒரு மனிதனை உரிய நேரத்திற்கு தொடர்புகொள்ள முடியாத நிலையே தோன்றியுள்ளது. இதனால் உண்மையற்ற மனிதர்களாகவும் மக்கள் இருந்து வருகின்றனர்.

சில சமூக வலயமைப்புகளினால் மக்களும் மாணவர்களும் மன அழுத்தங்களுக்கு உள்ளாகி தனது உயிரைக்கூட மாய்த்துக் கொள்ளும் நிலைக்கும் தள்ளப்பட்டு வருவதை அண்மைக்காலத்தில் இடம்பெற்ற குருணாகலை மாணவியின் தற்கொலைச் சம்பவத்தை இந்த இடத்தில் சுட்டிக் காட்ட பொருத்தமாக இருக்கும் என நம்புகின்றேன்.

வீட்டில் பெற்றோருக்கு இருக்கும் அழுத்தங்கள் காரணமாக பிள்ளைகள் சரியாக வழிநடத்தப்படும் நிலை குறைந்து வருகின்றது. இந்நிலையில் ஆசிரியர்கள் மாணவர்களை கட்டாயமாக வழிநடத்த வேண்டிய பொறுப்பில் இருந்து வருகின்றார்கள்.

# அஷ்ரஃப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் அபிவிருத்திக்கு யாரும் தடையில்லை

## வைத்திய அத்தியட்சகர் ஏ.எல்.எம். நசீர்

எஸ்.எம்.எம். றம்ஸான்

கல்முனை அஷ்ரஃப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் அபிவிருத்திக்கு வைத்தியசாலை நிருவாகமோ, அபிவிருத்திக்குழுவோ ஒரு போதும் தடையாக இருந்ததில்லை என அஷ்ரஃப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் ஏ.எல்.எம். நசீர் தெரிவித்தார்.

வைத்தியசாலையின் சிறுவர் பராமரிப்புக் கட்டடத் தொகுதியில் இடம்பெற்ற வைத்தியசாலையின் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பான கூட்டத்திற்கு தலைமை வகித்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்: அஷ்ரஃப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் அபிவிருத்திக்கு வைத்திய அத்தியட்சகராகிய நானும் அபிவிருத்திக்குழுவும் தடையாக இருப்பதாக இணையத்தளங்களிலும் தினசரிப் பத்திரிகைகளிலும் செய்திகள் வெளிவந்துள்ளன.

இச்செய்திகளில் எவ்வித உண்மையும் இல்லை. ஒருவர் தொடர்பாகவோ அல்லது ஒரு நிறுவனம் தொடர்பாகவோ குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுமாயின் சரியான தகவல்களை உரிய தரப்பிடமிருந்து பெறப்பட்ட பின்பே அது தொடர்பான செய்திகளை ஊடகவியலாளர்கள் பிரசுரிக்க வேண்டும். அதுவே ஊடகத் தர்மமுமாகும்.

தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்காக இவ்வைத்தியசாலையின் அபிவிருத்தி நடவடிக்கைக்கு தடையாக இருக்கவேண்டாம் என்றும் இவ்வைத்தியசாலையின் தேவைகளை அறிந்து எவர் அவற்றை நிறைவேற்ற முன் வருகிறாரோ அவருக்கு பூரண ஒத்துழைப்பும் வழங்க இதன் நிருவாகம் என்றும் தயாரகவே உள்ளது.

இவ்வைத்தியசாலை ஒருவருக்கோ, ஒரு குழுவினருக்கோ சொந்தமானதல்ல. இது இப்பிராந்திய மக்களுக்கான அரச நிறுவனம். இதனை அபிவிருத்தி செய்யவோ, உதவி புரியவோ எவருக்கும் முடியும். அதனால் பயனடையப் போவது இப்பிராந்தியமும் பிராந்திய மக்களுமே.

# மன்னர் பைசால் சர்வதேச விருதுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

றிப்தி அலி

சிறந்தமுறையில் சேவையாற்றியவர்களை நினைவுகூரும் வழக்கம் உலகின் பல நாடுகளில் நூற்றாண்டு காலமாக இடம்பெற்று வருகின்றது. இதனை பல்வேறு வழிமுறைகளில் அரசாங்கங்களோ, தனி அமைப்புகளோ மேற்கொண்டு வருகின்றன. இந்த நினைவுகூர்தலானது சின்னங்கள் வழங்கல், நினைவுத் தூபிகள் அமைத்தல், முத்திரை வெளியிடல் மற்றும் பெயர் சூட்டல் எனப் பல வழிகளில் அமைகின்றது. இவ்வடிப்படையிலேதான் சவூதி அரேபியாவில் மன்னர் பைசால் சர்வதேச விருதும் வழங்கப்படுகின்றது.

சவூதி அரேபியாவின் நிறுவுனரான மன்னர் அப்துல் அஸீஸின் மூன்றாவது புதல்வராக 1906ஆம் ஆண்டு பிறந்த பைசால் பின் அப்துல் அஸீஸ், 1964ஆம் ஆண்டு முதல் 1975ஆம் ஆண்டுவரை சவூதி அரேபியாவை ஆட்சிசெய்தார்.

சிறந்தமுறையில் சவூதி அரேபியாவை ஆட்சிசெய்த இவர், 1975ஆம் ஆண்டு மார்ச் 25ஆம் திகதி கொல்லப்பட்டார். இதையடுத்து 1976ஆம் ஆண்டு இவரின் பிள்ளைகளினால் தந்தையை நினைவு கூர்வதற்காகவும் அவரின் சேவைகளை கௌரவிப்பதற்காகவும் மன்னர் பைசால் மன்றம் உருவாக்கப்பட்டது.

இந்த மன்றத்தின் ஊடாக இஸ்லாமிய விழுமியங்கள் மற்றும் கொள்கைகளை உலகிற்கு வெளிப்படுத்தல், இஸ்லாத்திற்கும் முஸ்லிம் சமூகத்திற்கும் சேவையாற்றல் போன்ற சில நோக்கங்களின் அடிப்படையாக வைத்து மன்னர் பைசால் சர்வதேச விருது 1979ஆம் ஆண்டு முதல் வருடாந்தம் வழங்கப்படுகின்றது. அத்தோடு இஸ்லாத்திற்கான சேவை, இஸ்லாமிய கற்கைகள், அரபுமொழி மற்றும் இலக்கியம், மருத்துவம், விஞ்ஞானம் ஆகிய துறைகளில் பங்களிப்புச் செய்தவர்களுக்கு இந்த விருது பரிந்துரைக்கப்பட்டு வழங்கப்படுகின்றது.

இந்த விருதிற்கான நபர்களை உலகிலுள்ள இஸ்லாமிய அமைப்புகள், நிலையங்கள் மற்றும் பல்கலைக்கழகங்கள் முன்மொழிய முடியும். ஆண், பெண் என்ற வேறுபாடோ, இஸ்லாமியர் கிறிஸ்தவர், பௌத்தர், இந்து என்ற வேறுபாடின்றி இஸ்லாத்திற்கும் முஸ்லிம் சமூகத்திற்கும் சேவையாற்றியவர்கள் மற்றும் நிறுவனங்களை இந்த விருதிற்காக முன்மொழிய முடியும். எனினும், தனி நபர்களினாலோ அல்லது அரசியல் கட்சிகளினாலோ விருதிற்காக மேற்கொள்ளப்படும் முன்மொழிவுகள் நிராகரிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த விருதிற்கு தெரிவு செய்யப்படுபவர்களுக்கு திவானி கையெழுத்துச் சான்றிதழ், 200 கிராம் நிறையுடைய 24 கரட் தங்கப் பதக்கம் மற்றும் 200,000 அமெரிக்க டொலர் பணம் ஆகியன பரிசாக வழங்கப்படுகின்றன. இதுவரை மன்னர் பைசால் விருது பெற்றவர்களில் 16 பேர் நோபல் பரிசு பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு பாரிய தொகையினை பரிசாக வழங்கும் இந்த விருதின் 2015ஆம் ஆண்டிற்கான முன்மொழிவுகள் தற்போது ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. கடந்த 35 வருடங்களாக வழங்கப்பட்டு வரும் இந்த விருதினை பாகிஸ்தான், பலஸ்தீனம், ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா, அவுஸ்திரேலியா, கனடா மற்றும் குவைத் உள்ளிட்ட 41 நாடுகளைச் சேர்ந்த 234 பேர் பெற்றுள்ளனர்.

➡ 16

# பங்களாதேஷ் அரச உயர்மட்ட தூதுக்குழு கல்முனை விஜயம்

அஸ்லம் எஸ். மௌலானா

பங்களாதேஷ் அரச உயர்மட்ட தூதுக்குழுவொன்று கல்முனைக்கு விஜயம் செய்து மாநகர முதல்வர் நிசாம் காரியப்பரை சந்தித்து கலந்துரையாடியுள்ளது.

பங்களாதேஷ் சிக்காகொங்க் பில்ட்ரக் விவகார அமைச்சின் இணைச் செயலாளர் பசுதெக் அஜ்ஜார்ஜீ தலைமையில் வருகை தந்த இத்தூதுக்குழுவினர், யுத்தத்திற்குப் பின்னர் கல்முனைப் பிராந்திய மாகாண மக்களின் கல்வி, கலாசார, சமூக, பெண்கள் மற்றும் சிறுவர்களின் நிலை குறித்தும் உட்கட்டுமான அபிவிருத்திகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் பற்றியும் முதல்வரிடம் கேட்டறிந்து கொண்டதுடன் அவை தொடர்பில் தமது நாடு கைக்கொள்ள வேண்டிய பொறிமுறை பற்றியும் கலந்துரையாடினர்.

பங்களாதேஷில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சிக்காகொங்க் நகரை மீளக் கட்டியெழுப்புவதற்கு இலங்கையை முன்மாதிரியாகக் கொள்ள விரும்புவதாகத் தெரிவித்த இத்தூதுக்குழுவினர், இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மூன்று தசாப்தங்களுக்கு மேலாக யுத்தம் இடம்பெற்று பாரிய அழிவுகள் ஏற்பட்டபோதிலும் இலங்கை அரசாங்கம் அவற்றை குறுகிய காலத்திற்குள் புனரமைப்பு செய்து நாட்டை அபிவிருத்திப் பாதைக்கு இட்டுச் சென்றுள்ளதை தமது விஜயத்தின்போது அறிந்து கொண்டுள்ளதாக தெரிவித்தனர்.

தாம் இலங்கைப் பாராளுமன்றம் மற்றும் முக்கிய அமைச்சுகளுக்கும் வட மாகாணத்திற்கும் விஜயம் செய்ததாகவும் இதற்கு ஒத்துழைப்பு வழ்ங்கிய அரசாங்கத்திற்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் விசேட நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதாகவும் அவர்கள் இதன்போது குறிப்பிட்டனர்.

# சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் பதிவாளராக மருதமுனை எம்.எப். ஹிபத்துல் கரீம் பதவியேற்பு

பி.எம்.எம்.ஏ. காதர்



கிழக்குப் பல்கலைக்கழக திருமலை வளாக பிரதிப் பதிவாளராகக் கடமையாற்றி வரும் மருதமுனையைச் சோந்த எம்.எப். ஹிபத்துல் கரீம் கடந்த பெப்ரவரி 17 ஆம் திகதி சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் பதிவாளராக பதவி ஏற்றுள்ளார்.

இவர், ஓய்வுபெற்ற அதிபர் மர்ஹூம் எஸ்.எம்.எம். பழீல், மர்ஹூமா பாத்து முத்து தம்பதியின் புதல்வராக, 1967.05.03 ஆம் திகதி மருதமுனையில் பிறந்தார். மருதமுனை அல் மனார் மத்திய கல்லூரியில் முதலாம் ஆண்டு தொடக்கம் க.பொ.த. உயர்தரம் வரை கல்வி கற்றார்.

1987-1994 வரை கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கற்று விஞ்ஞானமானி பட்டத்தையும் 1994-1997 வரை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கற்று விஞ்ஞான முதுமானி பட்டப் படிப்பையும் பூர்த்தி செய்தார். அத்தோடு, 2013இல் ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் வியாபார நிருவாக முதுமானி பட்டத்தையும் நிறைவு செய்தார்.

2013.01.01 ஆம் திகதி முதல் கிழக்குப் பல்கலைக்கழக திருகோணமலை வளாகத்தின் பிரதிப் பதிவாளராகக் கடமையாற்றி வரும் நிலையிலேயே சப்ரகமுவ பல்கலைக்கழக பேரவையினால் பதிவாளராக, இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

மருதமுனை பிரதேச கல்வி மற்றும் விளையாட்டு அபிவிருத்திக்கு சிறந்த பங்களிப்பைச் செய்து வரும் இவர், கனடா, தாய்லாந்து, இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் இடம்பெற்ற கல்வித்துறையுடன் சம்பந்தப்பட்ட பல கருத்தரங்குகளுக்கும் சென்று பங்குபற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# பேராறு வீதி புனரமைக்க கோரிக்கை:

## கந்தளாய் பிரதேச தவிசாளர் முன்வருவாரா?

எப். முபாறக்

இந்த நாட்டில் வீதி அபிவிருத்தி, வடிகாலமைப்பு வசதிகள் உள்ளிட்ட உட்கட்டுமானப் பணிகள் நாளுக்கு நாள் இடம்பெற்று வருகின்றபோதிலும் கந்தளாய் பிரதேச சபைக்குட்பட்ட பேராறு வீதி நீண்டகாலமாக எந்த விதமான புனரமைப்பும் இன்றி குன்றும் குழியுமாக காணப்படுகின்றது.

தினமும் அதிகளவான பொது மக்கள் பயன்படுத்தும் இந்த வீதி, குன்றும் குழியுமாக காணப்படுவதால் மழை காலங்களில் நீர் தேங்கி நின்று தொற்று நோய்களைப் பரப்பும் அபாயமுள்ளது.

இந்த வீதி பல வருடகாலமாக புனரமைப்பு எதுவுமின்றியும் முறையான வடிகாலமைப்பு வசதிகள் இன்றியும் காணப்படுவதை கந்தளாய் பிரதேசசபைத் தவிசாளர் நேரில் சென்று பார்வையிட்டு இந்த வீதியை புனரமைத்து வடிகாலமைப்பு வசதியையும் ஏற்படுத்த முன்வருவாரா? என மக்கள் கேள்வி எழுப்பு கின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எம்.எச்.எம். ஹஸன்

## அரசியல் பார்வை

அன்றாட நிகழ்வுகளின் நகர்வுகளைப் பார்க்கும்போது இலங்கையின் மிக முக்கிய கவனம் மாகாணசபைத் தேர்தலின் வெற்றி குறித்துத் திரும்பியுள்ளதாகவே தெரிகிறது. இம்முறை ஜெனீவாவில் இலங்கை தொடர்பாக முன்வைக்கப்படும் பிரேரணையும் புதியதொன்றல்ல. 2012 - 2013 ஆம் ஆண்டின் தொடராகவே அது கொண்டுவரப்படுகின்றது. 2014 இன் பிரேரணை களமிறங்கக் காரணம் இலங்கையின் கையாளாத்தனம் என்று சமூக ஆர்வலர் நிமல்கா பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். நவநீதம்பிள்ளையின் அறிக்கையிலும் புதிய விடயங்கள் எதுவுமில்லை என்றும் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சுகளிலும் அடங்கியிருந்தவைதான் என்றும் அவர் கூறியுள்ளார்.

கேட்ட முதலாவது சந்தர்ப்பம் இதுவல்ல. யுத்தங்கள் முடிவடைந்த ஒவ்வொரு நாட்டிலும் இது நடைபெறுவதுண்டு. இலங்கையிலும்கூட இது முன்னர் நடைபெற்றுள்ளது. 1971 இல் நடைபெற்ற ஜே.வி.பி. கிளர்ச்சி முடிவில் இத்தகைய ஒரு நிலை ஏற்பட்டது. கிளர்ச்சியை அடக்கிய விதம் தொடர்பில் சர்வதேசத்துக்கு பதில் சொல்ல வேண்டிய நிலை அன்றைய பிரதமர் ஸ்ரீமாவோ பண்டார நாயக்காவுக்கு ஏற்பட்டது. அவர் கிளர்ச்சியை அடக்குவதில் ஏற்பட்ட உயிரிழப்புகள், சொத்தழிவுகள் தொடர்பான ஒரு விரிவான அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார். பாதுகாப்புப் படையினரால் துன்புறுத்திக் கொலை செய்யப்பட்ட ப்ரேமவதி மனம்பேரி தொடர்பில் நீதி விசாரணை நடத்தி உரியவர்களுக்குத் தண்டனை வழங்க நடவடிக்கை எடுத்தார்.



# பொறுப்புக் கூறலில் வழங்கப்பட்டிருந்த வாய்ப்பை சரியாகப் பயன்படுத்தவில்லை

- எமது நாட்டு துறைமுகத்துக்கு கப்பல்கள் வராத நிலையும் விமான நிலையங்களில் விமானங்கள் இறக்கப்படாத நிலையும் வரலாம்.
- வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் வராத நாடாக மாறலாம்.
- வெளிநாட்டு வேலைவாய்ப்பில் புலமைப்பரிசில்கள், வைத்திய சேவைகள் அற்றுப்போகின்ற நிலைகூட வரலாம்.


இலங்கை போன்ற ஒரு சிறிய நாடு சுயாதீனத் தன்மையை பாதுகாத்துக் கொள்ள வேண்டுமானால் சர்வதேச ஒப்பந்தங்களை மதித்து நடக்கவேண்டும் என ஜனநாயகத்துக்கான வழக்கறிஞர்கள் அமைப்பின் நெறியாளர் சட்டத்தரணி லால் விஜே நாயக்க கூறியுள்ளார். இப்போது இலங்கை மீது பலரும் ஆதிக்கம் செலுத்த முனைவது அத்தகைய உடன்படிக்கைகளை மீறியமையால்தான் என்றும் அவர் சட்டத்தரணிகள் மாநாடொன்றில் உரையாற்றும்போது கூறியுள்ளார்.

பிரபாகரனைக் கொன்று, பயங்கரவாதத்தை இலங்கை மண்ணிலிருந்து விரட்டியடித்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அந்த யுத்தம் காரணமாகவும் அதற்குப் பிந்திய நடவடிக்கைகள் காரணமாகவும் ஜெனீவாவில் பலத்த சவாலை எதிர்கொள்ள வேண்டியேற்பட்டுள்ளது. ஜனாதிபதியும் அரசும் மட்டுமன்றி, முழு நாடும் இக்கட்டான நிலைக்குத் தள்ளப்படுமா? என்ற கேள்வியோடு மக்கள் திணறிக் கொண்டிருக்கும்போது எப்படியாவது மாகாண சபைத் தேர்தலை வென்றெடுத்தால் சரி என்று நினைக்கும் போக்கும் அரசாங்கத்திடம் தென்படுகின்றது.

உள்நாட்டில் மனித உரிமைகள் மீறப்பட்டமையை சர்வதேச சமூகம் தட்டிக்

1983 இலும் இதுபோன்ற ஒரு நிலை ஏற்பட்டு, 1984 இல் நடைபெற்ற மனித உரிமைகள் அமர்வில் இலங்கைக்கு எதிரான ஒரு பிரேரணையைக் கொண்டுவரும் முயற்சியில் இந்தியா ஈடுபட்டபோதும் அது கைக்கூடவில்லை. 1989 ஆம் ஆண்டு ஜே.வி.பி. இன் இரண்டாவது கிளர்ச்சி முடிவிலும் இலங்கைக்கு எதிராக மனித உரிமைப் பிரச்சினை கிளப்பப்பட்டது. இன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவும் ஜெனீவா வரை சென்று அன்றைய ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் மனித உரிமை மீறல்களுக்கு எதிராகக் குரல் கொடுத்தமை குறிப்பிடத்தக்கது. ஜே.வி.பி. இனர் குரூரமாக அடக்கப்பட்டிருந்தாலும் உலகில் அவர்களுக்கென்று பேச டயஸ் போராவோ, வேறு அமைப்புகளோ இருக்கவில்லை. தவிர, அன்றைய உலகம் கொண்டிருந்த மனித உரிமைகள் கரிசனையும் இன்றுபோல் இல்லை. அன்று வெளிநாட்டுச் சேவையில் ஈடுபட்டிருந்த திறமையான உத்தியோகத்தர்களே அதனைச் சமாளித்துவிட்டனர்.

இலங்கைக்கு எதிரான மேலைத் தேசத்தின் சதி என்ற கருத்துக்கள் இன்று பரவலாக உரத்துக்கூறப்பட்டாலும் விடுதலைப் புலிகளைத் தோற்கடித்ததற்கு மேலைய



நாடுகள் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை என்பதே உண்மை. நோர்வே மட்டுமே எல்.ரீ.ரீ.ஈ. இன் தோல்வியை விரும்பாமல் இருந்தது. அமெரிக்காவும் இந்தியாவும் விடுதலைப் புலிகளின் கடல்வழிப் பயணங்களை முற்றிலுமாக கண்காணித்து இலங்கைக்குப் பேருதவி புரிந்தன. எல்.ரீ.ரீ.ஈ. இன் ஆயுதக் கொள்வனவை நிறுத்தவும் அமெரிக்கா நடவடிக்கை மேற்கொண்டிருந்தது. எல்.ரீ.ரீ.ஈ. யைப் பாதுகாக்க இந்தியாவோ, அமெரிக்காவோ நினைத்திருந்தால் நிலைமை வேறு மாதிரி அமைந்திருக்கும். ஆனால், கடைசி நேர யுத்தத்தில் சரணடையும் நோக்கில் வந்ததாக கூறப்படும் விடுதலைப் புலிகள் கொல்லப்பட்ட விடயத்தில்தான் அமெரிக்கா முதன் முதலில் கேள்வி கேட்கத் தொடங்கியது. மேலைத் தேசமெங்கும் வாழும் தமிழ் டயஸ் போராவின் போராட்டங்கள் புதியதோர் அலையாக வெடித்துவிடுமா என்ற அளவுக்கு நிலைமை வலுப்பெற்றிருந்தது. எப்படியோ மேற்கின் கோரிக்கைகள் எதுவாக இருந்தாலும் அதனைச் சட்டை செய்யாமல் இலங்கை மிகச் சரியாக யுத்தத்தில் ஈடுபட்டு பிரபாகரனை தோற்கடித்தமை இலங்கையைப் பொறுத்தட்டில் மிக உயர்ந்த பணியாகவே கொள்ளப்படுகின்றது.

ஆனால், யுத்தம் முடிவடைந்த பின்னர் மேற்குலகில் இருந்துவந்த குற்றச்சாட்டுகளின் போதும் ஐ.நா. மனித உரிமைகள் அமர்வின் முன்னெடுப்புகளின் போதும் இலங்கை நடந்துகொண்ட விதம் குறித்து பாரிய சர்ச்சைகள் எழுந்துள்ளன. யுத்த வெற்றிக்கு உதவிசெய்த நாடுகளுக்கு அளித்த வாக்குறுதிகளை மீறி ஒரு வெற்றி மமதையில் செயற்படுவதாகவே நோக்கப்பட்டது. அமெரிக்கா பொருளாதாரத்தில் வீழ்ச்சியடைந்து வருகிறது. எனவே, சீனா உதவி செய்தால் எமக்குப் போதுமானது; ரஷ்யாவும் சீனாவும் பாதுகாப்புச் சபையில் இருக்கும் வரை அமெரிக்காவும் மேற்கும் எங்களை ஒன்றும் செய்ய முடியாது என்ற மெத்தனமான போக்கு இலங்கையிடம் காணப்படுவதாகவே பல ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

சீனாவும் ரஷ்யாவும் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் வீட்டோ அதிகாரத்தைப் பிரயோகிக்க முடியும் என்பது உண்மையே. ஆனால், இலங்கையின் இருதரப்பு வர்த்தக முயற்சிகள் நடைபெறுவது அமெரிக்காவுடனும் ஐரோப்பிய நாடுகளுடனுந்தான் என்பதை மறந்து விட முடியாது. இலங்கையின் எதிர்கால விருத்தி ஐரோப்பிய நாடுகளின் நன்மதிப்பில்தான் தங்கியிருக்கின்றது என்பது யதார்த்தமாகும்.


### இலங்கைக்கு அநீதி

யுத்தத்தின் பின்னர் பொறுப்புக் கூறலை எதிர்பார்ப்பதும் புனர்நிர்மாணம், மீள் குடியேற்றம் பற்றிய தேவையும் இயல்பானதொன்றாகும். சர்வதேச சமூகத்தினரிடையே அதிர்வுகளை ஏற்படுத்தியுள்ள இரண்டொரு விடயங்களில் நீதியான விசாரணையொன்றை மேற்கொண்டிருந்தால், தமிழ் மக்களின் பிரச்சினைக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய நியாயமான தீர்வொன்றைக் கண்டிருந்தால் இப்பிரச்சினை சுமுகமாகக் கையாளப்பட்டிருக்கும் என்று எதிர்பார்க்கலாம். இலங்கை அவ்வாறு செய்வதைத் தொடர்ந்தும் புறக்கணித்தே வந்துள்ளது. அதன் விளைவை எதிர்காலத்தில் இலங்கை அனுபவிக்க வேண்டி வரும் என்ற அச்ச உணர்வே இன்று மேலெழும்பியுள்ளது. அமெரிக்கா, ஐரோப்பா மட்டுமன்றி இந்தியாவும்கூட இப்போது இலங்கையுடன் முரண்படும் நிலையிலுள்ளன. மனித உரிமை மீறலுக்கான பொறுப்புக் கூறலில் இலங்கைக்கு வழங்கப்பட்டிருந்த வாய்ப்பை வேண்டுமென்றே தட்டிக்கழித்தமை கண்கூடு. இப்போது சர்வதேச விசாரணை என்பது தவிர்க்க முடியாதது என்ற நிலை வந்துள்ளதாக அரசியல் ஆய்வாளர்கள் பலரும் சுட்டிக்காட்டுகின்றனர். எத்தகைய தடைகள் இலங்கை மீது வருமென்று இப்போதைக்கே கூற முடியாவிட்டாலும்

→ 16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நபிகளாரின் சுன்னாவும் சட்டவாக்கமும்



மூலம்: கலாநிதி யூசுப் அல்கர்ளாவி
மொழியாக்கம்: அஷ்ஷெய்க் எம்.எப். ஸைனுல் ஹுஸைன் (நளீமி)

(தொடர் 34)

கலாநிதி யூஸுப் அல்கர்ளாவி அவர்கள் எழுதிய "அஸ்ஸுன்னா மஸ்தரன் லில் மஃரிபா வல் ஹழாரா" (அறிவுக்கும் நாகரிகத்திற்குமான அடிப்படை என்ற வகையில் சுன்னா) என்ற நூலின் மொழிபெயர்ப்புத் தொடர்.

இப்பெயர் வழங்கப்படக் கூடாது எனக் கூறுவோர் பின்வரும் காரணத்தை அதற்காக முன்வைக்கின்றனர்: "இர்க்" என்பதும் "நஸா" என்பதும் ஒரே பொருளிலேயே பயன்படுத்தப்படுகின்றன. அப்படியிருக்கையில் ஒரு சொல்லுடன் மற்றையதை இணைத்துச் செல்வது தடுக்கப்பட்டதாகும்.

இதற்கு இரு வகையில் பதில் அளிக்கலாம்:

ஒன்று, "இர்க்" என்பது "நஸா" என்பதிலும் பொதுமையானதாகும். எனவே, இப்பெயர் பொதுமையானதை குறிப்பானதுடன் இணைத்துக் கூறும் வகையில் அமைந்ததாகும். அனைத்து திர்ஹம்கள் அல்லது சில திர்ஹம்கள் என்று சொல்வதுபோல.

இரண்டாவது, நஸா என்பது இர்க்கில் (நரம்பில்) ஏற்படும் நோய் நிலைமையாகும். ஒன்றை அதனுடைய இடத்துடன் இணைத்துக் கூறும் வகையிலேயே இப்பெயர் வழங்கப்பட்டுள்ளது. இதன் வலி அனைத்தையும் மறக்கடித்து விடுவதால் (நஸா- மறக்கடித்தல்) இப்பெயர் வந்ததாகவும் கூறப்படுகின்றது. இந்த நரம்பு இடுப்பிலிருந்து நீண்டு செல்கின்றது. கரண்டைக் காலின் பின்புறமாக கணுக்காலிற்கும் கால் எலும்புக்குமிடையில் பாதம் வரை நீண்டு செல்கின்றது.

மருத்துவவியல் கருத்தைப் பொறுத்தவரை

**ஆட்டின் சிறிய பருமனையும் அது மேயும் மேய்ச்சல் நிலத்தின் சிறப்பினையும் கருத்திற் கொண்டே நாட்டுப்புறத்து ஆடு தேர்வு செய்யப்பட்டுள்ளது. மூலிகைகள் போன்ற உலர் நிலத்து புற்பூண்டுகளை அவை சாப்பிடுகின்றன. இத்தாவரங்களை விலங்கு உண்ணும்போது அவற்றின் குண நலன்கள் அதன் மாமிசத்தில் சேர்கின்றன. மிக அற்புதமான கலப்பு மருந்தொன்று அதன் உடலில், குறிப்பாக, தொடைப்பகுதியில் உருவாகின்றது.**

அதனை விரிவாக விளக்க வேண்டியுள்ளது.

நாம் ஏலவே குறிப்பிட்டது போல அல்லாஹ்வின் தூதரது வார்த்தைகள் இரு வகைப் படும்:

ஒன்று, காலம், இடம், நபர், நிலைமை என அனைத்திற்கும் பொதுமையாக அமைந்துள்ளது.

இரண்டு மேற்குறிப்பிட்ட ஒவ்வொன்றிற்கும் அல்லது சிலவற்றுக்கு குறிப்பாக அமைந்தவை. இந்த ஹதீஸ் இரண்டாவது வகையைச் சார்ந்ததாகும். இது அரபிகளுக்காக சொல்லப்பட்ட ஹதீஸாகும். ஹிஜாஸ் வாசிகளுக்கும் அவர்களைச் சூழ விருந்தோருக்கும் குறிப்பாக, நாட்டுப் புறத்து அரபிகளுக்குச் சொல்லப்பட்டதாகம்.


இந்த சிகிச்சை முறை அவர்களுக்கு அதிகப் பயனுள்ள சிகிச்சை முறையாகும். உடல் உலர்ந்து போவதனாலேயே இந்நோய் ஏற்படுகின்றது. சிலபோது ஒட்டுத்தன்மையுள்ள பதார்த்தமொன்றே இதற்கு காரணமாக அமைகின்றது. அதனை இளக்ச் செய்வதே அதற்குரிய சிகிச்சையாகும். சிறப்பு நிலையைத் தோற்றுவித்தல், இளகச் செய்தல் ஆகிய இரு சிறப்பம்சங்கள் ஆட்டின் தொடையிலே காணப்படுகின்றன. இவ்விரு அம்சங்களும் இந்நோயைக் குணப்படுத்த அவசியமான வையாகும்.

ஆட்டின் சிறிய பருமனையும் அது மேயும் மேய்ச்சல் நிலத்தின் சிறப்பினையும் கருத்திற் கொண்டே நாட்டுப்புறத்து ஆடு தேர்வு செய்யப்பட்டுள்ளது. மூலிகைகள் போன்ற உலர் நிலத்து புற்பூண்டுகளை அவை சாப்பிடுகின்றன. இத்தாவரங்களை விலங்கு உண்ணும்போது அவற்றின் குண நலன்கள் அதன் மாமிசத்தில் சேர்கின்றன. மிக அற்புதமான கலப்பு மருந்தொன்று அதன் உடலில், குறிப்பாக, தொடைப்பகுதியில் உருவாகின்றது. இத்தாவரங்களின் குண நலன்கள் பாலை விட மாமிசத்திலேயே அதிகம் சேர்கின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது. இன்னும், தொடைப்பகுதியில் காணப்படும் சிறப்பு நிலையைத் தோற்றுவித்தல், இளகச் செய்தல் ஆகிய இரு குணாதிசயங்களும் பாலில் காணப்படுவதில்லை என்பதும் இங்கு நினைவு கூரத்தக்கதாகும். பெரும்பாலான சமூகங்களும் நாட்டுப்புறத்தினரும் தனித் தனியான மருந்துகளை பயன்படுத்தியுள்ளனர். இந்திய மருத்துவர்களும் இக்கருத்தினையே கொண்டுள்ளனர்.

உரோமர்களும் கிரேக்கர்களும் கூட்டுக் கலப்பான மருந்துகளிலேயே கவனம் செலுத்தினர். உணவை மருந்தாகக் கொடுப்பதே வைத்தியரின் திறமையாகும் என்பதில் அனைத்து சமூகத்தினரும் உடன்பாடான கருத்தைக் கொண்டுள்ளனர். அப்படிச் செய்வதற்கு முடியாவிட்டால் தனி மருந்தினால் குணப்படுத்த முயலவேண்டும். அதுவும் முடியாவிட்டால் குறைவான கூட்டுக் கலப்பு மூலம் சிகிச்சையளிக்க வேண்டும்.

அறபுகளுக்கும் நாட்டுப்புறத்தினருக்கும் பெரும்பாலும் சிறிய நோய்களே ஏற்பட்டன. அவர்கள் அவற்றுக்குப் பொருத்தமான எளிமையான மருந்துகளையே பயன்படுத்தினர். அவர்கள் பெரும்பாலும் எளிமையான உணவுகளை உட்கொண்டமையே அவர்களது எளிமையான நோய்களுக்கு காரணமாகும். சிக்கலான பல்வேறுப்பட்ட உணவுகளை உட்கொள்ளும்போதே சிக்கலான நோய்கள் ஏற்படுகின்றன. அவற்றுக்கு கூட்டுக் கலப்பான மருந்துகள் பயன்படுத்தப்படுகின்றன. அல்லாஹ்வே நன்கறிந்தவன்- (ஸாதுல் மஆத், பாகம்: நான்கு பக்கம்: 71 முதல் 73 வரை)

# இளமைக் காலம்



## எதிர்காலத்தில் மனிதனா அல்லது மிருகமா?

இறைவனுடைய படைப்புக்களில் மிகவும் உயர்ந்த உன்னதமான படைப்பு தான் மனிதன். தான் படைத்த அனைத்துப் படைப்புக்களையும் மனிதனுக்கு வசப்படுத்தி இவ்வுலக வாழ்வில் சந்தோசமாய் இருக்க இடம் வகுத்துக் கொடுத்தான் இறைவன். மனிதனானவன் எவ்வளவு நன்றி செலுத்தினாலும் அவனது அருளுக்கு இணையாகாது.


இவ்வளவு உயர்ந்த அந்தஸ்து தரப்பட்ட மனிதன் அவனது செயல்களால் காலப்போக்கில் இரண்டு வகையாகப் பிரிந்து செல்கின்றான். அதாவது, உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்று. இந்த இரண்டு வகையானவரும் அந்தஸ்திலோ, செல்வத்திலோ உயர்ந்தவர்களன்று. மாறாக உளத்தூய்மையிலும் இறையச்சத்திலும் உயர்ந்தோனும் தாழ்ந்தோனுமேயாகும்.

பல வித தொழிநுட்ப சாதனங்கள் வலைவீசிப் பரவியுள்ள இந்நூற்றாண்டில், அவற்றை பயன்படுத்துவதை பொறுத்து ஷைத்தானியம் தலைவிரித்தாடத் தொடங்கியுள்ளது. இந்நிலையில் நமது இளம் சமுதாயத்தினரின் கவனமானது பெரும்பாலும் சினிமாப் பக்கம் தலைகாட்டியுள்ளமை மிகவும் வருத்தமானதாகும்.

இன்று, சினிமா மோகம் இளம் சமுதாயத்தினரின் கண்ணியமற்ற பொழுதுபோக்குகளில் ஒன்றாக இடம்பிடித்துள்ளது. ஆரம்ப நிலையில் ஒரு 'கலை' யாக இருந்துவந்த சினிமா, காலப்போக்கில் இளம் சமுதாயத்தினரின் வாழ்க்கைப் போக்கையே மாற்றும் சாதனமாக மாறியுள்ளது.

'கலை' என்ற போர்வையை போர்த்தி இளசுகளை சீரழித்து வருகின்ற சினிமாவானது, அவர்களின் அனைத்து செயற்பாடுகளிலும் ஆதிக்கம் செலுத்துவதன் மூலம் பெற்றோரை பிள்ளைகள் பேணுவதிலும் ஆசிரியர்களை மதிப்பதிலும் பெரியோரிடம் மரியாதை செலுத்துவதிலும் எதிர்மறைகளை தூபமிடுகிறது.

இன்று புதியதொரு சீரியலோ, சினிமாத் திரைப்படமோ வெளிவந்து விட்டால் முதலில் பார்வையிட்டு பச்சைக் கொடி தூக்குகிறார்கள் இன்றைய பெற்றோர்கள். அவர்கள் இவ்விடயத்தில் கவனமாகவும் திருத்தமாகவும் இருப்பார்களானால் இளம் தலைமுறையை வழிகேட்டிலிருந்து பாதுகாக்க முடியும். மாறாக, குடும்பமே சீரியல்களாலும் சினிமாவாலும் சூழ்ந்திருந்தால் இளம் சமுதாயம் எழுச்சிபெறுவதற்கு வழிகோலாது என்பது மட்டும் நிச்சயம்.



மனித வாழ்வினிலே வாலிப வயதுதான் நன்மைகளை அதிகளவில் ஈட்டக்கூடிய ஒரு கட்டம். அதேநேரத்தில், ஷைத்தானுக்கு மிகவும் விருப்பமான கட்டமும் இதுதான். எதிர்காலத்தில் மனிதனா? அல்லது மிருகமா? எனத் தீர்மானிப்பதும் இக்கட்டந்தான்.

கல்லூரிகளில் கால்தடம் பதியவேண்டிய இப்பருவத்தினர் சினிமாக் கூடங்களில் அடைபட்டுக் கிடக்கின்றனர். அன்றாடப் பாடங்களையும் திக்ருகளையும் ஓதவேண்டியவர்கள் சினிமாவிலும் சீரியலிலும் மூழ்கிப் போய் நடிகர், நடிகைகளினது திரைப்பட பாடல்களையும் முணுமுணுக்கின்றனர். இவ்வாறான இளம் சமுதாயத்தினரின் சீர்குலைவுகள் அவர்களை அதாழ பாதாளத்திற்கு இட்டுச் செல்கின்றன.

மனித வாழ்க்கையின் இளமைப்பருவத்தின் அவசியத்தையும் அதன் முக்கியத்துவத்தையும் உணர்த்துவதற்கு பின்வரும் ஹதீஸ் போதுமானதாகும்:

மறுமை நாளில் ஓர் அடியான் நான்கு வினாக்களுக்கு விடையளிக்கும் வரை அவனது கால்கள் நகர முடியாது.

01. தனது வாழ்க்கையை எவ்வாறு கழித்தாய்?
02. தனது வாலிப பருவத்தை எந்த விடயங்களில் ஈடுபத்தினாய்?
03. செல்வத்தை எவ்வாறு சம்பாதித்து செலவு செய்தாய்?
04. பெற்ற அறிவின் மூலம் என்ன செய்தாய்?

(ஆதாரம் தபரானி)

ஒவ்வொருவரும் தமது வாழ்க்கைக் காலத்தை நன்கு திட்டமிட்டு பயன்படுத்தவேண்டும். இளமைக்காலம் என்பது மனிதப் பருவத்தில் மிக முக்கியமான பகுதி என்பதால் அதனை வீணடிப்பது எமது வாழ்வின் முக்கியமான காலகட்டத்தை இழக்கச் செய்துவிடும். சினிமாத்துறைக்கு அடிமையாவதிலிருந்து விடுபட்டு அல்லாஹ்வின் பாதையில் எமது காலத்தை செலவிடுவதன் மூலம் இளமைக் காலத்தை எழுச்சிப் பாதைக்கு கொண்டுசெல்ல முடியும்.

-பாத்திமா ஷீஸ்மா-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA



# புலிகளால் கொல்லப்பட்ட தமிழர்கள் பற்றி எவரும் கவலைப்படுவதில்லை

தோழர்ஸ்ரனிஸ்



புலிகளால் கொல்லப்பட்ட தமிழர்களும் அவர்களது தியாகங்களும் என்றுமே வஞ்சிக்கப்பட்டவை. இது திட்டமிட்டே சிலரால் மேற்கொள்ளப்படுகின்றது. இந்த வஞ்சித்தல் ஏன், எதனால்? இதில் முழுக்க முழுக்க அரசியலே உள்ளது.

புலிகளில் இருந்து கொல்லப்பட்டவர்களுக்காகவும் அவர்களது நலன்கள் தொடர்பாகவும் இந்த உலகமே ஓர் அணியில் நிற்பதைப்போல் ஒரு தோற்றம் உள்ளது. ஆனால், புலிகளால் கொல்லப்பட்டவர்களின் நிலைமை பரிதாபமாக உள்ளது. யாரும் அவர்கள் தொடர்பாக கதைப்பதே இல்லை. அந்தக் குடும்பங்கள் என்ன நிலைமையில் வாழ்கிறார்கள் என்பதையோ, அவர்கள் நலன்கள், மறுவாழ்வு தொடர்பாகவோ எவரும் கண்டுகொள்வதாக இல்லை. இன்று புலிகளில் இருந்து கொல்லப்பட்டவர்கள் தொடர்பான நலன்கள் மற்றும் அவர்கள் மறுவாழ்வு பற்றி பேசுபவர்களின் அரசியலே கோலோச்சுகிறது.

வீழ்ந்து கிடக்கும் ஒரு மனிதனுக்கு ஒன்று பண பலம் வேண்டும்; அல்லது மனிதர்களின் பக்கபலம் வேண்டும். இவை இரண்டுமே இல்லாத மனிதன் வாழ்வில் பிரகாசம் ஏற்படும் வாய்ப்புகளே இல்லை. இந்த நிலைமைதான் இன்று புலிகளால் கொல்லப்பட்டவர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

ராஜீவ்காந்தி படுகொலையின் போது உயிரிழந்த தமிழர்கள் 16 பேரின் குடும்பங்கள் தற்போது கொலையாளிகளுக்கு இந்திய உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பு தொடர்பாக அதிர்ச்சி அடைந்து அவர்களது மனக்குமுறல்களை வெளிப்படுத்தி வருகின்றனர்.

அந்தச் சம்பவத்தில் இன்பெக்டர் கணவனை பலிகொடுத்த பாலசரஸ்வதி என் கணவரும் பச்சைத் தமிழர்தான். தூக்கு தண்டனை கைதிகளுக்கு குரல்கொடுத்த தலைவர்கள் எங்களுக்கு ஆறுதல் கூறவரவில்லை. அதே சம்பவத்தில் கொல்லப்பட்ட காஞ்சிபுரம் மாவட்ட எஸ்.பி. முகமது இக்பால் அவர்களின் மகன் ஜாவீத் இக்பால்: நாட்டின் முன்னாள் பிரதமரை கொலை செய்தவர்களின் தண்டனையை ரத்து செய்வது வருத்தம் அளிக்கிறது எனக் கூறியுள்ளார்.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணையில் பலர் தங்கள் பிள்ளைகளை புலிகள் பிடித்துச் சென்றதாகவும் அவர்களை புலிகள் கொலை செய்திருப்பார்கள் என்றும் புலிகள் மேல் குற்றம் சுமத்தியுள்ளனர். தற்போதைய சூழ்நிலையில் பலருக்கு இந்த விடயம் சிவபூசைக்குள் கரடி நுழைந்த கதையாகத்தான் இருந்திருக்கும். ஆனால், உண்மை என்றுமே உறங்குவதில்லை.

இலங்கையில் நடைபெற்ற போராட்டங்களின் போது பல தமிழர்கள் புலிகளால் கொல்லப்பட்டுள்ளார்கள் என்பது இந்த உலகிற்கே தெரிந்திருந்தும் அவர்களது மறுவாழ்வு குறித்து கவனம் செலுத்த எந்த அரசியல் கட்சியும் முன்வருவதில்லை. ஏனென்றால் அவர்களது மரணத்தை பேசுவதால் அரசியல் கட்சிகளுக்கு பிரயோசனம் இல்லை என அவர்கள் நினைக்கிறார்கள். இதனால் அவர்கள் பலதை இழந்துவிட நேரிடும் என நினைக்கிறார்கள். புலிகளுக்கு எதிராகப் பேசியவர்கள், அவர்களது செயற்பாட்டை விமர்சித்தவர்கள் இலங்கை அரசியலில் பின்னுக்கே தள்ளப்பட்டு கிடக்கிறார்கள்.

இது, இன்று ஒரு ரெண்ட் ஆக உள்ளது. இந்த ரெண்ட் இல் இருந்து விடுபட்டு விட்டால் தங்களது அரசியலே அஸ்தமனமாகிவிடும் என இவர்கள் நினைப்பது என்றும் ஆபத்தானது.

இப்படியோர் அரசியல் முடிவினாலே இன்று தமிழகத்தில் ராஜீவ் கொலையாளிகளின் விடுதலை தொடர்பான சர்ச்சை ஏற்பட்டுள்ளது. எடுத்தேன் கவிழ்த்தேன் என்ற முடிவால் இன்று கொலையாளிகளின் விடுதலை கேள்விக்குறியாக நிற்கிறது. இதற்காக போராடிய தமிழ் அமைப்புகள் அடுத்தகட்டமாக ஒன்றும் செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

பல வழக்குகளில் சிறையில் இருக்கும் ஆயுள் தண்டனை கைதிகள் மற்றும் மரண தண்டனை கைதிகளை தட்டியெழுப்பி அவர்களும் விடுதலை தொடர்பாக ஜனாதிபதியை அணுக முயற்சிகளை மேற்கொள்ள தூண்டி விடப்பட்டுள்ளார்கள்.

மத்திய அரசும் மாநில அரசும் பேசி, கொலையாளிகளின் தண்டனையை குறைக்கலாம் என்று கூறிய உச்ச நீதி மன்றமே, இன்று விடுதலை செய்தால் ஏற்படும் ஆபத்து தொடர்பான அப்பீல் மனுவை ஏற்றுக்கொண்டு அவர்களது விடுதலை தொடர்பாக தமிழக அரசிடம் விளக்கம் கேட்டு மார்ச் 6 வரை இடைக்கால தடை விதித்துள்ளது.

தமிழக அரசின் இந்த அவசரம் தொடர்பாக பல விமர்சனங்கள் எழுந்தன மட்டுமல்லாமல், தமிழக முதல்வரின் பிரதமர் கனவிலும் திரைகள் விழுந்துள்ளன.

# கூலிப்படைகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவராவிடின் பிராந்தியத்தில் பதட்டத்திற்கு இலங்கை மையமாகலாம்



மஸிஹுத்தீன் இனாமுல்லாஹ்

ஜெனீவாவில் மார்ச் மாதம் அமெரிக்காவால் கொண்டு வரப்படவுள்ள இலங்கைக்கு எதிரான போர்க்குற்ற மற்றும் மனித உரிமைகள் மீறல் பிரேரணை இன்று தேசத்தினதும் பிராந்தியத்தினதும் கவனத்தை கவ்வியுள்ளது.

சர்வதேச மற்றும் பிராந்திய அரங்கில் மேலைத்தேய ஆசிய மற்றும் தென்னாசிய சக்திகளுக்கிடையிலான பனிப்போர் போன்றதோர் அதிகாரப் போட்டா போட்டிக்கு இலங்கையின் கள நிலைவரங்களை சாதகமாக்கிக் கொடுப்பதில் இலங்கை வெளிவிவகார அமைச்சும் பாரிய பங்களிப்பினைச் செய்துள்ளதாகவே எனக்குத் தெரிகிறது.

சர்வதேச சமூகம் என அழைக்கப்படும் மேலைத்தேய முதலாளித்துவ, மேலாதிக்க சக்திகளின் காலடியில் புலம்பெயர்ந்த தமிழர்களையும் தமிழ்த் தேசிய அரசியலையும் கதியென்று கிடக்கச் செய்வதில் தற்போதைய அரசியல் தலைமை, குறிப்பாக போருக்குப் பின்னர் செய்துவருகின்ற பாரிய அரசியல் தவறுகள், அதன் எதிர் காலத்தை கேள்விக் குறியாக்கியுள்ளது.

சாணக்கியமாகவும் சமயோசிதமாகவும் அரசியல் ரீதியாக அரவணைத்துக் கொள்ளப்பட வேண்டிய ஜனநாயக நீரோட்டத்திலுள்ள தமிழ்த் தேசிய தலைமையினை, குறிப்பாக வட மாகாணசபை நிர்வாகத்தினை, இந்த அரசியல் தலைமை தமக்கு சாதகமாக வென்று கொள்ளாது பாரிய அரசியல் இராஜதந்திர பிழைகளை செய்து வருகிறது.

அதேபோன்று, தமக்கு எதிராக சர்வதேசமே சுனாமிபோல் திரண்டு வருகின்ற ஒரு சூழ்நிலையில் தேசத்தின் சுதந்திரத்திற்கும் ஒருமைப்பாட்டிற்கும் சமாதான சகவாழ்விற்கும் பாரிய பங்களிப்பினைச் செய்த, அதேபோன்று யுத்தத்திலும் சமாதானத்திலும் பாரிய விலையினைச் செலுத்தியுள்ள, முஸ்லிம் சமூகத்தின் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள காடைத்தனங்களை அரசினால் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர முடியாமல் போனமை அல்லது அவ்வாறான தரப்புக்களை அரசியல் பங்காளிகளாகக் கொண்டுள்ளமை தற்போதைய அரசியல் தலைமை தமக்குத் தாமே இழைத்துக் கொண்டுள்ள மிகப் பெரும் அரசியல் தவறுகளாகும்.

சர்வதேச முஸ்லிம் உம்மத்தாயினும் சரி, இலங்கை முஸ்லிம் சமூகமாயினும் சரி சர்வதேச சமூகம் எனும் மேலைத்தேய யூத சியோனிஸ மேலாதிக்க சக்திகளின் மீது நம்பிக்கை வைக்காவிடினும், தேசிய அரசியலில் முஸ்லிம்களது நிலை சரணாகதியாகவும் அதேவேளை, பெரும் அவநம்பிக்கையை தோற்றுவித்துள்ளமையும் கவலைக்கிடமான அம்சங்களாகும்.

அதிகாரத்தையும் அச்சுறுத்தலையும் பேரின மேலாதிக்கத்தையும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ முஸ்லிம் அரசியல் சிவில் மற்றும் சன்மார்க்கத் தலைமைகளின் மீது பிரயோகிப்பதன் மூலம் இலங்கையின் எந்தவோர் அரசியல் தலைமையும் தத்தமது சொந்த அரசியலையும் மொத்த தேசிய அரசியலையும் முகவர்களூடாக முன் கொண்டு செல்ல முயல்வதாயின் அது மிகப் பெரிய வரலாற்றுத் தவறாக மாறி விடலாம்.

ஆட்சியிலுள்ள எந்த அரசாயினும் இதயசுத்தியுடன் சிறுபான்மையினரோடு, குறிப்பாக முஸ்லிம்களோடும் சமாதான சகவாழ்விற்கான அடித்தளங்களை இடாவிடின், அதேவேளை சர்வதேச பிராந்திய சக்திகளின் கூலிப்படைகளாக தொழிற்படும் இன, மத வெறியர்களை பூரண கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவராவிடின், மத்திய கிழக்கில் பதட்டத்திற்கு பாலஸ்தீன் மையமாக இருப்பதுபோல், பிராந்தியத்தில் பதட்டத்திற்கு இலங்கை மையமாக மாறி விடலாம் என்பதில் சந்தேகமில்லை.


தற்போதைய அரச தலைமையை (இலங்கையை அல்ல) சர்வதேச அரங்கில் ஆட்சி மாற்றத்தினை இலக்காகக் கொண்டு தனிமைப்படுத்தவே இலங்கையில் கூலிப்படைகளைக் கொண்டு இன, மத வெறி பிரச்சாரங்களை நோர்வே, அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் போன்ற நாடுகள் மேற்கொள்வதை பல்வேறு தரப்புக்களும் உணர்த்தியுள்ள நிலையிலும் அரசியல் தலைமை முஸ்லிம் சமூகத்தின் உள்ளக மற்றும் சர்வதேச அரசியல் பரிமாணங்களை அவற்றின் சரியான கோணங்களில் உள்வாங்கத் தவறியுள்ள அதேவேளை, அவற்றின் அரிச்சுவடிகளைக் கூட சரணாகதி முஸ்லிம் அரசியல் தலைமைகள் அறியவில்லை. அல்லது அதற்கான அடிப்படைத் தகைமைகள் அவற்றிடம் இல்லை என்பதுவும் மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர் ராஸிக் பரீத், முஸ்லிம் மாணவர்கள் அனைவரும் கல்விகற்க வேண்டும் என்பதற்காக நாடுபூராக பல பாடசாலைகளை நிறுவினார். அக்காலத்திலிருந்த தலைவர்கள் சமூகத்தின் பிரச்சினைகளைக் கண்டறிந்து கவலைப்பட்டு, கரிசனைகொண்டு, அதற்கு என்ன செய்யலாம் என்று சிந்தித்து அதற்கான திட்டத்தை வகுத்து செயற்படுத்தினர். இன்று அத்தகைய தலைவர்களின் வெற்றிடம் நிலவி வருகின்றது. அவர்களைப் போன்றவர்கள் உருவாகவேண்டும் என்றால் சமூகத்தைப் பற்றிய கரிசனையும் கவலையும் சமூக விடயங்களில் அக்கறையும் அவதானமும் தேவை. எனவே, இவை படித்தவர்கள் மத்தியில் காணப்பட வேண்டும் என ஜாமீஆ நளீமிய்யாவின் பணிப்பாளர் கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி தெரிவித்தார். அவர் எங்கள் தேசத்திற்கு வழங்கிய நேர்காணலிலே இவ்வாறு தெரிவித்தார். அவருடனான நேர்காணலை எங்கள் தேசம் வாசகர்களுக்காகத் தொகுத்துத் தருகின்றோம்.

# முஸ்லிம் சமூகம் கரிசனையுள்ள தலைவர்களை வேண்டி நிற்கிறது

## கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி



**கேள்வி: 1960 க்கு பின்னர் இனரீதியான பாடசாலைகள் உருவாக்கப்பட்டன. இந்நிலையில் முஸ்லிம் பாடசாலைகளின் அடைவுகள் எவ்வாறுள்ளன?**

**பதில்:** முஸ்லிம் பாடசாலைகள் உருவாக்கப்பட்டதன் நோக்கம் இஸ்லாமிய கலாசார, பண்பாட்டு விழுமிய மதசூழலில் கல்வியைப் பெறுவதே. இந்தவகையில் முஸ்லிம் பாடசாலைகள் கணிசமான பங்களிப்பை ஆற்றிவருகின்றன. கடந்தகால செயற்பாடுகளை பார்க்கும்போது, இவை உருவாக்கப்பட்டதன் நோக்கத்தை ஏதோ ஒரு வயில் அடைந்துள்ளன என்பதை நாங்கள் தயக்கமின்றிக் கூறலாம்.

**கேள்வி: இலங்கை முஸ்லிமகள் மத்தியில் முன்மாதிரிமிக்க ஆளுமை என்றவகையில் உங்களுடைய கல்வி அனுபவங்களை இளைய சமூகத்திற்காக பகிர்ந்து கொள்ள முடியுமா?**

**பதில்:** என்னுடைய கல்வி அனுபவங்களைப் பொறுத்தவரை நான் குறிப்பிட வேண்டிய விடயம், எனக்கு மிக ஆரம்ப காலம் முதல் கிடைத்த நல்ல ஆசிரியர்களின் அர்ப்பணிப்பைதான்.

**பதில்:** எதிர்கால தலைவர்கள், நாம் வாழுகின்ற சமூகத்திலிருந்தும் பாடசாலைகளிலிருந்தும்தான் உருவாகிறார்கள். அத்தகைய தலைவர்கள் உருவாகுவதற்கான ஆரம்ப அடித்தளம் வீட்டுச் சூழலும் பாடசாலையுமாகும். ஒரு முஸ்லிம் ஆசிரியரின் ஆசிரியப் பணியென்பது ஒரு நல்ல முஸ்லிம் ஆளுமைகளை உருவாக்குவதாகும். இந்த ஆளுமையை உருவாக்குவதற்கான வழிதான் அறிவுப் போதனையாகும். அறிவுப் போதனையுடன் ஒழுக்க பண்பாட்டு பயிற்சியையும் ஆசிரியர் வழங்கவேண்டும்.

மாணவர்கள் ஒவ்வொருவரினதும் தனிப்பட்ட திறமைகளையும் அவர்களிடம் மறைந்து காணப்படுகின்ற ஆற்றல்களையும் வெளிக்கொண்டு வருவதற்கு முயற்சிக்க வேண்டும். இதனூடாக ஒரு நல்ல தலைமைத்துவமிக்க ஒரு பாரம்பரியத்தை உருவாக்க முடியும். இன்று ஆசிரியர் பணி வகுப்பறையில் பாடங்களைப் புகட்டுவதும் பரீட்சைக்கு ஆயத்தப்படுத்துவதுடன் மட்டும் நின்றுவிடுகின்றது. ஆனால், எங்கள் காலப்பிரிவில் கல்வி புகட்டிய ஆசிரியர்கள் மாணவர்களின் உள்ளார்ந்த திறமைகளை இனங்கண்டார்கள். என்னில் பேச்சாற்றல் மறைந்து உள்ளார்ந்தமாக இருக்கலாம். ஆனால், அதனை இனங்கண்டு தூண்டி வளர்க்கக் கூடிய வழிகாட்டி கிடைக்காதுவிட்டால் அந்த ஆற்றலும் திறமையும் அப்படியே மங்கி மறைந்திருக்கும். எனது ஆளுமைகளைமேம்படுத்திவிட்ட ஆசிரியர்கள்போல் இன்றைய மாணவர்கள் திறமைகளையும் உள்ளார்ந்த ஆற்றல்களையும் வெளிக்கொணரக் கூடிய சூழல் அமைந்தால் நிச்சயமாக எல்லா மாணவர்களும் திறமைசாலிகளாக மாறிவிடுவார்கள். இதற்காக நான் அடிக்கடி ஓர் உதாரணத்தை கூறுவதுண்டு. ஓர் ஆலமரத்தை நீங்கள் பார்த்தால், பிரமாண்டமாக இருக்கும் அதன் விழுதுகள் எல்லாம் நாலா பக்கமும் படர்ந்து பூமியில் ஆழமாக பதிந்திருக்கும். ஆனால், அந்த ஆலமரத்தின் ஆரம்பம் ஒரு சிறிய விதை அந்த சிறிய விதைக்குள்தான் பெரும் ஆலமரத்தின் சக்தி அடங்கியிருக்கின்றது. அந்த ஆல விதையை யாராவது ஒருவர் தூவிவிட்டால் அது கல்லில்பட்டு தெறித்து அந்த பொடன்சியாலிடி அப்படியே மறைந்துவிடும். அந்த ஆலம் விதையை மண்ணில் தூவிவிட்டால் மண் அதற்கு பொருத்தமாகி பெரும் ஆலமரமாக வளர்ச்சியடையும். அந்த மறைந்திருக்கும் பொடன்சியாலிடியை (Potentiality) யதார்த்தப்படுத்தல், வெளிக் கொண்டு வருதல் போன்று எல்லா மாணவர்களிடமும் அல்லாஹுத்த ஆலா வழங்கிய உள்ளார்ந்த திறமைகளையும் ஆற்றல்களையும் அமைத்து வைத்துள்ளான். இவை உரிய சூழலில் வெளிப்பட்டால் நிச்சயமாக அது ஒரு சாதனை புரியக்கூடிய சூழலை ஏற்படுத்தும். எந்த ஆசிரியராலும் இந்தவகையில் எனது திறமைகளை இனங்கண்டு, நெறிப்படுத்தி வளர்க்கக் கூடிய நல்ல ஆசிரியர்கள் எனக்கு ஆரம்ப காலத்திலேயே கிடைத்தார்கள். வாசிப்புப் பழக்கத்தை ஆர்வப்படுத்தி, அந்தந்த வகுப்புக்கும் கல்விதரத்திற்குமேற்ப நூல்களை வாசிப்பதற்கு வழிகாட்டினார்கள். என்னில் உள்ளார்ந்தம் புதைந்து காணப்பட்ட எழுத்துத்துறை, பேச்சுத்துறைகளை வளர்ப்பதற்கான அவர்களின் வழிகாட்டல் மிக சிறப்பாகக் கிடைத்தது.

இன்று மாணவர் சமூகத்தைப் பொறுத்தவரை, நல்ல ஆசிரியர்கள், வழிகாட்டல்கள் இருந்தும் அந்த வழிகாட்டல்களை செயற்படுத்தக்கூடிய பொருமை அவர்களுக்கு இல்லை. மிகவும் அவசரமாக படித்துவிட்டு ஒரு தொழிலைப் பெறவேண்டும் என்ற அவசர புத்தி அவர்களிடம் இருக்கின்றது.

எனவே, நல்ல ஆசிரியர்கள் கிடைத்தது எனக்கு ஒரு பேறு. அந்த ஆசிரியர்களின் வழிகாட்டலை முற்றிலுமாக நான் பின்பற்றினேன். எனது அறிவு வளர்ச்சிக்கு இவை அனைத்தும் பங்காற்றின.

நான் எப்போதும் எந்த விடயத்தை எடுத்தாலும் அதில் முழுக்க முழுக்க கவனத்தை செலுத்துவேன். அதற்காக என்னை அர்ப்பணித்து செயற்படும் தன்மை என்னிலிருந்தே வளர்க்கப்பட்டது. எனது கல்வி வாழ்க்கையின் மேம்பாட்டிற்கும் வளர்ச்சிக்கும் முதலாவதாக நான் அல்லாஹ்வை துதிக்கின்றேன். அடுத்து எனக்குக் கிடைத்த ஆசிரியர்களை நன்றியுடன் நினைவுகூர்கிறேன்.

**கேள்வி: உங்களுடைய பல்கலைக் கழக வாழ்க்கை பற்றியும் அங்கு செல்வாக்கு செலுத்திய ஆளுமைகள் பற்றியும் சற்றுக் கூறுங்கள்?**

**பதில்:** பல்கலைக்கழக வாழ்க்கையை அறிவு வாழ்க்கையின் ஒரு முக்கிய கட்டமாக கருதுகின்றேன். எங்களுடைய காலத்தில் ஒரு நல்ல அறிவுச்சூழல் காணப்பட்டது. அங்கு மிகச் சிறந்த புலமைமிக்க விரிவுரையாளர்கள் இருந்தார்கள். பேராசிரியர் இமாம் அவர்கள் இஸ்லாமிய கற்கையில், குறிப்பாக அரபுமொழியில், மிகவும் புலமைப் பெற்ற ஒருவர். அத்தகைய ஒருவரிடம் நான் கற்கக் கிடைத்தது ஒரு பாக்கியமாகும். அவர் எனது இஸ்லாமிய கல்வித்துறையையும் அரபுமொழி ஆற்றலையும் செம்மைப் படுத்தினார். பேராசிரியர் கைலாசபதி, வித்தியானந்தன் போன்றவர்கள் கூட தமிழ்த் துறையில் வழிகாட்டக்கூடிய நல்ல ஆளுமைகள். நான் பொருளாதாரத் துறையை [illegible] பாடமாக கற்றேன். அதில் பேராசிரியர்களான: எகழிய குணசேகர, வெல் அண்டனிசன், வில்சன் போன்றவர்கள் சர்வதேச அரங்கில் மிகவும் பிரசித்தமாக பரிணமித்தவர்கள். எங்களுடைய காலத்தில் பல்கலைக்கழகத்தில் நிலவிய நல்ல அறிவுச் சூழலினாலும் ஆங்கிலமொழிமூலம் போதனைகள் நடைபெற்றதாலும் மாணவர்கள் கூடிய நேரத்தை வாசிகசாலைகளில் கழித்தார்கள். அங்கிருந்த நூற்களை முழுமையாக பயன்படுத்தினார்கள். அதற்கான வழிகாட்டலை அன்றைய பேராசிரியர்களும் மற்றும் விரிவுரையாளர்களும் வழங்கினார்கள். பேராதனை பல்கலைக்கழக வளர்ச்சியின் உச்ச காலகட்டத்தில்தான் நாங்கள் பட்டம் பெற்று வெளியேறினோம்.

**கேள்வி: இலங்கை முஸ்லிம் கல்வி வளர்ச்சியில் நளீம் ஹாஜியாரினால் உ[illegible]வாக்கப்பட்ட இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்கத்தின் பங்களிப்பு எத்தகையது?**

**பதில்:** இலங்கை முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சியில் ஒரு முக்கியமான காலகட்டத்தில் இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்கம் தோற்றுவிக்கப்பட்டது. அது பல்வேறு துறைகளில் ஆற்றிய பணி, இந்த நாட்டு முஸ்லிம்களின் கல்வியில் மிகக் குறுகிய காலப்பரிவில் ஒரு பெரும் மாற்றத்தைக் கொண்டுவந்தது. முஸ்லிம் பாடசாலைகள் எதிர்நோக்கிய பிரச்சினைகளை இனங்கண்டு அதனைத் தீர்க்க முற்பட்டது. குறிப்பாக அன்று நிலவிய கணிதம், விஞ்ஞானப்பாட ஆசிரியர்களின் பற்றாக்குறைக்கு மறுமலர்ச்சி இயக்கம் வகுத்த திட்டம் ஒவ்வொரு மாவட்டத்திலும் வார இறுதி வகுப்புக்களை நடத்துவதாகும். அந்த வார இறுதி வகுப்புக்களை அந்தந்த மாவட்டங்களில் வெவ்வேறு பாடசாலைகளில் போதிக்கின்ற ஆசிரியர்களை ஓரிடத்தில் அழைத்து மாணவர்களுக்கு வகுப்புக்களை ஒழுங்கு செய்வதாகும். இதன்மூலமாக அந்த மாவட்டத்திலுள்ள மாணவர்கள் கணிதம், விஞ்ஞானக் கல்விகளை வளர்க்கக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. இரண்டாவதாக; வசதியற்ற உயர்கல்வியைத் தொடரமுடியாத மாணவர்களுக்கு பல்கலைக்கழக புலமைப் பரிசில்களை வழங்குவதாகும். அத்துடன் கல்வி வழிகாட்டல் வகுப்புக்களையும் கருத்தரங்குகளையும் மாவட்டந்தோறும் இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்கம் ஏற்பாடு செய்தது. இதனூடாக மிகக் குறுகிய காலப்பகுதியில் மாணவர்களின் பல்கலைக்

**சிறிய விதைக்குள்தான் பெரும் ஆலமரத்தின் சக்தி அடங்கியிருக்கிறது. அந்த ஆல விதையை யாராவது ஒருவர் தூவிவிட்டால் அது கல்லில்பட்டு தெறித்து அந்த பொடன்சியாலிடி (Potentiality) அப்படியே மறைந்துவிடும். அந்த ஆலம் விதையை மண்ணில் தூவிவிட்டால் மண் அதற்கு பொருத்தமாகி பெரும் ஆலமரமாக வளர்ச்சியடையும். மறைந்திருக்கும் பொடன்சியாலிடியை யதார்த்தப்படுத்தல், வெளிக்கொண்டு வருதல் போன்று எல்லா மாணவர்களிடமும் அல்லாஹுத்தஆலா வழங்கிய உள்ளார்ந்த திறமைகளையும் ஆற்றல்களையும் அமைத்து வைத்துள்ளான்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழக பிரவேசம் உயர்ந்தது. அதாவது, இலங்கையில் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்ட 1942ஆம் ஆண்டு முதல் முஸ்லிம் மாணவர்களின் பல்கலைக்கழக பிரவேசம் 1.5% முதல் 2.9% வரைதான் இருந்தது. அது இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்கத்தின் செயற்பாடுகளால் 1984 இல் 5.5% ஆகவும் 1987, 1988 களில் 8.17% மாகவும் உயர்ந்தது.

அன்று, தொழிநுட்பக் கல்வியை வழங்குவதற்கு ஜேர்மன் டெக்னிகள் கொலேஜ் இலங்கை தொழிநுட்பக் கல்லூரி போன்றவற்றில் போதிய இடம் முஸ்லிம் மாணவர்களுக்கு கிடைக்கவில்லை. இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்கத்தின் அடுத்த இலக்காக முஸ்லிம் மாணவர்களுக்கான ஒரு தொழிநுட்பக் கல்லூரியை நிறுவுவதாக இருந்தது. அந்தவகையில், 1922 இல் இக்ரா தொழிநுட்பக்கல்லூரி நிறுவப்பட்டது. இதன்மூலம் இன்று கணிசமான மாணவர்கள் தொழிநுட்பக் கல்வியைப் பெற்று பல்வேறு துறைகளில் தொழில் புரிகின்றனர். எனவே, இந்த இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்கத்தின் பணி மிகவும் மகத்தானதாகும்.

**கேள்வி: பாடசாலை கற்கைமொழி தொடர்பான ஐயப்பாடு சமூக மட்டங்களில் பரவலாக நிலவுகின்றது. இது தொடர்பான உங்களின் அபிப்பிராயம் என்ன?**

**பதில்:** இது மிகவும் சிக்கலான ஒரு பிரச்சினை. இருந்தாலும் வெறும்கோட்பாடுகளை சித்தாந்தரீதியாக நாங்கள் பேசலாம். ஒரு மாணவனின் ஆரம்பக் கல்வி வீட்டுமொழியாக இருக்கவேண்டும் என கல்வி உளவியலாளர்கள் கூறுகின்றனர். இதனை செயற்படுத்துவது இன்றைய சூழலில் கஷ்டமாகவுள்ளது. குறிப்பாக, முஸ்லிம் சமூகத்தை பொறுத்தவரை வீட்டில் ஆங்கிலம் [illegible]ம் குடும்பங்கள் இருக்கின்றன. தமிழ் பேசும் முஸ்லிம் குடும்பங்கள் அதிகமாக இருக்கின்றன. இப்போது சிங்களம் பேசும் குடும்பங்கள் அதிகரித்த வண்ணம் இருக்கின்றன. எனவே, இதைப்பற்றி ஒருமுகமான தீர்வினை வழங்கமுடியாது. வீட்டு மொழி ஒன்றாகவும் கல்விபெறும் மொழி வேறொன்றாகவும் இருக்கின்ற மாணவர்கள் கூட மிக திறமையாக படிக்கின்றார்கள். எனவே, வீட்டு மொழிகளைத்தான் மாணவர்கள் கற்கவேண்டும் என்ற கருத்து வலுவிழந்து வருகின்றது. அந்தக் கருத்தை மீறி சாதனைகள் புரியலாம் என்று மாணவர்கள் நிருபித்துக் கொண்டிருக்கின்றனர். எனது கருத்து என்னவென்றால், இயற்கையாக முஸ்லிம் மாணவர்களுக்கு மொழிகளை சிறப்பாக கற்கும் உச்சரிக்கும் ஆற்றல்கள் அதிகமாக இருக்கின்றன. இந்தவகையில், முஸ்லிம் சமூகத்திற்கு அது பாதகமாக அ[illegible]வில்லை. வீட்டுமொழியல்லாத மொழிகளைக் கற்று அதன் காரணமாக கல்வியில் பின்னடைந்த மாணவர்கள் என்று

நேர்காணல்:
எஸ். ஸஜாத் முஹம்மத் (இஸ்லாஹி)

ஒரு சாராரை குறிப்பிடுவது எங்களுக்கு கடினமாகும்.

**கேள்வி: முன்னோடி முஸ்லிம் அறிஞர்கள் எவ்வாறு முஸ்லிம்களின் அறிவுப் பாரம் பரியத்தை பாடசாலைகளில் மீள்கட்டியமைத்தார்கள்?**

**பதில்:** அறிஞர் சித்திலெப்பை, ஐ.எல்.எம். அப்துல் அஸீஸ், சேர் ராஸிக் பரீத், கலாநிதி பதி உத்தீன் மஃமூத், அறிஞர் எம்.ஏ.எம். அஸீஸ் போன்றவர்கள் அவர்களுடைய காலப்பகுதியில் சமூகத் தேவைகளை இனங்கண்டு அவைகளை நிறைவேற்றி இருக்கின்றார்கள். இதற்கு அவர்களிடம் முக்கியமான இரண்டு விடயங்கள் காணப்பட்டன. ஒன்று, சமூகத்தைப் பற்றிய கவலையும் கரிசனையும். அடுத்தது, இந்த இரண்டினூடாக சமூகத்தில் எற்படும் பிரச்சினைகளை எவ்வாறு தீர்க்கலாம் என்ற கவலையும் இதற்காக தன்னால் எதையும் செய்யலாம் என்ற திட நம்பக்கையும் அவர்களிடம் காணப்பட்டன. அறிஞர் சித்திலெப்பை அவருடைய காலத்தில் கல்வி பின்னடைந்திருந்ததை அவதானித்தார். அதற்கான காரணத்தையும் கண்டறிந்தார். முஸ்லிம்களின் தனித்துவத்தை இழக்க வேண்டி வரும் என்ற அச்சம் காரணமாக முஸ்லிம்கள் ஆங்கிலக் கல்வியைப் புறக்கணித்தனர்.

➡ 16



பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்.

# கவனிப்பாரற்றுப் போகும் கொழும்பு அல் ஹிஜ்ரா முஸ்லிம் வித்தியாலயம்

கொழும்பு கல்வி வலயத்தின் பொரளை கோட்டத்தில் இருக்கும் ஒரேயொரு தமிழ்மொழி மூல பாடசாலை அல் ஹிஜ்ரா முஸ்லிம் வித்தியாலயமாகும். இப்பாடசாலை பொருளாதாரத்திலும் பௌதீகவளத்திலும் கற்றல், கற்பித்தலிலும் போதியளவான சமூக மட்டத்திலான ஒத்துழைப்பின்றி பின்னடைவதால், இதனை மூட வேண்டும் என்ற அழுத்தங்கள் பலவற்றை எதிர்கொள்ளும் துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டு வருகின்றது.


அல் ஹிஜ்ரா முஸ்லிம் வித்தியாலயம் நீண்ட வரலாறைக் கொண்டது. இப்பாடசாலை 1919 ஆம் ஆண்டு மாளிகா கந்த தமிழ் வித்தியாலயமாக ஆரம்பிக்கப்பட்டு, 1957 இல் மாளிகா கந்த முஸ்லிம் வித்தியாலயமாக செயற்பட்டு வந்தது. பின்னர் 1982 ஆம் ஆண்டு அல் ஹிஜ்ரா முஸ்லிம் வித்தியாலயம் எனப் பெயர் பெற்று 1994 ஆம் ஆண்டு 239, சிறீ தம்ம மாவத்தை, கொழும்பு 10 எனும் தற்போதைய முகவரியில் நிரந்தரமாக இயங்கி வருகிறது. இதன் உருவாக்கத்திற்கு முன்னாள் சபாநாயகர் எம்.எச். முஹம்மத் மற்றும் அவரது மகனார் முன்னாள் மேல் மாகாணசபை உறுப்பனர் எஸ். ஹமீத் முஹம்மத் ஆகியோர் பெரும் பங்காற்றியுள்ளனர்.

இரண்டாம் தரப் பாடசாலையாக இயங்கும் இப்பாடசாலையில் முதலாம் தரம் தொடக்கம் க.பொ.த. (சா.த) வரையான வகுப்புகள் நடைபெறுகின்றன. இங்கு மொத்தமாக 270 மாணவர்கள் கல்விகற்று வருகின்றனர்.


எஸ். ஹமீத் முஹம்மத்

இப்பாடசாலை எதிர்கொள்ளும் சவால்கள் குறித்து முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினரும் பாடசாலை உருவாக்கத்திற்கு பங்காற்றியவருமான எஸ். ஹமீத் முஹம்மத் கூறுகையில்: ஒரு பாடசாலை உருவாக்கம் என்பது இலகுவான காரியமல்ல. கொழும்பிலுள்ள முஸ்லிம் மாணவர்கள் தமது இஸ்லாமிய கலாசாரங்களை பின்பற்றி கல்வி கற்கவேண்டும் என்பதற்காக உருவாக்கப்பட்டது. இப்பாடசாலையின் அபிவிருத்தியில் அரசியல்வாதிகள் பாரபட்சம் காட்டுவது கவலைக்குரிய [illegible] நிலவும் வசதியின்மை[illegible] மூடுவதற்கு சிலர் முயற்சிக்கின்றனர். இவற்றை விடுத்து, எமது முஸ்லிம் சமூகத்தின் நலன் கருதி இப்பாடசாலையை அபிவிருத்தி செய்ய அனைவரும் முன்வர வேண்டும்.

இப்பாடசாலையில் வசதி குறைந்த பல மாணவர்கள் கல்விகற்கின்றனர். கொழும்பில் பிள்ளைகளை பாடசாலையில் சேர்ப்பதென்பது இலகுவான காரியமல்ல. பெற்றோர்கள் பாடசாலை அனுமதி விடயத்தில் பல்வேறு பிரயத்தனங்களை எடுக்க வேண்டியுள்ளன. அத்தோடு முஸ்லிம் பாடசாலைகளின் பற்றாக்குறையாலும் தரமின்மையாலும் மாணவர்கள் வேறு பாடசாலைகளில் இணைத்துக் கொள்ளப்படுவதால் அவர்கள் அங்கு பல்வேறு கலாசாரப் பிரச்சினைகளை எதிர்கொள்வது கண்கூடு.


உமர் கத்தாப்

இப்பாடசாலையின் அவசியம் குறித்து பாடசாலை அபிவிருத்திக்குழுவின் செயலாளரும் அகில இலங்கை ஜனாஸா சங்கத்தின் தலைவருமான உமர் கத்தாப் கூறுகையில்: குறைந்தளவான மாணவர்கள் கல்வி கற்பதாகக் கூறி இப்பாடசாலையை இழுத்து மூடிவிட்டு, இங்கு கல்விகற்கும் மாணவர்களை ஏனைய பாடசாலைகளில் இணைப்பதற்கும் முயற்சிக்கிறார்கள். இங்கு வசதி குறைந்த குடும்பங்களின் பிள்ளைகளே கல்வி கற்கிறார்கள். எமது பிரதேச பிள்ளைகள் அதிகம் கற்பதற்கு இப்பாடசாலை தேவை. எமது பிள்ளை வேறு பாடசாலைக்குச் சென்று கலாசாரம், மார்க்க விடயங்களை விட்டுவிட்டு கல்விகற்க முடியாது. இது அவர்களின் எதிர்காலத்தை பாதிக்கும். எமது பிள்ளைகள் நல்லொழுக்கத்துடனும் கலாசாரத்துடனும் கல்விகற்க வேண்டும் என்றே விரும்புகிறோம்.

இப்பாடசாலையில் பல்வேறு குறைபாடுகள் நிலவுகின்றன. இங்கு அதிபர் உட்பட மொத்தமாக 14 ஆசிரியர்கள் கடமையாற்றுகின்றனர். இங்கு துறைசார்ந்த பாடங்களைக் கற்பிப்பதற்கான ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுவதுடன் போதுமான கட்டிட வசதிகளும் இங்கில்லாதிருக்கின்றது. [illegible] இப்பாடசாலையில் இரு மாடி [illegible] ஒரு கட்டிடமே காணப்படுகின்றது. இதில் மேல்பகுதிக்கு மின்சாரம் இல்லை. வகுப்பறைக் கட்டிடம், கூட்ட மண்டபம், ஆசிரியர்களுக்கான அறைகள் மற்றும் விஞ்ஞானகூட வசதி போன்ற பல்வேறு குறைபாடுகள் இங்கு நிலவுகின்றன.


அதிபர் தஸ்லீமா முஹமட் ஜவாத்

அதிபராகக் கடமையாற்றும் தஸ்லீமா முஹமட் ஜவாத் அவர்கள் இப்பாடசாலையைப் பற்றி தெரிவிக்கையில்: முன்னேற்றத்திற்காக அபிவிருத்திக்குழு, பெற்றோர்கள், ஆசிரியர்கள் என எல்லோரும் அயராது பாடுபட்டு வருகின்றோம். முன்பை விட தற்போது மாணவர்களின் வருகையும் பெற்றோர்களின் ஒத்துழைப்பும் பெருமளவில் காணப்படுகின்றன. மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளும் முன்னேற்றமடைந்து வருகின்றன. இருப்பினும், இன்னும் அதனை மேம்படுத்துவதற்கு பல்வேறு தேவைகள் காணப்படுகின்றன. அவற்றை நிவர்த்தி செய்வதற்கான உதவிகள் கிடைக்கப் பெறுமானால் இப்பாடசாலையை இன்னும் முன்னேற்றத்திற்கு கொண்டுவர முடியும்.

கல்வி என்பது ஒரு சமூகத்தின் இன்றியமையாத தேவையும் அடிப்படை உரிமையுமாகும். இதனை முழுமையாக வழங்குகின்ற போதுதான் அந்த சமூகத்தினால் தலை நிமிர முடியும். அல் ஹிஜ்ரா முஸ்லிம் பாடசாலையில் கல்விகற்கும் கொழும்பு வாழ் மாணவர்கள் இப்பாடசாலையை நம்பி தமது எதிர்காலத்திற்கான பயணத்தை ஆரம்பத்திருக்கின்றனர். அவர்களின் சுபீட்சமிக்க எதிர்காலம் இந்தப் பாடசாலையின் அபிவிருத்தியிலும் நிலைத்திருப்பதியிலுமே தங்கியுள்ளது.

ஏ. முஹம்மத் பாயிஸ்

வெறுமனே ஒரு பாடசாலை அதிபர், ஆசிரியர்களினால் மட்டும் அபிவிருத்தி காண முடியாது. இப்பாடசாலையின் அபிவிருத்திக்கு சமூகத்திலுள்ள பலரினதும் ஒத்துழைப்பு அவசியமாகவுள்ளது. கல்விக்காக பங்களிப்புச்செய்வது நீடித்து நிலைத்திருகக்கூடியதும் நன்மை தரக்கூடியதுமான உதவியாகும். இவற்றை சமூகத்திலுள்ள தலைவர்கள், அரசியல்வாதிகள், சமூக நலன்விரும்பிகள் நன்குணர்ந்து அல் ஹிஜ்ரா முஸ்லிம் பாடசாலையை அபிவிருத்தி செய்ய முன்வர வேண்டும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரியா விவகாரத்தில் உலகம் தோல்வியை தழுவியது

**– துருக்கி –**



மக்களை கூட்டுப் படுகொலை செய்ய சிரியாவில் பஷருல் அஸதை அனுமதித்ததன் மூலம் உலகம் தோல்வியை தழுவியது என்று துருக்கியின் வெளியுறவுத்துறை அமைச்சர் அஹ்மத் தாவூத் ஒக்லு தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேலும் அவர் கூறியதாவது; அனைத்து நாடுகளுக்கும் அபாயத்தை விளைவிக்கும் வகையில் சிரியாவில் உள்நாட்டுப் போர் தொடருகிறது. இராணுவம் நவீன ஆயுதங்களை தாக்குதலுக்கு பயன்படுத்துகிறது. சர்வதேச அளவில் இயங்கும் ஆயுதக்குழுக்கள் சிரியா விற்குள் கூட்டமாக வருவது பயங்கரமான சூழலை உருவாக்கியுள்ளது.

சர்வதேச அளவில் சரியான உளவுத்துறை ஒத்துழைப்பு, வெளிநாட்டு ஆயுதக் குழுக்களை சிரியாவிலிருந்து வெளியேற்ற தூண்டுதல் உள்ளிட்ட காரியங்களின் மூலம் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண வேண்டும் என்று தாவூத் ஒக்லு தெரிவித்துள்ளார்.

தொகுப்பு: சஜாத்

## ஸகாத்தை சிரியா மக்களுக்கு முதன்மைப்படுத்துங்கள்

**சவூதி முஃப்தி வேண்டுகோள்**



ஸகாத் வழங்குவதில் சிரியா மக்களுக்கு முதன்மைப் படுத்துங்கள் என்று சவூதி அரேபியாவின் தலைமை முஃப்தி அப்துல் அஸீஸ் பின் அப்துல்லாஹ் வேண்டுகோள் விடுத்துள்ளார். சிரியா மக்கள் நமது சகோதரர்கள். ஸகாத்தை பிறருக்கு அளிப்பதை விட சிறந்தது சிரியா மக்களுக்கு வழங்குவதாகும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

## சவூதி பத்திரிகையின் முதல் பெண் பிரதம ஆசிரியராக சுமைய்யா



சவூதியில் ஓர் ஆங்கில பத்திரிகைக்கு ஒரு பெண் பிரதம ஆசிரியராக பொறுப் பேற்பது இதுவே முதல் முறையாகும். அவர் இதுவரை அப்பத்திரிகையின் பிரதி ஆசிரியராய் பணியாற்றிக் கொண்டிருந் தார்.

காலித் அல்மயீன் என்பவர்தான் இதற்கு முன்பாக சவூதி கெஸட்டின் பிரதம ஆசிரியராக இருந்தார்.

அவர் சுமைய்யா பற்றிக் கூறும் போது: 13 ஆண்டுகள் என்னுடன் பணியாற்றிய சுமைய்யா பத்திரிகைத் துறையில் திறமையும் தகுதியும் அர்ப்பணிப்பு உணர்வும் மிக்கவர்.

ஏற்கனவே இத்துறையில் சவூதி பெண்கள் பலரும் பணியாற்றி வருகின்றனர். வார, மாத இதழ்கள் பலவற்றில் பெண்கள் ஆசிரியராகத் திறம்படச் செயலாற்றி வருகின்றனர்.

இருந்தாலும் ஓர் ஆங்கில நாளிதழுக்கு முதன்மை ஆசிரியராக ஒரு பெண் வருவது இதுவே முதல் முறையாகும்.

## ஒவ்வொரு வருடமும் ஒரு மில்லியன் குழந்தைகள் இறக்கின்றனர்

**அதிர்ச்சிக்குரிய தகவல்**

உலகம் முழுவதிலும் உள்ள குழந்தைகளின் நலனுக்காக பாடுபடும் நிறுவனம் Save the Children. சமீபத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஒவ்வொரு வருடமும் கிட்டத்தட்ட ஒரு மில்லியன் குழந்தைகள் பிறந்தவுடன் முதல் நாளிலேயே இறந்துவிடுவதாக தெரிவித்துள்ளது.

உலகின் அனைத்து பெண்களும் சுகாதார சேவைகளைப் பெற முடிந்தால், உலகம் முழுவதும் ஏற்படும் இந்த மரணத்தின் எண்ணிக்கையை தடுக்கமுடியும். குறைப் பிரசவமும் பிரசவத்தின்போது ஏற்படும் சிக்கல்களும் முக்கிய அபாயங்களாகக் கருதப்படுகின்றன.

சரியான பயிற்சி பெற்றவர்களின் உதவி இல்லாமல் ஒவ்வொரு வருடமும் கிட்டத்தட்ட 40 மில்லியன் பெண்கள் பிரசவிக்கும் நிலைமையை மாற்ற அரசாங்கங்களை அந்த நிறுவனம் கோரியுள்ளது.

குறிப்பாக, தெற்கு சூடானில் வாழும் 10 மில்லியன் மக்களுக்கு உதவி புரிய வெறும் 300 மருத்துவ தாதிகளே உள்ளனர் என்றும் தெரிவித்துள்ளது.

## வல்லுறவு போர் ஆயுதமாகுவதை தடுக்க உச்சி மாநாடு

பாலியல் வல்லுறவை போர் ஆயுதமாகப் பயன்படுத்துவதை எப்படித் தடுப்பது என்பது குறித்து விவாதிக்க உலகத் தலைவர்களின் உச்சி மாநாடு ஒன்று லண்டனில் எதிர்வரும் ஜூன் மாதத்தில் கூட்டப்படும் என்று பிரிட்டிஷ் வெறியுறவுத்துறை அமைச்சர் வில்லியம் ஹேக் அறிவித்திருக்கிறார்.

இந்த மாநாட்டில் 140 உலக நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள், இராணுவ, பொலிஸ் மற்றும் சட்ட வல்லுநர்கள் கலந்து கொள்ள அழைப்பு விடுக்கப்படும்.

மோதல் நடக்கும் பகுதிகளில் பாலியல் வன்முறை குறித்து கவனம் செலுத்தும் மிகப்பெரும் ஒரு கூட்டமாகவும் பாலியல் வன்முறைக்கு எதிராக வழிகாட்டு நெறிமுறைகளை வகுப்பது இந்த மாநாட்டின் நோக்கம் என்றும் இந்த நெறிமுறைகள் சர்வதேச அமைதி நடவடிக்கைகள் உட்பட இராணுவத்தினருக்கு வழங்கப்படும் பயிற்சி என்பன சித்தாந்தத்தில் பயிற்றுவிக்கப் படும் என்றும் ஹேக் கூறினார்.

பாலியல் வன்முறை ஒழிப்பு உலக நாடுகள் நீண்ட காலமாகவே தவிர்த்து வந்திருக்கின்றன என்றும் அவர் வாஷிங்டனில் கூறினார்.

## இஸ்ரேலின் தாக்குதலால் பாதிக்கப்பட்ட சிறுமி தற்போது சொந்தக்காலில் நடக்கிறார்

இஸ்ரேலின் கொடூர குண்டுவீச்சில் காலின் சலன சக்தியை இழந்த ஹதீல் நஸ்மி அல் நஜ்ஜார் எனும் சிறுமிக்கு பல ஆண்டுகளாக தொடரும் சிகிச்சைக்கு பிறகு சொந்தக் காலில் நடக்கமுடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

2008ஆம் ஆண்டு ஏழு வயதாக இருக்கும்போது ஹதீலுக்கு காஸ்ஸா முனையில் இஸ்ரேல் நடத்திய குண்டுவீச்சு தாக்குதலில் கடுமையான காயம் ஏற்பட்டது. இச் சம்பவத்தில் ஹதீலின் காலின் சலன சக்தி இழக்கப்பட்டது. அன்றில் இருந்து ஹதீல் வீல் செயரை நம்பியுள்ளார்.

வெள்ளை பாஸ்பரஸ் உள்ளிட்ட இரசாயனப் பொருட்கள் அடங்கிய குண்டு வீச்சைத் தொடர்ந்து ஹதீலின் கால் இயங்கும் சக்தியை இழந்தது. பல வருடங்களாக கத்தரின் ஹமத் மெடிக்கல் கார்ப்பரேஷனில் அளிக்கப்பட்டு வரும் தொடர் சிகிச்சையின் பலனாக தற்போது சொந்தக் காலில் நிற்கும் நிலையை ஹதீல் எட்டியுள்ளார்.

## வட்ஸ்அப் இல் பேசும் வசதி ஜூன் மாதம் அறிமுகமாகிறது

வட்ஸ் அப் இல் பேசும் வசதி அடுத்த ஜூன் மாதம் அறிமுகம் செய்யப்படவுள்ளது. பிரபல மொபைல் தொழிநுட்ப சேவையான வட்ஸ் அப் இற்கு 450 மில்லியன் வாடிக்கையாளர்கள் உள்ளனர்.

கடந்த வாரம் இந்த சேவையை ஃபேஸ்புக் நிறுவனம் வாங்கியது. அதைத் தொடர்ந்து ஏராளமான புதிய வசதிகளை வட்ஸ் அப்இல் அறிமுகப்படுத்தவுள்ளனர்.

அதன் ஒரு பகுதியாக வரும் ஜூன் மாதம் முதல் வட்ஸ் அப் மூலம் பேசும் வசதி அறிமுகம் செய்யப்படவுள்ளது.

முதல் கட்டமாக அண்ட்ரோய்ட், அப்பிள் IOS போன்களில் அறிமுகம் செய்யப்பட்டு படிப்படியாக பிளாக்பெரரி, நோக்கியா, மைக்ரோசொப்ட் போன்களில் அறிமுகம் செய்யப்படும்.

தற்போது வட்ஸ் அப் இல் வாய்ஸ் மெசேஜ் வசதி உள்ளது. ஆனால், அந்த வசதி மூலம் ஒருவரின் தகவலைப் பெற்ற பின்னரே மற்றவர் தகவல் அனுப்ப முடியும். பேசிக்கொள்ள முடியாது. வைபர் போன்ற தொழிநுட்ப சேவைகள் மூலமாக பேசவும், தகவல்களை அனுப்பவும் முடியும் என்றாலும் வட்ஸ் அப் சேவையே பெரும்பாலான வாடிக்கையாளர்களைக் கவர்ந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## ஐந்து தலைமுறை ஆட்சியாளர்களைப் பார்த்த 125 வயதையுடைய பலஸ்தீன மனிதர்



உலகின் மிகவும் வயதான மனிதர் பலஸ்தீனத்தின் Rajab Al Toum என்பவரே கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம்பெற வேண்டியவர் என அரபு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

125 வயதிலும் ஆரோக்கியமாக இருக்கும் Rajab Al Toum: பெரும்பாலும் ஆலிவ் எண்ணெய், பால் மற்றும் முயல் இறைச்சி ஆகியவைகளையே பிரதான உணவாக உட்கொண்டு வந்ததே தமது ஆரோக்கிய மான நீண்ட ஆயுளின் ரகசியம் எனக் கூறு கிறார்.

இவர் பிரிட்டிஷ் காலணிய ஆட்சியாளர்கள், எகிப்திய ஆட்சி, இஸ்ரேலிய ஆக்கிரமிப்பு மற்றும் பாலஸ்தீனிய, ஹமாஸ் உட்பட ஐந்து வெவ்வேறு காலங்களிலும் வாழ்ந்தவர்.

ஒன்பது பிள்ளைகளின் தந்தையான Rajab Al Toum இன் மொத்த குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கை, 370 ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# மத்திய ஆபிரிக்க இனச்சுத்திகரிப்பின் பின்புலத்தில் பிரான்ஸின் காலணித்துவக் கனவுகள்

ஸகி பவ்ஸ் (நளீமி)

அண்மைக்காலமாக மத்தியாபிரிக்காவில் தீவிர கிறிஸ்தவ மதவாதிகள் தங்களது அதிகாரக் கரங்களால் சிறுபான்மை முஸ்லிம்களை மிகக் கொடூரமாக நசுக்கி வருகின்றனர். மனிதத்துவத்தின் அனைத்து பரிமாணங்களுக்கும் அப்பால் தலைநகரின் நடுவில் உயிருடன் பல முஸ்லிம்களை 'என்டி பலகா' கிறிஸ்தவ தீவிரவாதிகள் சுட்டுப்பொசுக்கும் காட்சிகள் முழு உலகத்தின் மனச்சாட்சியையும் அப்படியே ஒரு தடவை உலுக்கிவிட்டன. சர்வதேச மனித உரிமைக் குழுக்களின் உத்தியோகபூர்வ தகவலின்படி, இதுவரை ஆயிரத்திற்கும் அதிகமான முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் அயல் நாடான சாட்டிற்கும் கெமரூனுக்கும் தப்பியோடியுள்ளனர். மத்தியாபிரிக்காவில் இன்னுமொரு பொஸ்னியாவை அல்லது பலஸ்தீனை ஒத்த அகதிகள் அவலத்தை இப்புதிய இனச்சுத்திகரிப்பு நடவடிக்கைகள் ஏற்படுத்தலாம் எனவும் அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.

25-30 வீதமான முஸ்லிம்களையும் 50 வீதமான கிறிஸ்தவர்களையும் 15 வீதமான சுதேச இனத்தவர்களையும் மத்தியாபிரிக்க குடியரசு கொண்டுள்ளது. 17ஆம் நூற்றாண்டின் மத்தியாபிரிக்காவின் வடக்காக அமைந்துள்ள தெற்கு சாட் பிராந்தியம் முஸ்லிம் நாடாக இருந்தது. அதே நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் முஸ்லிம்களது இராச்சியம் வீழ்ச்சியடைந்தது. இதனால், முஸ்லிம்கள் மத்தியாபிரிக்க குடியரசின் வட கிழக்குப் பகுதிகளுக்கு தப்பி வந்தனர். மேலும், அங்கு சுதேசிகளாக இருந்த சிலை வணங்கிகளுக்கு மத்தியில் பாரியளவில் இஸ்லாமிய தஃவா பிரச்சாரத்தை முன்னெடுத்தனர். இதனால், காலப்போக்கில் வடக்கு மத்தியாபிரிக்க பிரதேசம் முழுவதும் முஸ்லிம்களது செல்வாக்கின் கீழ் வந்தது. Ronga மற்றும் Quola என்ற பெயருடைய இரு முஸ்லிம் கோத்திரங்களுமே வடக்கு மத்தியாபிரிக்காவில் வாழ்ந்து வரும் செல்வாக்குமிக்க இரு கோத்திரங்களாகும்.

1889 - 1959 வரை மத்தியாபிரிக்க குடியரசை பிரான்ஸ் காலணித்துவத்திற்கு உட்படுத்தியது. காலணித்துவ நிகழ்ச்சி நிரலின் ஓரங்கமாக கிறிஸ்தவ மதப் பிரச்சாரம் தீவிரமாக மேற்கொள்ளப்பட்ட நாடுகளில் மத்தியாபிரிக்க குடியரசும் ஒன்றாகும். 1959 ஆம் ஆண்டு மத்தியாபிரிக்க குடியரசிற்கு பிரான்ஸ் சுதந்திரத்தை வழங்கியிருந்த போதிலுங்கூட, இராஜதந்திர ரீதியில் தொடர்ந்தும் தனது தேசத்தின் ஒரு பகுதியாகவே நோக்கியது. எனவே, சுதந்திரத்தின் பின்னர் ஆட்சிக்கு வந்த அனைத்து ஆட்சியாளர்களும் தீவிர கிறிஸ்தவ பின்னணியைக் கொண்டவர்களாகவோ, பிரான்ஸின் நேரடி கையாட்களாகவோதான் இருந்து வந்தார்கள். அவ்வாறு இல்லாதபோது பிரான்ஸின் மறைமுக உதவியுடன் இராணுவப் புரட்சிகள் நேரத்திற்கு நேரம் இடம் பெற்று வந்தன.

2003 ஆம் ஆண்டு பிரான்ஸின் மறைகரத்தால் ஆட்சிபீடமேறிய Francois Bozize மத்தியாபிரிக்காவில் வளர்ந்து வரும் வடக்கு, கிழக்கு பிராந்திய முஸ்லிம்களின் செல்வாக்கை அடக்குவதற்கு திட்டமிட்டு காய் நகர்த்தினார். முஸ்லிம்களை முடக்கும் இலக்குடன் மத்தியாபிரிக்க அரசு வட கிழக்கின் செல்வாக்குப் பெற்ற இரு கோத்திரங்களுக்கு மத்தியில் பல்வேறு பிரச்சினைகளை தூண்டிவிட்டது. அதனைத் தொடர்ந்து சிறிய பிரச்சினைகள் கூட இரு கோத்திரங்களுக்கு மத்தியில் பற்றியெரிய ஆரம்பித்தன. உதாரணமாக, தொழில் வாய்ப்பு மற்றும் வடகிழக்கில் கிடைக்கும் இயற்கை வளங்களை பகிர்ந்துகொள்வதில் ஏற்பட்ட முறுகல் நிலைகள் இரு கோத்திரங்களுக்கு மத்தியில் பகைமையை தீவிரமாக கொழுத்தி விட்டன. விளைவாக கோத்திர மோதல்கள் தீவிரமாகின. பல மாதங்கள் தொடர்ந்த கோத்திர மோதல்களில் 1000 இற்கும் மேற்பட்டவர்கள் இரு கோத்திரங்களிலும் செத்து மடிந்தனர்.

இறுதியில் இரு கோத்திரத்திரங்களும் உடன்பாட்டின் அடிப்படையில் யுத்த நிறுத்தத்தை அறிவித்துக் கொண்டன. பின்னர், வடகிழக்கின் இரு கோத்திரங்களும் வேறு சில கோத்திரங்களையும் இணைத்துக்கொண்டு ஆயுதப் பிரிவொன்றை உருவாக்கி, தங்களை திட்டமிட்டு ஒதுக்கும் கிறிஸ்தவ அரசுக்கெதிராக போராட ஆரம்பித்தன. இரு கோத்திரங்களையும் ஒரேநேரத்தில் சமாளிக்க வேண்டிய நிலைக்கு மத்தியாபிரிக்க அரசாங்கம் தள்ளப்பட்டது. இதனால், மத்திய அரசு இரு கோத்திரங்களுடனும் தனித்தனியான உடன்படிக்கைகளைச் செய்தது. என்றாலும், மத்தியாபிரிக்க அரசு தொடர்ந்தும் வட கிழக்கு முஸ்லிம்களை மிக நுணுக்கமாக நசுக்கும் கைங்கரியத்தை நிறுத்திக் கொள்ளவில்லை. இதனால், விரக்தியுற்ற எதிர்த்தரப்பு இராணுவம் அரசை தாக்குவதற்கு தயாரானது. மறுபுறத்தில், பல இயற்கை வளங்களைக் கொண்ட நாடாக மத்தியாபிரிக்க குடியரசு இருந்தபோதிலும் மிகக் கடுமையான வறுமையும் வேலையின்மையும் அங்கு நிலவுகின்றன. இவ்வாறு மிக மோசமான நிலையை நோக்கி நகர்ந்து கொண்டிருந்த பொருளாதார நிலைகளும் எதிர்த்தரப்பினருக்கு சார்பான கள நிலைமைளாக மாற்றிவிட்டன.

மத்தியாபிரிக்காவின் உள்ளக நிலைமைகள் பதற்றமடைவதைக் கண்ட சாட் அரசு, தனது படைகளை மத்தியாபிரிக்காவுக்குள் அனுப்பி புரட்சியாளர்களின் கோரிக்கைகளுக்கு இணங்க வேண்டும் அல்லது ஜனாதிபதியை பதவி துறக்கவேண்டும் என அறிக்கைவிட்டது. அமெரிக்கா, பிரான்ஸ் மற்றும் சாட் அரசுகளின் பலமான அழுத்தத்தின் காரணமாக ஜனாதிபதி Francois Bozizé சில அரசியல் விட்டுக்கொடுப்புகளுக்கும் நாட்டின் வடகிழக்கு பிரதேசத்தில் வாழும் சிறுபான்மை முஸ்லிம் கோத்திரங்களுக்கும் சமய உரிமைகளை வழங்குவதற்கு இணங்கினார். ஆனாலுங்கூட, உடன்படிக்கைக்கு மாற்றமாகவே Francois Bozizé தொடர்ந்தும் செயற்பட்டுக் கொண்டிருந்தார். எனவே, 'செலகா படை' என்ற பெயரில் முஸ்லிம் கோத்திரங்களும் ஏனைய எதிர்க்கட்சிப் படைகளும் இணைந்து அரசுக்கெதிராக இராணுவப் புரட்சியொன்றை அரங்கேற்றினார்கள். இறுதியில், 2012 ஒகஸ்ட் 12 ஆம் திகதி 'செலகா படை' தலைநகரைக் கைப்பற்றியது. இங்கு குறிப்பிடப்பட வேண்டிய முக்கிய விடயம் என்னவென்றால், செலகா படையில் அதிகமான அங்கத்தவர்கள் முஸ்லிம்கள் என்பதாகும்.



| மத்தியாபிரிக்க குடியரசு சுருக்க அறிமுகம் | |
|---|---|
| தலைநகரம் | : பேன்குயி |
| அயல் நாடுகள் | : சாட், தெற்கு சூடன், கெமரூன் |
| சனத்தொகை | : கிறிஸ்தவர்கள் 50 வீதம், முஸ்லிம்கள் 25-20 வீதம் சுதேசிகள் 20 வீதம் |
| வரலாறு | : 1960 பிரான்ஸிடமிருந்து சுதந்திரம் பெறல். |
| எழுத்தறிவு | : 56 வீதம் |
| பொருளாதாரம் | : தங்கம், கோப்பி, பருத்தி ஏற்றுமதி, விவசாயம். வறுமைக் கோட்டின் கீழ் 62 வீதமானவர்கள் வாழ்கின்றனர். தலைநகரில் மாத்திரம் 23 வீதமானவர்கள் வேலையற்றவர்கள். |


> "பிரான்ஸ் படைகள் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த போதிலுங்கூட, அவர்கள் அதனைத் தடுக்கவில்லை. முஸ்லிம்களை நிராயுத பாணியாக்கிவிட்டு, கிறிஸ்தவ ஆயுதக்குழுக்கள் முஸ்லிம்களை தாக்குவதை ரசித்துக் கொண்டிருந்தது பிரான்ஸ் படை. கடைசியில், பல மில்லியன் மக்கள் அகதிகளாக அயல் நாடுகளில் தஞ்சம் புகும் வரை பாரிஸ் அழகாக தனது அரசியல் நாடகத்தை ஒத்திகை பார்த்துக் கொண்டிருந்தது.

புரட்சியின் பின்னர் புதிய அரசு தெரிவு செய்யப்பட்டது. அதில் மத்தியாபிரிக்காவின் வரலாற்றில் முதல் தடவையாக ஜனாதிபதியாக ஒரு முஸ்லிம் (President Djaotodia) தெரிவானார். இன்னும், புதிய மத்தியாபிரிக்க அமைச்சரவையில் 28 அமைச்சர்கள் பொறுப்பேற்றனர். அதில் 14 அமைச்சர்கள் முஸ்லிம்கள் என்பதும் நோக்கத்தக்கது. புதிய ஜனாதிபதி பதவியேற்றதைத் தொடர்ந்து 'செலகா படை' உத்தியோகபூர்வமாக கலைக்கப்பட்டது பின்னர் தேசியப்படையுடன் இணைக்கப்பட்டது. மத்தியாபிரிக்காவின் அரசை முஸ்லிம்கள் ஜனநாயகமற்ற முறையில் கைப்பற்றிக் கொள்ளவில்லை. மாறாக, மத்தியாபிரிக்காவின் அனைத்து எதிர்க்கட்சிகளினதும் ஏகமனதான தெரிவாகும். மத்தியாபிரிக்க அரசியல், பொருளாதார மற்றும் சமூக வாழ்வில் சிறுபான்மை முஸ்லிம்கள் பெற்றிருந்த முக்கியத்துவத்தை புதிய அரசின் அமைச்சுத் தெரிவு எடுத்துக்காட்டுகின்றது. நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளை முஸ்லிம்களே ஒழுங்கமைத்தனர். இதனை மத்தியாபிரிக்காவின் நடுநிலையான அரசியல் விமர்சகர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்கின்றனர்.

மத்தியாபிரிக்காவின் அரசில் முஸ்லிம்கள் செல்வாக்கு செலுத்துவதை பிரான்ஸ் விரும்பவில்லை. திரைக்குப் பின்னால் நின்று பாரிஸ் பழைய ஜனாதிபதியின் பாதாள உலக அங்கத்தவர்களை முஸ்லிம் அரசுக்கெதிராக தூண்டிவிட ஆரம்பித்தது. இதனால் மீண்டும் நாட்டினுள் ஸ்தீரமற்ற நிலை ஏற்பட்டது. உண்மையில் முஸ்லிம்களால் கைப்பற்றப்பட்ட அரசைக் கவிழ்ப்பதற்கு பிரான்ஸ் தொழிற்பட்டதன் பின்புலம், பட்டவர்த்தனமானது. அதாவது, பழைய அரசாங்கத்தில் நாட்டின் வளங்கள் மற்றும் ஏற்றுமதி, இறக்குமதித் துறை அனைத்தும் தீவிர கிறிஸ்தவ அமைச்சர்களிடமே இருந்தன. இவர்கள் தாராளமாக கிறிஸ்தவ மிஷனரிகளின் மதமாற்ற வேலைத்திட்டங்களுக்கும் பிரான்ஸின் முதலாளித்துவ பசிக்கும் தீனிபோட்டு வந்தனர். ஆனால், புதிய முஸ்லிம்களின் அரசு ஏகாதிபத்தியத்தின் வருமானங்களுக்கு சாவு மணியடித்தது.

➡ 16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Google Webstore

இன்று Application; கள் எமது மொபைல் போன்களை நிறைத்துள்ளன. அவற்றின் பயன்பாடும் இலகு தன்மையும் காரணமாக பலரும் அவற்றை விரும்பி உபயோகிக்கின்றனர். எப்போதும் இணைய தளத்திற்குச் சென்று இணைய முகவரியை பதிந்து இணையதளம் செல்வதை அனைவரும் விரும்புவதில்லை. மேலும் Application கள் கிடைக்கும் பல்வேறு வசதிகள் காரணமாக Application ஐ பயன்படுத்துவோரின் தொகை அதிகரித்துள்ளது.

மொபைல் போனில் மட்டுந்தான் இந்த வசதியா? அப்படியென்றால் கணினியில் இந்த சேவை இல்லையா என அங்கலாய்த்துக் கொண்டிருந்தவர்களுக்கு ஆறுதல் கூருகிறது Google web store. Google Chrome ஐ உங்கள் கணினியில் Google Chrome ஐ நிறுவிக் கொண்டால் அதன் பின் Google web store இல் உங்களுக்கு விருப்பமான தரவிறக்கம் செய்து பயன்படுத்தலாம்.

### 1. Google Navigation Bar




Google இன் சேவைகளை மெனு வடிவில் Google Chrome Web Browser இல் நீங்கள் கண்டிருப்பீர்கள். ஆரம்பத்தில் Google Navigation Bar ஆக பின்வரும் அமைப்பில் இது காணப்பட்டது.

### 2. Google Apps

Google இனால் வழங்கப்படும் சேவைகளை அப்ளிகேஷன் வடிவில் கூகுள் வழங்க முனைந்தபோது கூகுளின் சேவைகள் அப்ளிகேஷனாகத் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. Google இன் சேவைகள் அனைத்தையும் தனித்தனி Application வடிவில் தருகிறது. அதனை உங்கள் Google web browser இன் Home page இல் காணப்படும் Apps எனப்படும் Icon ஐக் கிளிக் பண்ணினால் Download செய்த அப்ளிகேஷன்களைப் பார்வையிடலாம்.

### 3. Chrome App Launcher




Google இன் சேவைகளில் அப்ளிகேஷன் வடிவில் கிடைக்கும் சேவைகளை உங்கள் கணினியில் வைத்து இயக்க இது உதவுகிறது. இதனை Download செய்து கொள்கின்றபோது உங்கள் கணினியில் இவ்வாறு ஒரு Icon தோற்றமளிக்கும்.

### 4. Chrome Apps

Google Webstore இல் பதிவிறக்கம் செய்யும் அப்ளிகேஷன்களை இந்தப் பக்கத்தில் காணலாம்.



### 5. Google Webstore

Google Chrome Web Browser இல் மேலே படத்தில் காட்டியவாறு காணப்படும் Icon ஐக் கிளிக் பண்ணினால் Web store இற்கு உங்களை அழைத்துச் செல்லும்.

இதில் 03 பகுதிகள் காணப்படும்.

1. Apps
2. Extensions
3. Themes
4. Apps

இதன் கீழும் பிரதான 03 வகைகள் காணப்படுகின்றன. அவை ஒவ்வொன்றின் கீழும் உப பகுதிகள் காணப்படுகின்றன.

1. Popular - பிரபலமான Application களை அறிய இது உதவுகிறது.
2. Recommended for you – Google இனால் பிரேரிக்கப்படும் சில Application களை இது பட்டியலிட்டுக் காட்டுகிறது.
3. Collection

இதன் கீழ் பல உப பகுதிகள் வகைப் படுத்தப்பட்டுள்ளன. அவை ஒவ்வொன்றின் கீழும் இன்னும் பல உப பகுதிகள் உள்ளன.

#### For your Desktop

இதனைக் கிளிக் செய்தால் வரும் அப்ளிகேஷன்கள் உங்களது கணினியின் Desktop இல் பயன்படுத்தக் கூடியதாகும்.

#### Offline Apps

Offline இல் பயன்படுத்தக்கூடிய பல அப்ளிகேஷன்கள் உள்ளன. அவற்றை இப் பகுதியில் காணலாம்.

Google Drive Apps நாம் கடந்த இதழில் பார்த்த Google Drive இன் அப்ளிகேஷன்களை இப்பகுதியில் காணலாம். இதுபோல மேலும் பல வகையான அப்ளிகேஷன் வகைகள் காணப்படுகின்றன.

1. Business Tools
2. Education
3. Entertainment
4. Games
5. Lifestyle
6. News & Weather
7. Productivity
8. Social & Communication
9. Utilities

#### Extensions

இப்பகுதியிலுள்ள அப்ளிகேஷன்களை நீங்கள் பதிவிறக்கினால் உங்கள் கூகுள் குரோம் உலாவியின் வலது பக்க மேல் மூலையில் குறித்த Extension இன் Icon தோன்றும். அதனை கிளிக் பண்ணி குறித்த அந்த Extension ஐப் பயன்படுத்தலாம்.


#### Themes

உங்கள் இணைய உலாவியின் பின்னணியை மாற்றுவதற்குத் தேவையான Themes ஐ இதிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

ஜே.எம். அஸீம் (நளீமி)
www.azeemzain.org
azeemzam@gmail.com



# விநோதப் பழக்கங்கள் நிறைந்த ஆப்ரஹாம் லிங்கன்



முன்னாள் அமெரிக்க அதிபர் ஆப்ரஹாம் லிங்கன் ஏழ்மை நிலையில் இருந்து ஒரு நாட்டுக்கே அதிபராக உயர்ந்தவர். இந்த மடுவுக்கும் மலைக்கும் இடையே அவர் பயணப்பட்ட பாதை, போராட்டம் நிறைந்தது. மிகச் சாதாரண இடத்திலிருந்து கற்பனைக்கும் எட்டாத உயரத்தைத் தளராத தன்னம்பிக்கையாலும் அயராத முயற்சியாலுமே அவர் மெய்ப்பட வைத்திருக்கிறார்.

**வேலைக்கு நடுவில் படிப்பு**

ஆப்ரஹாமின் ஒன்பது வயதில் அவருடைய தாய் நான்ஸி இறந்துவிட்டார். அதன் பிறகு சாரா என்ற விதவையை மணந்துகொண்டார் ஆப்ரஹாமின் தந்தை தாமஸ். உறுதியும் அன்பும் நிறைந்த சாராவுடன் மிக எளிதாக ஒட்டிக்கொண்டான் சிறுவன் ஆப்ரஹாம். தாமஸ், சாரா இருவருமே படிப்பு வாசனையற்றவர்கள் என்றாலும் தன் மகனைப் படிக்கச் சொல்லி உற்சாகமூட்டினர். அந்தக் காட்டுப் பகுதியில் புத்தகங்கள் கிடைப்பதே அரிதாக இருந்தது. ஆப்ரஹாம் பல மைல்கள் நடந்து சென்று புத்தகங்களை இரவல் வாங்கிப் படித்தார். ராபின்சன் க்ரூசோ, பில்கிரிம்ஸ், ப்ராக்ரஸ், ஈசாப் கதைகளை அவர் விரும்பிப் படித்தார்.

**சமூக அக்கறை**

1830 இல் இல்லினாய்ஸுக்குக் குடியேறியபோது சிறுவன் ஆப்ரஹாம், இளைஞனாக வளர்ந்திருந்தார். ஆறடி உயரமும் ஆஜானுபாகுவான உடலமைப்பும் கொண்ட லிங்கனுக்கு வேலை எளிதில் கிடைத்தது. தபால்காரர், நில மதிப்பீட்டாளர், கடை உரிமையாளர் எனப் பலவித வேலைகளை அங்கே செய்தார். அவருடைய சமூக ஈடுபாடும் அக்கறையும் அந்தப் பகுதி மக்களிடையே லிங்கனுக்கு நல்ல பெயரைப் பெற்றுத்தந்தது.

**அரசியல் அறிமுகம்**

அமெரிக்காவில் உள்நாட்டுக் கலவரம் மூண்டபோது, இல்லினாய்ஸ் பகுதி மக்கள் தங்கள் தலைவராக லிங்கனை முன்னிறுத்தினார்கள். அதுதான் அவரது அரசியல் நுழைவுக்கான முதல் துருப்புச்சீட்டாக அமைந்தது. அதன் பிறகு நடந்த சட்ட மன்றத் தேர்தலில் வெற்றிபெற்றார். அடிமைத்தனத்துக்கு எதிரான தனது குரலைப் பதிவு செய்தார். அவருடைய இந்த அரசியல் பார்வை, மற்றவர்களிடம் இருந்து லிங்கனை வித்தியாசப்படுத்தியது.

இதற்கிடையே தானாகவே புத்தகங்களைத் தேர்ந்தெடுத்துச் சட்டக் கல்வி பயின்றார். பார் கவுன்சில் தேர்வில் வெற்றி பெற்று, சில காலம் ஸ்பிரிங்ஃபீல்டு பகுதியில் வழக்கறிஞராகவும் பணியாற்றினார்.

**திறமையான வழக்கறிஞர்**

லிங்கனின் வலுவான வாதங்கள் அவரைச் சிறந்த வழக்கறிஞராக முன்னிறுத்தியதுபோல, அவருடைய சிறப்பான திட்டங்கள் அவரைச் சிறந்த அரசியல் தலைவராகவும் உயர்த்தின. தேசிய அரசியலிலும் தடம் பதித்தார். 1861 ஆம் ஆண்டு அமெரிக்காவின் 16 ஆவது அதிபராகப் பதவியேற்றார். திறமை மிகுந்தவர்களைத் தன் அமைச்சரவையில் இணைத்துக் கொண்டார். அவர்களுக்கு, நண்பர்களை உங்கள் பக்கத்திலேயே வைத்துக் கொள்ளுங்கள், எதிரிகளை அதைவிட நெருக்கத்தில் வைத்துக்கொள்ளுங்கள் என்றார். இந்த அணுகுமுறைதான் அவரது வெற்றிக்கு வழிவகுத்தது.

**விநோதப் பழக்கங்கள்**

கம்பீரமும் கண்ணியமும் நிறைந்த லிங்கனின் இன்னொரு முகம் குறும்புத்தனங்கள் நிறைந்தது. ஹானஸ்ட் ஆப் என்று பிரியமாக அழைக்கப்படும் லிங்கன்தான் அமெரிக்காவின் உயர்ந்த அதிபர். அவர் மிகச் சிறந்த கதைசொல்லி. அவருடைய கதை சொல்லும் பாங்குதான் ஆரம்பகாலத்தில் மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்றுத்தந்தது. லிங்கன், சிறந்த நகைச்சுவை மன்னனும் கூட. தாடி வைத்த முதல் அமெரிக்க அதிபரும் லிங்கன்தான். முக்கியமான கடிதங்கள், ஆவணங்களைத் தன்னுடைய நீண்ட தொப்பிக்குள் வைத்துக்கொள்ளும் பழக்கமும் இவருக்கிருந்தது.



# பூகம்பம்

பூகம்பத்திலிருந்து மனிதன் ஓடி ஒளிய வாய்ப்பில்லை. ஆனால், கடும் பூகம்பத்தையும் தாங்குகின்ற கட்டடங்களைக் கட்டுவதற்கான தொழிநுட்பத்தை மனிதன் உருவாக்கியிருக்கிறான். ஆகவே உயிர்ச்சேதம் பொருட்சேதத்தைப் பெரிதும் குறைத்துக்கொள்ள இயலும்.

பூகம்பத்தை முன்கூட்டி திட்டவட்டமாக அறிய இதுவரை வழி கண்டுபிடிக்கப்படவில்லை. குறிப்பிட்ட பிராந்தியத்தில் தோராயமாக சில ஆண்டுகளில் பூகம்பம் ஏற்படலாம் என்று இப்போது அறியமுடிகிறது. எதிர்பார்க்கப்படுகின்ற அந்த பூகம்பம் சில ஆண்டுகளில் நிகழலாம். அல்லது 40, 50 ஆண்டுகள் கழித்தும் ஏற்படலாம். இப்போதுள்ள தொழிநுட்பத்தைக் கொண்டு என்றைக்கு, எப்போது, எந்தளவுக்கு கடுமையான பூகம்பம் தோன்றும் என்று அறிவதற்கு வாய்ப்பே இல்லை.

சுனாமியை பொறுத்தவரையில் ஒரு விசித்திர நிலைமை உள்ளது. சுனாமி தாக்கலாம் என்று கண்டறிந்து கூறமுடியும். கடலில் இதற்கான கருவிகளை நிறுவுகின்றனர். சுனாமிக்குக் காரணமான கடலடி பூகம்பம் ஏற்பட்டால் அந்த இடத்திலிருந்து மிகத் தொலைவில் உள்ளவர்கள் எளிதில் உயிர்தப்ப இயலும்.

ஆனால், கடலடி பூகம்பம் நிகழும் இடத்துக்கு மிக அருகில் வாழ்பவர்களைப் பொறுத்தவரையில் எச்சரிக்கைவிடப்பட்ட சில நிமிடங்களில் சுனாமி அலைகள் வந்து தாக்கும் நிலையுள்ளது. மக்கள் தப்பிச் செல்வதற்கு போதுமான அவகாசம் கிடைக்காமல் போய்விடுகிறது. 2004 ஆம் ஆண்டு சுனாமியின்போது இந்தோனேஷியாவில் [illegible]க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்ததற்கு இதுவே முக்கிய காரணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்கள் தேசம்

தயாரிப்பு: சமீலா யூசுப் அலி

# செவிமடுத்தலெனும் இனிய கலை

▸ உங்களுடன் பேசுபவரின் விடயங்களை உன்னிப்பாக செவிமடுங்கள். அவருடன் தொடர்ச்சியான கண் தொடர்பை (Eye contact) மேற்கொள்ளுங்கள். உட்காரும்போது அவருடைய பக்கத்தை நோக்கி உங்கள் உடலைத் திருப்பிக் கொள்ளுங்கள். அவரிடமிருந்து நீங்கள் எதிர்பாராத அல்லது உங்களுக்குத் தெரியாத விடயங்கள் உங்களை வந்தடையலாம்.

▸ பேசுபவரிடம் தேவையற்ற கேள்விகள் கேட்டு அவரை அசௌகரியத்துக்கு உள்ளாக்க வேண்டாம். ஒருவர் ஒரு விடயம் பற்றி ஆர்வமாகப் பேசிக் கொண்டிருக்கும் போது அதற்கு சம்பந்தமில்லாத அல்லது மனதைக் காயப்படுத்தும் கேள்விகளை ஒருபோதும் கேட்காதீர்கள்.


▸ உடல் அசைவானது செவிமடுத்தலில் முக்கியம் பெறுகிறது: முறையான உடல் அசைவைப் பயன்படுத்துங்கள். கைகளைக் குறுக்காகக் கட்டிக்கொள்வது பிறர் உங்கது கருத்தை ஏற்றுக்கொள்ளவில்லை என்று அர்த்தப்படும். பேசுபவரின் தோளுக்கு அப்பால் அடிக்கடி பார்ப்பது பேச்சில் ஆர்வம் காட்டவில்லை என்பதைக் குறிக்கும். இறுகிய முகத்துடன் இருப்பது வெறுப்பை அல்லது கோபத்தைக் காட்டும். மலர்ந்த முகத்துடன் தளர்வாகவும் ஆதரவாகவும் இருப்பது அவசியம்.

▸ உங்கள் கவனத்தை சிதறடிக்கும் சாதனங்களைத் தூர வையுங்கள். ஒரு நல்ல தொடர்பாடலை அழித்துவிடுவதில் கைத்தொலைபேசிக்கு இணை, வேறில்லை. அடிக்கடி கைத்தொலைபேசியைப் பார்வையிடுவதும் குறுஞ் செய்திகள் அனுப்புவதும் உங்கள் மீதான அவநம்பிக்கையினைப் பேசுபவருக்கு ஏற்படுத்திவிடும்.

▸ பேசுபவர் மீதும் பேசக்கூடிய விடயம் மீதும் உண்மையான அக்கறையோடிருங்கள். அவர்களது உணர்வுகளைப் புரிந்து கொள்ளுங்கள். தேவையான கேள்விகளைக் கேட்டு அவர்களின் மனதில் உள்ளவற்றை வெளிக்கொணர உதவி செய்யுங்கள். உங்கள் எண்ணங்கள் தூய்மையாக இருக்கட்டும். உள்ளர்த்தங்கள் மற்றும் சுயநலங்களுக்கு இடம்கொடாதீர்கள்.

▸ இரகசியங்களைப் பாதுகாக்க மறக்க வேண்டாம். உங்களிடம் தன் உள்ளத்தைத் திறந்து காட்டுபவர்கள், யாரிடமும் இதுவரை சொல்லாத இரகசியங்களை, உள்ளார்ந்த கவலைகளை, விரக்திகளை உங்களிடம் சொல்லக்கூடும். வாழ்வின் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அதை பரகசியப்படுத்துவதையோ, உங்களுக்கு சார்பாகப் பயன்படுத்திக் கொள்வதையோ இட்டு இறைவனைப் பயந்து கொள்ளுங்கள்.

▸ பேசும் விடயங்களை ஞாபக அறைகளில் சேமித்து வையுங்கள். உங்களோடு பேசுபவர்களுக்கு உன்னிப்பான அவதானத்தை வழங்குவதன் மூலம் அவர்கள் என்ன சொன்னார்கள் என்பதை நினைவில் நிறுத்திக்கொள்ள முடியுமாக இருக்கும். மேற்கொண்டு இன்னுமொரு முறை உங்கள் உரையாடலைத் தொடர்வதற்கு இது துணையாக அமைவதோடு உங்களைப் பற்றிய நம்பிக்கையையும் நல்லெண்ணத்தையும் பேசுபவருக்கு ஏற்படுத்தும்.



▸ மொழியின்றிய தொடர்பாடலை மேற்கொள்ளுங்கள். 'பல வார்த்தைகள் சாதிக்காததை, ஒரு தொடுகை சாதித்துவிடும்' என்று சொல்வார்கள். சில நேரங்களில் உங்கள் வார்த்தைகளை விட அன்பான பார்வை, ஆதரவான தட்டிக்கொடுப்பு பேசுபவர்களை ஆறுதல்படுத்தி உங்களோடு நெருக்கமுறச் செய்யும். எனினும் காலம், இடம் மற்றும் சூழலை அறிந்து மொழியின்றிய தொடர்பாடலை மேற்கொள்ளுங்கள்.

▸ 'மௌனம்' எனும் மொழியை சரியாகப் புரிந்து கொள்ளுங்கள். மௌனம் 'சம்மதம்' என்று நம்மில் பலர் குருட்டுக் குதிரை மேல் காலங் காலமாய் ஓடிக் கொண்டிருக்கிறோம். பேசுபவர் மௌனிக்கும்போது அதற்கு ஆயிரம் அர்த்தங்கள் இருக்கமுடியும். மௌனம் சிந்தனையின் விளைவாக அல்லது இயலாமையின் வெறுமையாக இருக்கலாம். அல்லது வெறுப்பின் வெளிப்பாடாகக் கூட இருக்கலாம். அதனை சரியாகப் புரிந்து கொள்ளுங்கள். பேசுபவர்களது உடல்மொழி மற்றும் உணர்வு வெளிப்பாடுகளைக் கொண்டு இதனை அனுமானித்து அதற்கேற்ற முறையில் செயற்படுங்கள். பேசத் தயங்குபவரை எக்காரணம் கொண்டும் வற்புறுத்தி பேசவைக்க வேண்டாம்.



அதிகம் பேசுபவர்களை விட அதிகம் செவிமடுப்பவர்களையே உலகம் விரும்புகிறது. சிலர் தங்களுடைய எண்ணங்களையும் கருத்துக்களையும் மிகச் சிறப்பான முறையில் மற்றவர்களுக்கு சொல்வதற்கான நாவன்மையும் சொல்வளமும் வாய்த்தவர்களாக இருப்பார்கள். எனினும், மற்றவர்களின் கருத்துக்களுக்கும் உணர்வுகளுக்கும் மதிப்பளித்து செவிமடுக்க முடியாதவர்களாக இருக்கும் பட்சத்தில் நாளடைவில் அவர்களை மக்கள் புறக்கணிக்கத் தலைப்படுவார்கள்.


பல சமயங்களில் செவிமடுத்தல் என்பதை தலைவர்களுக்கும் உளவளத் துணையாளர்களுக்கும் வைத்தியர்களுக்கும் மட்டும் தேவையானதொன்றாக நாம் பிழையாக எண்ணுகின்றோம். நல்ல செவிமடுப்பாளார்களாக இருப்பது நல்ல வாழ்க்கைத் துணைகளாக இருப்பதற்கும் சிறந்த பெற்றோராக இருப்பதற்கும் மட்டுமல்லாது, வாழ்க்கையில் பல துறைகளிலும் தனித்துவமான முத்திரை பதிக்க நிச்சயமாக துணைபுரியும்.

சமீலா யூசுப் அலி

---

# பசியின்மையை போக்க சில வழிகள்...

ஆரோக்கிய தேசம்



சாப்பாட்டுக்கு வழியின்றி வாடுவோர் ஒருபுறம் என்றால், விதவிதமான சாப்பாடு இருந்தாலும் பசியின்றித் தவிப்போர் இன்னொரு புறம். ருசியான உணவுகளைக் கூட சாப்பிட விடாமல் செய்யும் பிரச்சினைதான் பசியின்மை. இதற்குப் பல்வேறு காரணங்கள் உண்டு. பசியை அதிகரித்து, உணவுகளை விரும்பி சாப்பிட நீங்கள் உணவுப் பழக்கத்தில் கடைபிடிக்க வேண்டிய விஷயங்கள் உள்ளன. அதனைக் கடைப்பிடித்தால் பசியின்மையிலிருந்து விடுதலை பெறலாம்.

நல்ல உடல் நலத்துக்கு 40 க்கு மேற்பட்ட ஊட்டச்சத்துக்கள் அவசியம். எனவே உங்கள் உணவு தினமும் ஒரே வகையானதாகவோ, ஒரு வேளையில் ஒரே வகை உணவு மட்டுமோ இருக்கக்கூடாது. தினசரி உணவுடன் கூடுதலாக பழங்கள், காய்கறிகள், பால் பொருட்கள், இறைச்சி, கோழி, மீன் மற்றும் பிற தானிய உணவுகள் இவற்றில் ஏதாவது ஒன்றிரண்டை கூடுதலாக சேர்த்துச் சாப்பிடுங்கள்.

சமைக்கும் உணவு சுவையாக இருந்தால் தான் நம்மால் விரும்பிச் சாப்பிட முடியும். எனவே வழக்கமான காய்கறிகள் என்றாலும் கொஞ்சம் வித்தியாசமான தயாரிப்பு முறையில் சமைத்துச் சாப்பிடுங்கள். சமையல் புத்தகங்கள் அல்லது விதவிதமாக சமைக்கும் அனுபவமுள்ளவரின் உதவியை நாடுங்கள்.

உடல் ஆரோக்கியமாக இருக்க மிதமான அளவில் உணவு சாப்பிடுவதை வழக்கமாக்கிக்கொள்ள வேண்டும். அளவாகச் சாப்பிடுவதுதான் சரியான நேரத்துக்கு பசியைத் தூண்டும். உங்களுக்குப் பிடித்த உணவை கூடுதலாகச் சாப்பிடுவதும் மற்ற உணவுகளை தேவையை விட குறைவாக எடுத்துக்கொள்வதும் உடலுக்குத் தீங்கு தரும். இது பசியின்மையையும் உணவின் மீது வெறுப்பையும் ஏற்படுத்தக்கூடும்.

சிலருக்கு புதுப்புது உணவுகளை சுவைத்துப் பார்ப்பது பிடிக்கும். அடிக்கடி புதிய உணவுகளைச் சேர்த்தால் ஜீரண நேரம் மாறுபடுவதால் பசியெடுப்பதில் பிரச்சினைகள் வரலாம். வழக்கமான உணவுகளை சுழற்சி முறையில் சாப்பிடுவது எளிதான செரிமானத்துக்கு வழிவகுக்கும். வழக்கமான நேரத்திற்கு பசியையும் தூண்டும்.

சேர்க்கவேண்டிய உணவுகளைச் சேர்ப்பதும் தவிர்க்கவேண்டிய உணவுகளைத் தவிர்ப்பதும் சிறப்பான உணவுப் பழக்கமாகும். உடல் நலத்தில் அக்கறைகாட்டும் பலரும் அதிக ஊட்டச்சத்துள்ள உணவை விரும்பிச் சாப்பிடுகிறார்கள். ஒவ்வொருவர் உடலுக்கும் தேவையான சத்துக்கள் மாறுபடும். எனவே, உணவு ஆலோசகரின் பரிந்துரைப்படி சத்தான உணவுகளைச் சேர்க்கவும் அவசியமற்ற நொறுங்குத் தீனி போன்ற உணவுகளைக் குறைக்கவும் தவிர்க்கவும் செய்யுங்கள்.

எல்லா உணவுகளும் அவசியமானதும் சத்தானதும் அல்ல. ஒருமுறை கொழுப்பு, உப்பு மற்றும் சர்க்கரை நிற்றைந்த உணவுகளை நீங்கள் உட்கொண்டால் மறுமுறை அந்த சத்துக்கள் குறைவாக உள்ள உணவை உண்ணவேண்டும். அதேபோல ஒரு சத்தான உணவை தவிர்க்கவேண்டிய சூழல் ஏற்பட்டால் அடுத்தமுறை அந்த உணவை அவசியம் சேர்த்துக் கொள்ளுங்கள். நீங்கள் சாப்பிடும் உணவுகள் நீண்ட காலத்துக்கு உங்கள் ஆரோக்கியத்துக்கு பக்கபலமாக இருக்கவேண்டும் என்பதற்காகவே உணவுகளை தேர்ந்தெடுத்து சாப்பிடுங்கள்.

## ஜலதோஷம் பற்றிய தகவல்கள்



மழை காலம் என்றாலே ஜலதோஷம், காய்ச்சல் போன்ற பிரச்சினைகளுக்கு தயாராக இருப்பது அவசியம். அதுமட்டுமின்றி, அது தொடர்பான அடிப்படை விஷயங்களை தெரிந்து வைத்திருப்பதும் மிக அவசியமாகும்.

ஜலதோஷம், காய்ச்சல் போன்றவை நம் கைகளில் ஒட்டிக்கொள்ளும் கிருமிகள் வழியாகத்தான் அதிகம் பரவுகின்றன. இதனால் முதலில் உங்கள் கைகளை அவ்வப்போது சுத்தமாக கழுவிக்கொள்ள வேண்டும். 20 நொடிகளுக்கு நன்கு இரண்டு கைகளையும் தேய்த்துக் கழுவவேண்டும்.

உடலுழைப்போ அல்லது உடற்பயிற்சியோ சீராக மேற்கொண்டு வரும் பட்சத்தில் நமது உடலுக்குத் தேவையான எதிர்ப்புச் சக்தி கிடைத்துவிடுகிறது. அது மட்டுமன்றி ஜலதோஷம், காய்ச்சல் போன்றவை வந்தாலும் எளிதில் குணமடைந்துவிடும் வலிமை உடலுக்கு வாய்க்கிறது. எனவே, உடற்பயிற்சி என்பது ஒரு நோய்த் தடுப்பு மருந்தும்கூட என்பதை மறந்து விடக்கூடாது.

ஜலதோஷமுள்ள ஒருவரிடமிருந்து நீங்கள் 6 அடி சுற்றளவில் இருந்தாலே போதும் அந்த நோய் உங்களுக்கும் தொற்றுவதற்கு வாய்ப்பிருக்கிறது. எனவே, அவர்களிடமிருந்து இந்த 6 அடி தூரத்தில் தள்ளி இருப்பது நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(13 ஆம் பக்கத் தொடர்)

## மத்திய ஆபிரிக்க...

இந்தப் பின்புலத்தில் பிரான்ஸின் அரச திட்ட வகுப்பாளர்கள் கிறிஸ்தவ பாசிஸ் அமைப்புகளுக்கு ஆயுதரீதியாகவும் அரசியல்ரீதியாகவும் ஆதரவளித்தனர். நாட்டில் நிலைமை சற்று சூடுபிடிக்கவே, மத்தியாபிரிக்காவில் இனக்கலவரம் இடம்பெறுகிறது என்ற விளம்பரத்தில் போர் வீரர்களை பிரான்ஸ் குவித்தது. அநேக அரசியல் முன்னறிவிப்புகள் பிரான்ஸ் இரத்தம் சிந்தாத முறையில் ஆட்சி மாற்றமொன்றைச் செய்யலாம் என்றே சொல்லிக் கொண்டிருந்தன. ஆனால், அதற்கு மாற்றமாக பிரான்ஸ் இராணுவ வீரர்கள் செலிகா படையினரின் ஆயுததாரிகளும் இனக்கலவரத்திற்கு ஒரு வகையில் காரணம் என அவர்களின் ஆயுதங்களைக் களைந்தனர். மறுபுறத்தில், கிறிஸ்தவ பாஸிஸ்ட்டுகளின் ஆயுதங்களை களைவதற்கு சூசகமாக பின்வாங்கியது. அதற்கு கிறிஸ்தவ ஆயுதக்குழுக்கள் மக்களோடு மக்களாக கலந்திருக்கின்றன என போலி நியாயத்தை பிரான்ஸ் இராணுவம் முன்வைத்தது. இதனால், பிரான்ஸ் இராணுவ சிப்பாய்களால் நூறு வீதம் கிறிஸ்தவ குழுக்களின் ஆயுதங்களைக் களைய முடியாதுள்ளது என பாரிஸ் கவலை வேறு வெளியிட்டது. இந்தப் பின்புலத்தில்தான், கிறிஸ்தவக் குழுக்கள் முஸ்லிம்களை இலக்குவைத்து பழிவாங்க ஆரம்பித்தன. பிரான்ஸ் படைகள் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த போதிலுங்கூட, அவர்கள் அதனைத் தடுக்கவில்லை. முஸ்லிம்களை நிராயுத பாணியாக்கிவிட்டு, கிறிஸ்தவ ஆயுதக்குழுக்கள் முஸ்லிம்களை தாக்குவதை ரசித்துக் கொண்டிருந்தது பிரான்ஸ் படை. கடைசியில், பல மில்லியன் மக்கள் அகதிகளாக அயல் நாடுகளில் தஞ்சம் புகும் வரை பாரிஸ் அழகாக தனது அரசியல் நாடகத்தை ஒத்திகை பார்த்துக் கொண்டிருந்தது.

ஐக்கிய நாடுகள் சபை நாட்டின் இன முறுகலைத் தீர்த்து வைப்பதற்காக சர்வதேச இராணுவத்தை அனுப்ப தீர்மானம் நிறைவேற்றியபோது, அதற்கு தலைமை தாங்க மத்தியாபிரிக்கா சென்றது பிரான்ஸ். இவ்வாறு திருடனே திருடனைத் தேடும் ஒரு கதாபாத்திரத்தைத்தான் பிரான்ஸ் மத்தியாபிரிக்காவில் அரங்கேற்றிக் கொண்டிருக்கிறது. இன முறுகல் என்ற பெயரில் முஸ்லிம் பெரும்பான்மை அரசைக் கவிழ்ப்பதற்கு பிரான்ஸ் தீட்டிய திட்டமே இனச் சுத்திகரிப்பு நடவடிக்கையின் பின்புலமாகும்.



(10 ஆம் பக்கத் தொடர்)

## முஸ்லிம் சமூகம்...

என கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி அவர்கள் தெரிவித்தார். எங்கள்தேசத்திற்கு அவர் வழங்கிய நேர்காணலின் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது; அப்படியென்றால் ஒரு முஸ்லிம் சூழலில் இந்தக் கல்வியை வழங்குவதன் மூலம் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முடியும் என்று அவர் சிந்தித்த காலப்பகுயில்தான் அராபி பாஷாவுடன் இணைந்து ஐ.எல்.எம். அப்துல் அஸீஸ் போன்றவர்களின் வழிகாட்டலுடன் வாப்பிச்சை மரிக்கார் போன்ற பல செல்வந்தர்களின் உதவியுடன் கொழும்பு ஸாஹிரா கல்லூரியை சித்திலெப்பை நிறுவினார்.

அதேபோன்று சேர் ராஸிக் பரீத், முஸ்லிம் மாணவர்கள் அனைவரும் கல்விகற்க வேண்டும் என்பதற்காக நாடுபூராக பல பாடசாலைகளை நிறுவினார். அக்காலத்திலிருந்த தலைவர்கள் சமூகத்தின் பிரச்சினைகளைக் கண்டறிந்து கவலைப்பட்டு, கரிசனைகொண்டு, அதற்கு என்ன செய்யலாம் என்று சிந்தித்து அதற்கான திட்டத்தை வகுத்து செயற்படுத்தினர். இன்று அத்தகைய தலைவர்களின் வெற்றிடம் நிலவி வருகின்றது. அவர்களைப் போன்றவர்கள் உருவாகவேண்டும் என்றால் சமூகத்தைப் பற்றிய கரிசனையும் கவலையும் சமூக விடயங்களில் அக்கறையும் அவதானமும் தேவை. எனவே, இவை படித்தவர்கள் மத்தியில் காணப்பட வேண்டும். அவ்வாறு காணப்படுகின்ற போதுதான் சமூகத்தின் பிரச்சினைகளை இனங்கண்டு அதனைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளையும் திட்டங்களையும் தீட்டக்கூடிய திறமையும் ஆற்றலும் பெற்றவர்கள் உருவாககும் நிலை ஏற்படும்.

**கேள்வி: கொழும்பு சாஹிராவின் பழைய மாணவர் என்ற வகையில் அறிஞர் அஸீஸ், ரீ.பி. ஜாயா போன்ற முன்மாதிரிமிக்க அதிபர்களை எவ்வாறு உருவாக்கலாம்?**

பதில்: அதிபர்களை உருவாக்க முடியாது; அவர்கள் உருவாக வேண்டும். ஏ.எம். அஸீஸ் அவர்கள் கல்முனையில் அரசாங்க அதிபராக இருந்தார். அவர் அந்தப் பதவியை உதறிவிட்டு கொழும்பு சாஹிராவின் அதிபர் பொறுப்பை ஏற்று அதன் மேம்பாட்டுக்காக உழைத்தார். ரீ.பி ஜாயா அவர்கள் எந்த அடிப்படையில் கச்சிதமாக, திறமையாக வளர்த்துக்கொண்டு வந்தாரோ அதன் அடிப்படையில் ஏ.எம்.ஏ. அஸீஸ் சாஹிராவை பொறுப்பேற்று அதே பணியைத் தொடர்ந்தார். எனவே, நல்ல அதிபர்கள் உருவாகுவது என்றால் இந்த பண்பு அவர்களிடம் இருத்தல் வேண்டும். கல்வியில் ஆர்வமும் சமூகப் பற்றும் சமூக ஆர்வமும் உத்வேகம், குறிக்கோள் போன்ற எல்லா பண்புகளும் அமையப்பெற்ற ஒருவரால் தான் நல்ல அதிபராக வரமுடியும்.

(06 ஆம் பக்கத் தொடர்)

## மன்னர் பைசால்...

இதனால் உலகில் மதிப்புமிக்க விருதாக மன்னர் பைசால் சர்வதேச விருது மாறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. எனினும், எமது நாட்டைச் சேர்ந்த எவரும் இந்த விருதிற்காக தெரிவு செய்யப்படவில்லை என்பது கவலைக்குரிய விடயமாகும்.

இதனால் மன்னர் பைசால் சர்வதேச விருது தொடர்பில் இஸ்லாமிய இயக்கங்கள், நிலையங்கள் மற்றும் பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றுக்கு விழிப்புணர்வூட்டும் நடவடிக்கையை கொழும்பிலுள்ள சவூதி அரேபிய தூதுவராலய கலாசார பிரிவு மேற்கொண்டுள்ளது.

இதனடிப்படையில் எமது நாட்டில் மேற்குறிப்பிட்ட துறைகளில் சேவையாற்றியவர்களை எதிர்வரும் மே முதலாம் திகதிக்கு முன்னர் சிபாரிசு செய்வதன் மூலம் இந்த விருதினை பெற்று நாட்டுக்கு பெருமை சேர்க்க முடியும். இவ்விருது தொடர்பான மேலதிக தகவல்கள் மற்றும் விண்ணப்பங்கள் தேவைப்படுவோர் www.kfip.org என்ற இணையத்தளத்தின் ஊடாக பெற்றுக் கொள்ள முடியும்.



(07 ஆம் பக்கத் தொடர்)

## பொறுப்புக் கூறலில்...

ஏதோ ஒரு வகையில் அது வரும் என்றே தெரிகிறது. சிலபோது மிகவும் கடுமையானதாக அல்லது தளர்ந்ததாகக்கூட இருக்கலாம்.

பலமான பொருளாதார நிலைமை கொண்ட நாடுகள்கூட பொருளாதார தடைகளால் வெகுவாகப் பாதிக்கப்பட்டமையை அறிவோம். லிபியா, ஈரான், கியூபா ஆகிய நாடுகளின் உதாரணங்களை நோக்கினாலும் ரஷ்யாவும் சீனாவும் எவ்வளவு நட்புடன் இருந்தும் ஒன்றும் செய்ய முடியாமற் போனதையும் கண்டோம். எமது நாட்டு துறைமுகத்துக்கு கப்பல் வராத நிலையும் விமான நிலையங்களில் விமானங்கள் இறக்கப்படாத நிலையும் வரலாம். வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் வராத நாடாக மாறலாம். வெளிநாட்டு வேலைவாய்ப்பில் புலமைப்பரிசில்கள், வைத்திய சேவைகள் அற்றுப்போகின்ற நிலைகூட வரலாம்.



முன் பக்கத் தொடர்

## இந்நாட்டில்...

எனக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்த பொதுபலசேனாவுக்கு எதிராக மனித உரிமைகள் ஆணையகத்திடம் முறைப்பாடொன்றை செய்ததுடன் அவ்வமைப்பை தடைசெய்யுமாறு கோரி மனுவொன்றையும் கையளித்தேன். ஆனால், இதுவரையும் இதற்கெதிராக எவ்வித நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை.

இதனையடுத்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்து பொலிஸாரிடம் தஞ்சமடைந்தேன். என்னைப் பொறுத்தவரை இந்நாட்டில் சிறுபான்மையினருக்காக குரல் கொடுப்பவர்களுக்கு பாதுகாப்பே இல்லை.

பாதுகாப்பு வழங்கக்கோரி ஜனாதிபதியிடமும் முறையிட தொடர்புகொள்ள முயற்சித்தபோது அதற்கான சரியான தருணம் எனக்கு அமையவில்லை. எனவே, இது தொடர்பில் அரசு கவனம் செலுத்தி பொதுபலசேனா போன்ற இனவாத அமைப்புகளின் செயற்பாட்டை தடுத்து நிறுத்தவேண்டும் என்றார்.



முன் பக்கத் தொடர்

## முஸ்லிம்களின்...

புத்தளம் சாஹிரா தேசிய கல்லூரியில் மகிந்தோதய தொழிநுட்ப விஞ்ஞான ஆய்வு கூடத்தைத் திறந்துவைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் அவர் தெரிவித்ததாவது;

இன்று, கல்வியின் முக்கியத்துவத்தை இந்நாட்டின் சகல இனத்தவர்களும் உணர்ந்துள்ளார்கள். மாணவர்களுக்கு கல்வியை வழங்குவதில் இன, மத, மொழி போன்ற எவ்விதப் பாகுபாடுகளும் இன்றி அனைத்து இன மாணவர்களுக்கும் சகல வசதிகளையும் வழங்கவேண்டியது எமது கடமையாகும்.

இன்று நாம் புத்தளத்திற்கு இவ்வாறான ஆய்வுகூடங்கள் நான்கினை வழங்கியுள்ளோம். மாணவர்கள் எதிர்காலத் தலைவர்கள். அவர்கள் இன்றைய நவீன தொழிநுட்ப வளர்ச்சிக்கேற்ப தங்களை தயார்படுத்திக் கொள்ள வேண்டியுள்ளது. எனவே இவ்வாறான கல்வி அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. பிள்ளைகள் தரமான கல்வியை பெற்றுக்கொள்ளும் போது மோசமான சிந்தனைகள் அவர்களிடமிருந்து தூரமாகின்றன. அவர்கள் நற்பிரஜைகளாக சமூகத்தில் உருவாகுவார்கள் என்பது எனது எதிர்பார்ப்பாகும்.

முன் பக்கத் தொடர்



## இனி ஆர்ப்பாட்டம் ...

தேர்தல் என்பது மிகவும் முக்கியமான ஒன்று. அதற்குத் தேவையான மனிதர்களைத் தயார்செய்வதே நாம் செய்ய வேண்டியது. மாறாக, நாம் அதில் நேரடியாக ஈடுபடுவது அல்ல. ஒரு சிலர் செய்யும் தவறுகளால் இந்த நாட்டிலுள்ள மக்கள் பௌத்த மதம் வேண்டாமெனக் கருதும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். எனவும் அவர் தெரிவித்தார்.

முன் பக்கத் தொடர்

## ரவூப் ஹக்கீம்...

இந்த விடயம் தொடர்பாக அரசாங்கம் உடனடியாக கவனம் செலுத்தவேண்டும் என்றும் அந்த அறிக்கையில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

முன் பக்கத் தொடர்

## 5 பிள்ளைகள்...

இந்த நிதி உதவியை வழங்கி வருகின்றார். நாளுக்கு நாள் சிங்கள இனம் அழிவடைந்து செல்வதால் இவ்வாறான ஒரு திட்டத்தை முன்னெடுத்துள்ளதாக அவர் சார்ந்துள்ள அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த திட்டத்தின் கீழ் இதுவரையில் 14 குடும்பங்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இதேவேளை, நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைகள் காரணமாக சிறிய குடும்பம் பொன்னானது என்ற கோட்பாட்டை சிங்களவர்கள் பின்பற்றி வருகின்றனர். இது துரதிஸ்டவசமானது. தேசத்தையும் இனத்தையும் கட்டியெழுப்ப அனைவரினதும் ஒத்துழைப்பு அவசியமாகும். எதிர்காலத்தில் முஸ்லிம்களும் தமிழர்களும் பெருபான்மை இனத்தவர்களாக மாறக் கூடிய சாத்தியம் ஏற்பட்டுள்ளது.

எமது மக்கள் பிழையாக வழிநடத்தப் படுகின்றனர். குடும்பக் கட்டுப்பாட்டு சத்திரசிகிச்சைகளை மேற்கொள்கின்றனர். சிங்கள இனத்தை கட்டியெழுப்ப அனைவரினதும் ஒத்துழைப்பு அவசியமாகின்றது என அவ்வமைப்பு மேலும் தெரிவித்துள்ளது.



முன் பக்கத் தொடர்

## சிறுபான்மை...

இந்த தன்மை மாறுவதற்கு எங்களுடைய வரலாற்று உணர்வு மிகவும் முக்கியமாகும். இந்த நாட்டில் நாங்கள் எண்ணிக்கையில் சிறுபான்மைதான். ஆனால், இந்நாட்டுக்கு சிறந்த பங்களிப்பை செய்தவர்கள். ஆயிரம் ஆண்டுக்கு மேலான வரலாற்று பாரம்பரியத்தைக் கொண்டவர்கள் என்ற உணர்வு எங்களுக்கு இருத்தல் வேண்டும். இதனூடாகத்தான் எங்களுக்கு தைரியமும் நம்பிக்கையும் ஏற்படும் என பேருவளை ஜாமிஆ நளீமிய்யா கலாபீடத்தின் பணிப்பாளர் கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி தெரிவித்தார். எங்கள் தேசத்துக்கு அவர் வழங்கிய விசேட செவ்வியிலேயே இவ்வாறு தெரிவித்தார். அந்நேர்காணலின் முழு விபரம் உள்ளே.

முன் பக்கத் தொடர்

## பேஸ்புக்...

நல்லவற்றை மட்டும் தேர்ந்து, அதனைக் கைக்கொண்டு தீயவற்றை புறமொதுக்கி செயற்பட வேண்டும். இதற்காக பெற்றோரும் ஆசிரியர்களும் ஒன்றிணைய வேண்டும்.

பெற்றோராகிய நாங்கள் எதனைத்தான் செய்தாலும் கடைசியில் இந்நாட்டைப் பொறுப்பேற்கவுள்ள சிறுவர்களுக்கு தீய வழியைக் காட்டினால் அது இந்நாட்டுக்கு தீங்காகவே அமைந்துவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டுப்புறவியல்

## கிழக்குத் தென்கோடி

ஏ.எம்.எம். ஸியாத் - இறக்காமம்

(சென்ற இதழின் தொடர்)

### காதல் பாடல்கள்

பொதுவாக, நாட்டார் பாடல்களுள் மிகுதியும் காணப்படுவது காதல் பாடல்களே. இல்லறச் சோலையில் இன்றியமையா விடயமாக காதல் அல்லது அன்பு வேண்டப்படுவதால் என்னவோ இதற்கு தனியிடம் வழங்கப்படுகின்றது. இறைவனின் படைப்புகள் எல்லாமே ஆண்-பெண் உறவை வேண்டிநிற்பது மறுக்கமுடியாத உண்மையும்தானே.

கிராமங்கள் தோறும் பாடப்படும் நாட்டார் பாடல்கள் அக்கிராமச் சூழல் மற்றும் பின்னணிகளை துணையாகக் கொண்டே பாடப்பட்டு வருகின்றன.

பெண்ணொருத்தி தனது முறைக்கார மச்சானின் ஆடையலங்காரத்தைப் பார்த்துப் பெருமிதம் கொள்கிறாள். அதனை அவனிடமே கேட்கும் விதத்தைப் பாருங்கள்:

*அந்திப்பட்ட நேரம்*
*சந்தியால போற மச்சான்*
*நேத்தக்கி ஒருடுப்பு - நீங்க*
*நெய்யிறதோ? வாங்கிறதோ?*

முறைக்கார மருமகள் ஒருத்தி தனது மாமி மகன் மீது விருப்பங்கொண்டு அவனைப் பார்க்க கைநிறையப் பொருட்களோடு செல்கின்றாள். ஆனால், மாமிக்கோ இந்த மருமகளைப் பிடிக்கவில்லை. அதனால், வரவேற்பு மிக மோசமாக அமைந்துவிடுகிறது. வீடு திரும்பிய அவள் தனக்குக் கிடைத்த வரவேற்பைப் பாடல் ஒன்றின் மூலம் தன் வீட்டாருக்குச் சொல்லிவிடுகிறாள்.

*மாமிட்ட போனன்*
*மச்சானப் பாப்பமிண்டு*
*வாலால பிஞ்ச பாய - மாமி*
*காலால் தள்ளி உட்டா*

'வாலால பிஞ்ச பாய்' என்பது வீட்டிலே கிழிந்து பாவனைக்கு உதவாத நிலையில் காணப்படும் பாய் ஆகும்.

பெண்ணிவளின் தலைவன் பொருள் தேடப் புறப்பட்டு விட்டான். இவளுக்கோ அவன் நினைவு வாட்டுகிறது. தனியிடம் சென்று அழுகின்றாள்.

*வண்டமூம் சோலையில புள்ளி*
*மானழுது போன செப்பம்*
*நிண்டழுதேன் கண்டேன்*
*ஒங்கட நெனப்பு வந்த நேரமெல்லாம்*

மாமன் மகன் ஒருவன் முறைக்கார மச்சி ஒருத்தியை பெயர்சொல்லி எவ்வாறு அழைப்பது என யோசிக்கிறான். பின்வரும் பாடலைப் பாருங்கள்:

*மாமி மகளே*
*மருதங்கிளி வங்கிசமே*
*ஏலங்கிராம்பே*
*ஒன்ன என்ன சொல்லிக் கூப்பிடட்டும்*

பெண் எப்போதுமே அழகுதான். ஆனால், தனது குடும்பத்திற்கு பொருத்தமில்லாதவளாகக் காணப்படுகிறாள். அதனால் அவளை மணக்கமுடியாது என்கிறான் தலைவன். மணப்பெண்ணின் அழகு, ஆடம்பரங்களை விட அவளது குணமே பார்க்கப்படும். பாடலைப் பாடித்தான் பார்ப்போமே!

*சொண்டு செவந்த கிளி*
*சோக நிறமான கிளி*
*ஒங்கட மனமொதவா*
*எங்கட சேர்மதிக்கி*

இதுபோன்றே பெண்களும் ஆண்களை எதிர்பார்க்கின்றனர். மாப்பிள்ளையும் அவரது நண்பர்களும்கூட நன்றாக இருக்க வேண்டும் என எதிர்ப்பார்க்கும் பெண்ணின் குரலாகப் பின்வரும் பாடல் அமைகின்றது:

*ஓசரப் பறக்கும்*
*ஒருகோடி நங்கணங்காள்*
*கூடப்பறப்பன் - ஒங்கட*
*கூட்டாளிமார் செப்பமில்லை*

இவ்வாறு பல நூறு காதற் கவிகள் கட்டுடைத்தோடும் வெள்ளமாய்க் கிராமங்கள் தோறும் பாடப்பட்டுள்ளன. இன்னும் பாடப்படுகின்றன.

நாட்டுப்புறவியல் பெரும் சமுத்திரமாய் ஒவ்வொரு பிரதேசத்தையும் பிரதிபலித்து பரவிநிற்கிறது. இதனை அவ்வப் பிரதேச ஆர்வலர்கள் தேடித் தொகுத்து தொன்மையின் கனதியை எதிர்காலத்தவருக்கு எடுத்துக்காட்டுவது பயனுடையதாகும். அவை எம் இருப்புகளை வெளிப்படுத்தவும் உதவும் என்பதில் ஐயமில்லை.

# 40 துஆக்கள் 40 நபிமொழிகள்

சிறு குறிப்பு




தொலைபேசி: 0777472045
விலை: 50.00

மனிதன் தன் வாழ்வில் செய்யும் ஒவ்வொரு விடயத்தையும் இஸ்லாம் வணக்கமாகவே கணிக்கின்றது. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஒவ்வொரு விடயத்தை ஆரம்பிக்கும் போதும் அன்றாடம் ஓதிவந்த துஆக்கள், அவர்கள் செய்துவந்த வழிமுறைகளை 40 துஆக்கள் 40 நபிமொழிகள் என்ற தலைப்பின் கீழ் அழகிய முறையில் தொகுக்கப்பட்டுள்ளன.

துஆக்களை உள்ளடக்கிய பல நூல்கள் வெளிவந்திருந்த போதிலும் அதற்கான ஆதாரங்களை கொண்டமைந்த நூல்கள் ஒருசிலதே. அந்தவகையில், 40 துஆக்கள் 40 நபிமொழிகள் என்ற நூலானது புகாரி, முஸ்லிம், திர்மிதி போன்ற ஹதீஸ் கிரந்தங்களிலிருந்து ஷஹீகான ஆதாரங்களுடன் பல்வேறு தலைப்புகளில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

துஆக்கள் மாத்திரமின்றி இலகுவாக மனனமிட்டுக் கொள்வதற்கு சின்னஞ்சிறிய 40 ஹதீஸ்களையும் இஸ்லாத்தின் ஐம்பெரும் கடைமைகளின் முக்கியத்துவம் உட்பட ஒழுக்கம், கல்வி, சகோதரத்துவம், பண்பாடு, கலாசாரம் போன்ற பல்வேறு அம்சங்களையும் உள்ளடக்கிய உப தலைப்புகளின் கீழ் நபிமொழிகளையும் கொண்டமைந்துள்ளமையானது இந்நூலின் விசேடமாகும்.

சிறியவர்கள் தொடக்கம் பெரியவர்கள் வரை வாசித்து, விளங்கி, மனனமிட்டுக் கொள்வதற்கு ஏற்றாற்போல் அரபுமொழியிலும் அரபுமொழி தெரியாதவர்களும் பயனடைவதற்கு அழகு தமிழிலும் உருவாக்கப்பட்டுள்ளது. 2013 ஏப்பரலில் இதன் முதலாவது பதிப்பும் அதேவருடம் செப்டம்பர் மாதம் இரண்டாவது பதிப்பும் வெளியிடப்பட்டுள்ளன. மூன்றாவது பதிப்பு 2014 மார்ச் மாதம் வெளியிடப்படவுள்ளது. மிகக் குறுகிய காலத்தில் இந்நூல் வாசகர்கள் மத்தியில் ஒளிபரப்பி வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

அத்துடன், இந்நூல் சில அரபுக்கல்லூரிகள், அல்குர்ஆன் மத்ரஸாக்களில் ஒரு பாட அலகாகவும் ஏற்கப்பட்டு நடைமுறையிலும் கொண்டுவரப்பட்டுள்ளது என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கதாகும்.

மௌலவி என்.எம். முஹம்மட் (ஷர்க்கி)

# புளுணையில் சில நாட்கள்...

தொடர்-21



——பஷீர் அலி
kinniyabasheerali@gmail.com

இங்கு விபத்துக்கள் நடப்பதில்லையா?

நடக்குமே! ஒவ்வொரு வருடமும் சிலர் மரணமடைவது இங்கு சகஜமாகும். கடந்த வருடம் ஒரு விபத்தில் எனது தம்பியொருவர் மரணமடைந்தார்.

ஐசே... எப்படியான விபத்துக்கள் நடக்கும்?

படகுகள் கவிழ்ந்து சிறுபிள்ளைகள், நீச்சல் தெரியாதவர்கள் இறந்திருக்கிறார்கள். வேகமாக வரும் படகுகள் ஒன்றோடொன்று மோதி விபத்துக்கள் நடந்திருக்கின்றன. காலநிலை மாற்றத்தினால் விபத்துக்கள் நடக்கும்... என்று அடுக்கிக்கொண்டு போனார் ஹஸ்னி.

வீட்டுக்கு கீழே தண்ணீர், சிறுபிள்ளைகளை பாதுகாப்பது கடினமான காரியமில்லையா? அவர்கள் தண்ணீரில் விழுந்து விடமாட்டார்களா?

தரையில் இருக்கும் குழந்தைகளென்ன விழுந்து எழும்பாமலா இருக்கிறார்கள்? ஆனால் இங்குள்ள குழந்தைகள் பிறந்ததிலிருந்தே இந்த சூழலில் வளருவதால் அவர்கள் அதற்கு இசைவான விதத்திலேயே பழக்கப்பட்டிருக்கிறார்கள்.

எங்கள் ஊரிலுள்ள தலைதெறித்த சில சில்வட்டுக்களை எண்ணிப்பார்த்தேன். அவர்களைக் கொண்டுவந்து கம்பொங் அயரில் இறக்கிவிட்டால் என்ன நடக்கும்? எனக்குள் கற்பனை செய்துகொண்டேன்.

ஹஸ்மி அவரது வீட்டையும் காட்டினார். வாருங்கள் வீட்டுக்குப்போய் மீன் கறியோடு சாப்பிடலாம். துடிக்கத் துடிக்க பிடித்து சமைத்த மீன்குழம்பு... எனறு விருந்துக்கு அழைத்தால் என்ன செய்வதென்று தெரியாமல் இதயம் அடித்துக்கொண்டே இருந்தது. ஹஸ்னி வீட்டுக்கு கூட்டிச் சென்று மீன் வறுவலுடன் சோறு சாப்பிடச் சொன்னால் என்ன செய்வீர்கள்? என்று ஸிஹான் கேட்ட கேள்வி என்னை பயமுறுத்திக் கொண்டே இருந்தது. ஆனால், குடும்பத்தார் வெளியில் எங்கோ சென்றுவிட்டதால் வீடு மூடி இருந்தது.

'அப்பாடா' என்றிருந்தது.

அங்கு பாடசாலை ஒன்று தண்ணீரில் மிதந்து கொண்டிருந்தது. அந்தி வேளையில் சென்றதால் பாடசாலைக்கு உள்ளே சென்று மாணவர்களுடன் பேசும் சந்தர்ப்பம் கிடைக்காமையை இழப்பாகக் கருதினேன். ஆசிரியர்கள் பாடசாலைக்கு வருவதற்கெனப் பயன்படுத்தும் இயந்திரப் படகுகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. அது ஸ்கூல் சேர்விஸ் படகுகள்!

அழகிய வடிவிலமைந்த பள்ளிவாசல்களும் பொதுக் கட்டிடங்களும் என்னமாய்க் குத்தி நிற்கிறது, தண்ணீருக்கு மேல்!

புரூணையின் நகர்ப்புரத்தில் காரில் சுற்றித்திரிந்த எனக்கு கம்பொங் அயர், கிராமப்புரமொன்றை ஞாபகமூட்டியது.

கள்ளம் கபடமற்ற சிரிப்புடன் வெறுமேல் சிறுவர்கள் எங்களைக் கண்டதும் காற்சட்டையை ஒரு கையால் பிடித்துக் கொண்டு ஓட்டமெடுத்து வீடுகளுக்குள் புகுந்துகொள்ளும் காட்சியைப் பார்த்து எனக்கு புரூணை மறந்துபோனது.

சில ஆண்கள் ஷேட் அணியாமல் வெறுமேலுடன் வாசலில் உட்கார்ந்திருக்கிறார்கள். சில பெண்கள் முன்வாசலில் மீன் துப்புரவு செய்து கொண்டிருந்தார்கள்.

அதனைப் புகைப்படமெடுத்த போது. ஒரு பெண் புன்னகைத்துக் கொண்டாள். பக்கத்தில் வெறுமேலோடு உட்கார்ந்திருந்தவர் அவரது கணவராக இருக்க வேண்டும் வெட்கத்தில் வீட்டுக்குள் புகுந்து பலகைக் கதவை சாத்திக்கொண்டார்.

பலகையினாலான வீடுகளாக இருந்தாலும் வித்தியாசமான முறையில் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றன. சில வீடுகளில் பல வர்ணப் பூச்சுகள் பூசப்பட்டுள்ளன. பூச்சாடிகளை கட்டித் தொங்கவிட்டு அசத்தியிருக்கிறார்கள், சில வீடுகளில்.

சில வீடுகளில் உள்ளே சென்றால் கம்பொங் அயரில் இருப்பதும் பலகை வீட்டுக்குள் இருப்பதுமான எண்ணமே வராது. கொங்றீட் வீடுகள்போன்று செம்மையாக்கப்பட்டு, வர்ணம் பூசப்பட்டு, சில வீடுகளில் குளிரூட்டி கூட பொருத்தியிருக்கிறார்கள். நவீன சாதனங்கள் அனைத்தும் அங்கிருக்கும்.

இந்த நீர்க் கிராமத்தில் வசிப்போரில் பலர் மீனவர்களாக இருக்கின்ற அதே வேளை, பலர் நகருக்குச் சென்று அரச தொழில் புரிகின்றனர்.

இவ்வாறு தொழில்களுக்காகவும் வேறு தேவைகளுக்காகவும் நகருக்கு செல்பவர்கள், கம்பொங் அயரிலிருந்த இயந்திரப் படகுகள் மூலம் துறைமுகம் வரை சென்று, பின்னர் அங்கிருந்து எப்படி செல்வார்கள்? என்ற யோசனை உங்களுக்குப்போல எனக்கும் ஏற்பட்டது.

கம்பொங் அயர் துறையமுகத்தை அண்மித்த பிரதேசம் முழுவதும் ஆயிரக்கணக்கான கார்கள் நிறுத்தப்பட்டிருக்கும் அந்தக் கார்களின் சொந்தக்காரர்கள் அந்த பலகை வீட்டுக்காரர்கள்தான்!

சாதாரணமாக நகரில் ஒவ்வொரு வருக்கும் ஆண்-பெண் பாகுபாடின்றி சொந்தக் கார்கள் இருப்பதுபோன்று, இந்த பூர்வீக வாசிகளுக்கும் சொந்த வாகனங்கள் இருக்கின்றன.

அது சரி, இவ்வளவு செல்வச் செழிப்பில் மிதக்கும் இந்நாட்டில். கம்பொங் அயர் மக்களுக்கு விடிவில்லையா? இவர்கள் எப்போதும் தண்ணீரிலேயே மிதந்து கொண்டு தான் இருக்கப் போகிறார்களா? என்று ஹஸ்மியிடம் கேட்டேன்.

இல்லை. எங்கள் சுல்தான் இந்த மக்களுக்கு எந்த அனியாயமும் செய்யவில்லை. இங்கிருக்கின்ற அனைத்து குடும்பங்களுக்கும் நகரில் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. சிலர் அங்கு இடம் பெயர்ந்திருக்கின்றனர். ஆனால், பலர் அங்கு செல்லவில்லை. அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள அந்த வீடுகளை வாடகைக்கு வழங்கிவிட்டு இங்கு வாழ்கிறார்கள். சிலர் அவ்வப்போது அந்த வீடுகளுக்கு சென்று வருவார்கள். இன்றும்கூட எமது குடும்பம் அங்குதான் சென்றிருக்கிறது.

ஒரு வகையில் அது நல்ல விடயந்தானே? ஒரு நாட்டின் பூர்வீகத்தையும் கலாசாரத்தையும் பேணுவது கடமைதானே?



இது எதிர்கால சந்ததியினருக்கான பெரும் சொத்து அல்லவா? என்றேன்.

அவரது உருண்டைத் தலையை பலமுறை ஆட்டி, நிச்சயமாக, என்றார் ஹஸ்மி.

மாலைச் சூரியன் நித்திரைக்குச் செல்ல தயாராகிக் கொண்டிருப்பதால் அந்த நீர்க் கிராமத்திலிருந்து வெளியேறும் முடிவுடன் இயந்திரப்படகில் ஏறினோம்.

தொடரும்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆமையரப்பாவும் ஆட்டுக்குட்டியும்

*சென்ற இதழ் தொடர்...*

என்டெ சின்ன வயசுக் கதெ. அப்பெ நான் படிக்கப் போகல்ல. ஆட்டுக்குட்டியக் கண்டா அதுக்குப் புறத்தால போயிருவன். மேய்ச்சலுக்கு வாற ஆட்டுல எனக்கு விருப்பமான குட்டியப் புடிச்சி, வாழ நாரால கட்டி விளையாடுவென். திடீரெண்டு நாரப் பிச்சிட்டு குட்டி ஓடிடும்.

மனசும் கூடவே ஓடும்.

இப்படித்தான் ஒரு நாள் ஆமையரப்பா ஊட்ட வந்தாரு. நான் ஊராவூட்டு ஆட்டுக்குட்டியப் புடிச்சி கட்டி விளையாடுறதப் பார்த்திட்டாரு.

ஏன் வந்தார், எதுக்கு வந்தாரு எண்டெல்லாம் ஞாபகமில்லெ.

போறப்ப, தம்பி சாய்ந்தரம் இவனக் கூட்டிட்டு வாடிக்கு வாங்க.

ஆமையரப்பா வாடிக்குப் பெய்த்தாரு.

ஆமையரப்பா அசல் ஆமையைப் போலான். மூனு முழ கொட்டான் மனுஷன். நல்ல கறுப்பு. கட்டையான பெரிய வவுறு. பழுப்புல அரக்கை வாலாமணி. வெள்ள தாடியும் தலையில தொப்பியும்.

ஆமையரப்பாட்ட ஒரு மாதிரியான உப்புத் தண்ணி வாசம் வரும். எங்க வாப்பாட்டயும் அந்த வாசந்தான். ஆத்தில, கடல்ல தொழில் செய்யிற எல்லாரிட்டயும் அந்த வாசந்தான்.

தடுமல் மூக்கோட வாப்பாவ கட்டிப் புடிச்சிக்கிட்டுப் படுத்தா நல்லாருக்கும். தலப்பாரம் குறெஞ்சிரும்.

மெய்தான், இது என்டெ கதெ மட்டுமில்லெ. ஆமையரப்பாட கதையுந்தான்.

ஐ.பி. ஆறுமுகமும் இதுக்குள்ள வருவாரு. ஆட்டுக்கள்ளன் ரமுழாரும் வந்து போவாரு. பழைய மனுசர்ர கதெ கேக்கப் புதுசா இருக்கும்.

ஆமையரப்பாக்கு ஏன் அப்படிப் பேரெண்டு இண்டைக்கும் விளங்கல்ல.

எங்கெட ஊர்ல அப்படித்தான் பேரு.

உம்மா, வாப்பா ஒரு பேரு வெப்பாங்க. பள்ளிக்கூடத்தில இன்னொரு பேரு. கூப்பிர்ர வேறொரு பேரு. பதிவுல அது வேற. கடெசில ஆரோ ஒருத்தன் வெச்ச பட்டப் பேருதான் மௌத்தாகி மண்ணுக்குள்ள போன புறவும் நிலெச்சி நிற்கும்.

ஆமையரப்பா, வாப்பாக்கு மாமா. எனெக்கி மூத்தப்பா. அந்த நாளெய போக்ள நினெச்சா புதினமா கிடக்கு.

புகையிலயெரு, வத்தக்காயெரு, கொச்சிக்காயெரு, கத்தரிக்காயெரு, புடலங்காயெரு, கால்ராத்தலெரு, ஈக்கிலெரு, அரிப்பாரு, அதக்க விழுங்கியெரு, பூலாவெரு, புறப்பட்டாரு, மாலையெரு, கிராணம் பாத்தாரு, புக்கையெரு, சோவையெரு, களட்டிக்காயெரு, பனமரத்தாரு

இத எழுதப்போனா பொழுது விடிஞ்சிடும்.

இண்டெக்கி யாரு இப்பிடி பேரு வெக்கிர, எல்லாம் அறபுப் பேரு.

ஆத்துக்கு வீசப்போன மாமாவும் உசன் மச்சானும் கரையேறி வந்தா ராத்தாவும் மறெஞ்சி மறெஞ்சி கரையேறி புன்னெ மரத்திலெ மறைஞ்சிருவா. ராத்தாக்கு மச்சானெக் கண்டா செரியான வெக்கம்.

மச்சி மட்டும் பொழுது உச்சிக்கு வந்தும் கரையேறெ மாட்டாள். தண்ணிலெயே மிதப்பாள்.

பொழுது உச்சாலெ கெளியும் மட்டும் ஓடெயும் நாங்களும் பட்டதுபாடுதான். குளிச்சி முடிச்செ கையோடெ என்னெயும் ராத்தாவெயும் மச்சிட தோணியிலெ ஏத்திக்கிட்டு பெரியெ ஓடெக்குக் கொண்டு போவாள். மச்சிர கையிலெ சவள். நான் முன்னணியித்திலெ ராத்தா நடுத்தோணியிலெ.

கொண்டெக் காத்தில தோணி தொடுக்காமலே பெரியோடெப் பக்கம் போகும். எங்களோடெ பந்துக்கா, பூக்கள், புச்சித்தேங்கா, அடிமட்டெ எல்லாம் போட்டி போட்டுக் கொண்டு ஊர்வலமா வரும். அப்பிடியே உப்பாத்துக்குப் போய் முகத்துவாரத்தாலெ கடலுக்கெ போயிடுமாம்.

பெரியோடெ மேட்டுலதான் வண்ணாரக் குடியெல்லாம் இரிக்காங்கெ. எங்களுக்கு உடுப்பு வெளக்கிற பெரிய வண்ணாத்திர ஊடும் அங்கெதான். ஓடெக்கரெய ஒட்டினாப்பலெ நீள நீளமான புடவெக் கொடிகள். வருசக் கூலிக்கு உடுப்பு வெளக்கிற, அஞ்சு மரெக்கா நெல்லுக்கு ஒரு குடும்பத்திக்கு ஒரு வரிசம் பூரா வெளக்கெனும்.

மோகினிப் பட்டிச் சோமன், பன்றுட்டிச் சேலெ, பச்செ வடம், சுங்காவடிச் சேலெ எண்டு வண்ணார வெட்டெயில நெறெஞ்சி கிடக்கும். மணச்சாமான் போட்டு வெளுத்த உடுப்புகள் காத்திலெ மணக்கும்.

நானும் மச்சியும் ராத்தாவும் புடவெக் கொடில புடவைகளெ மோந்து மோந்து பாப்பெம்.

காத்தும் மணந்தான், ஓடெயும் மணந்தான்.

எங்கடெ ஊரு வண்ணார ஆக்களெல்லாம் நல்லெ மனிசர். பத்தெட்டுக் குடிதான். நல்லெ ஒத்துமெ. அவங்கட கதெயச் சொல்லப்போனா அதுக்கொரு யுகம் வேணும்.

வண்ணாரெ ஆக்களெண்டாலும் மானம் மரியாதெயோடெ வாழ்ந்த மனிசர். எங்கடெ ஆக்கள் அவங்கள்ளெ செரியான அன்பு. அவங்களுக்கும் எங்கட ஆக்கள்ளெ செரியான மதிப்பும் மரியாதெயும்.

எங்கடெ பெரிய வண்ணாதி எங்கடெ உம்மாவ ராத்தாண்டு கூப்பிடுவா. இப்பெல்லாம்



அந்தக் கனிவோடெ கூப்பிர்ர மனிசரக் காணேலாது.

தங்கச்சியோ உம்மா சோறு திங்க வரட்டாம்...

உசன் மச்சான்ட சத்தம் ஓடெக்கரெயெல்லாம் காத்திலெ அள்ளிட்டு காதில புகுந்தது.

புறவத்திலெரிந்த மச்சி கொல்லாப் பக்கம் சவளப் போட்டு மெதுவாகத் தோணியெத் திருப்பி விட்டாள்.

குகுகு

அழகான ஆட்டுக்கால. வாப்பாவும் நானும் கட்டிப்போட்டம். ஆமையர் மூத்தப்பாட்ட போய் ஆடும் வாங்கி வந்திட்டம்.

'வெள்ளெச்சிம்மா' ராத்தாதான் பேர் செல்லித் தந்தவ.

எந்தக் காட்டுலெ நிண்டாலும் வெள்ளெச்சிண்டு ஒரு சத்தம் வெச்சாப் போதும். காலுக்குள்ளெ வந்து வெள்ளெச்சி நிக்கும்.

ஆலங்கொத்து, தவிட்டங்கொத்து, இத்திக் கொத்தெண்டு ராப்பகலா சாப்பாடுதான். வெள்ளெச்சிர வவுறும் மத்ரஸாவிலெ ஓதித்தாறெ லெவ்வெட வவுறும் ஒண்டுதான். முட்டி வவுறு. குட்டித்தாச்சி வெள்ளெச்சி.

எனக்கி லெவ்வெண்டாச் செரியான பயம். ஓதித் தரக்கொள்ள ரெண்டு அடி போடாட்டி அவருக்குப் பத்தியமில்லெ. ஊரிலெ கஞ்சா புடிக்க வாற பொலிசெண்டாலும் பயந்தான். பள்ளி வளவுக்குள்ள மையத்திப் புட்டில நிக்கிற பேய்க்கும் பயந்தான். பேயெ நான் இன்னும் கண்ணால காணல்லெ. மத்தப்படி வேறண்டுக்கும் பயமில்லெ.

ஆமையரப்பாவும் பேய்க்கு ஊதிப் பாப்பாரு. ஷெய்த்தானுக்கும் ஊதிப் பாப்பாரு.

ஆமையரப்பாவெ நினைக்க நினைக்க அவர்ர புட்டிக்கெ ஆடு வாங்கப் போன நாளெ எனக்கி மறக்க ஏலாது. இந்த வயசுக்குள்ள அப்படியொரு காச்சியெ நான் காணல்லெ. ஆடு வாங்கிவர ஆமையரப்பாட்ட போன அண்டுத்தான் எங்கட ஊரெச் சுத்தி கடலுக்குப் போற பெரியாத்தெ முழுசாத் தெரியும்.

வாப்பா கரைல நிண்டு மாமாண்டு சத்தம் வெச்சாரு வாப்பாட சத்தம் ஆத்தங்கரெ, கண்ணாக்காடுண்டு இரெஞ்சிட்டுப் போய் மா மா.. மா மா.. ண்டு எண்டெ காதெ சுத்திச் சுத்திக் கேட்டது.

நானும் திருப்பி, மா.. மா.. ண்டென். எனக்கிப் புறத்தாலெ ஆறும் கண்ணாக்காடும் மா மா ண்டது. எனக்குச் செரியான கொண்டாட்டந்தான். அதெப்படிண்டு எனக்குச் செல்லத் தெரியெல்லெ.

எங்கடெ சத்தம் கேட்டவுடனெ அக்கரெயிலரிந்து ஆமையரப்பா தோணியெடுத்திட்டு வந்தாரு.

அப்பா புறவத்திலரிந்து தொடுக்க, நானும் வாப்பாவும் முன்னணியத்தில வாப்பாட மடிக்குள நானிருந்தென்.

நாங்கெ போன நேரம் பொழுது அஷரால சாஞ்சிட்டு.

தோணி கரெ தட்டிட்டு. புட்டிக்குள கால் வெச்சாந் தெரியும், கிடுகிடெண்டு ஒரே இரெச்சல்.

வக்கா, சாம்பல் கொக்கு, தாக்கத்தியான், மொட்டத் தலையான், அடெசல் மான்டு ஒண்டெ ஒண்டு திரத்தி திரத்தி ஒண்டெ ஒண்டு கொத்திக் கொத்தி சண்டெ போட்டு, அது பெரிய களறி.

ஆத்துக்கு நடுவுல பென்னம்பெரிய புட்டி. புட்டி நிறைய கண்ணாக்காடு. கண்ணாக்காட்டுக்கு நடுவுலான் அப்பாட ஊடும் ஆட்டுக்காலெயும். கொஞ்சந் தள்ளி கொட்டுக் கிணறும்.

அந்தப் பக்கம் வீசப் போற எல்லாத் தோணிகளும் அப்பாட புட்டியெச் சுத்திச் சுத்தி வலம் வருவாங்க. மக்காவுக்குப் போன மூத்தம்மா எனக்கிட்ட சென்னா, அல்லாட பள்ளியெ சுத்திச் சுத்தி ஓர்ரதா. அப்படித்தான் ஆமையரப்பாட புட்டியெ சுத்தி வீசப் போற ஆக்களெல்லாம் தோணியெ ஓட்டுறாங்க. அவ்வளவு சங்கெ ஆமையரப்பாக்கு.

மாமா! இவனெ கூட்டிட்டுப் போங்க. நான் கறிப்பாட்டுக்கு நாலு தூண்டல் போட்டுப் பாக்கென்.

வாப்பா வந்த தோணிலரிந்து தூண்டல் போடத் தொடங்கிட்டாரு.

அப்பாட ஊட்டுக்கு முன்னால கறித்தட்டு போல வரம்பு போட்ட நாலு வரவெ. ரெண்டு மரெக்கால் விதைக்குமெண்டு வாப்பாக்கிட்ட அடிக்கொரு தரம் செல்லுவாரு.

அப்பாட ஊடு வளவெச் சுத்தி பத்துப் பதினெஞ்சு தென்ன மரங்கள், வானத்தெத் தொட்டாப் போல. குலெ குலெயா இளநியும் தேங்காயும்.

பழுத்த தேங்காயெல்லாம் வரவெக்குள்ள சிதறிக் கிடந்தது. ஊட்டெண்டா தேங்கா உழுந்தெ கையோட நான் போய்ப் புறக்கிடுவென்.

இஞ்செண்டா எல்லா வேலெயும் அப்பாட கையக் காத்துக் கிடக்கும் போல. அப்பாட மூத்தம்மாக்கு ஒரு புள்ளெதான். அதுவும் பொம்புளப் புள்ளெ. சின்ன வயசிலெ நாலு நாள் வாந்திபேதி வந்து மௌத்தாப் பெய்த்தா. அதுக்குப் புறவு புள்ளப் பூச்சில்லெ. புள்ளெ மௌத்தாப்போன கையோட ஊரெ விட்டு வந்து புட்டிக்குள்ள குடிலொண்டக் கட்டிக்கிட்டு வந்தவர்தான் ஆமையரப்பா. நாப்பது வருசமா இந்தப் புட்டிக்கு அவர்தான் ராசா.

ஆமையரப்பாவும் அவர்ர ராசதானியும்.

கொக்குகளும் நீர்க்காகங்களும் உலகத்தில உள்ள அத்தனெ பறவெ பக்கிசாரங்களும் அவர்ர மக்கள். அது எத்தெனயோ சாதி. அப்பாட அனுமதியோடெதான் அவங்கள்ளாம் புட்டிக்கெ நுழையனும்.

புட்டியெ வளெச்சி அப்பா எனக்குக் காட்டினாரு. கண்ணாப் பத்தெயில, கைக்கெட்டின தூரத்திலெ பறவைகள்ற கூடுகள். கூட்டுக்குள்ளெ மஞ்சள், கறுப்பு, பழுப்பு நிறங்கள்ளெ முட்டைகள்.

இது நத்தை கொத்திர முட்டெ. இது தாக்கத்தி கொக்குட முட்டெ. இது நீர்க்காகத்திட முட்டெ. இது இளநீலம், அண்டக் காகத்திட முட்டெ.

அப்பா செல்லித் தந்தாரு. ஒரு முட்டெயையும் கையால தொடப் போடாதுரா மனெ. இது அப்பாட கண்டிப்பான உத்தரவு. முட்டெய அளெஞ்சா தாய்ப்பறவை கூட்டெ உட்டு அப்புறப்படுத்திடுமாம்.

அநியாயம். இந்தக் கொக்கு குருவிகளாலாம் நம்மடெ ஊரில மீனும் இறாலும் பெருகி வழியுது. இதுகள்ற எச்சிலத் திண்டு திண்டுதான் மீன்களெல்லாம் கொழுத்து பெரிய பெரிய சினையும் வெச்சி.

அப்பாட கண் தெரிய ஆரும் கொக்குக் குஞ்சுகளெ எடுக்கேலாது. ராவில கொக்கடிக்கப் போறவங்களுக்கெல்லாம் அப்பா ஒரு சட்டம் போட்டிருக்காரு.

பச்ச மரத்திலெ கூடு கட்டி வாழ்ற பறவைகளெ அடிக்கேலாது. பட்டெ மரத்திலெ வாழ்றத மட்டும் கறிப்பாட்டுக்கு புடிக்கச் செல்லுவாரு.

அவர்ரெ அனுபவத்திலெ பச்செ மரம் கூட்டுக் குடும்பம். பட்டெ மரமெல்லாம் தனிச்சவங்கடெ தங்குமிடம்.

கூட்டிலெ அடெப்படுக்கிற கொக்கு நம்மட அமானிதம் என்பாரு.

புள்ளெ இல்லாத அவருக்கு, இந்தப் பறவைகளும் ஆடுகளுந்தான் அவர்ர சொத்தும் இனசனமும்.

ஆத்தில மீன் நிறெஞ்சி வழியுது. இவனுகள்ற வாய்க்கு கொக்குக் கறி வேணுமாம். ஆமையரப்பா புறுபுறுண்டு கதைக்கிறது எண்டெ காதுக்குக் கேக்குது.

என்ன பேரன்! ஆடுகளெ ஆட்டுக்காலையிலெ ஏத்துவமா?

தம்பியோவ் வாங்க.

ஆமையரப்பா வாப்பாக்கு குரல் விட்டாரு. கண்ணாக் காடும் புட்டியும் தம்பியோவ். ண்டு சொல்லிச் சொல்லிக் கரெஞ்சி போனது.

நானும் அப்பாவும்

கால.. கால... கால... கால. ஆடுகள் ஒவ்வொண்டா முன்னங்கால மரக்குத்திலெ தூக்கி வெச்சி ஒரே பாய்ச்சல்லெ புரவாடிக்குள்ள புசுபுசுண்டு ஏறி நிறெஞ்சிட்டு.

பேரன், உனக்குப் புடிச்செ ஆட்டக் காட்டு பாப்பம்

நான் வெள்ளெச்சிய காட்ட, அவர்ர கையிலரிந்த கவுத்த வெள்ளெச்சிர கழுத்தில போட்டு,

வெள்ளெச்சி அடம்புடிச்சி அடம்புடிச்சி அலறத் தொடங்கியது. புரெயிலரிந்து மெதுவாகத் தூக்கி நிலத்திலெ விட்டாரு. தோளில கிடந்த துண்டெ எடுத்து தலையிலெ போட்டுக்கிட்டு

பிஸ்மில்லா, அல்லாட கிருபையால என்டெ பேரனுக்கு பட்டி பெருகனும் வானத்தப் பார்த்து வாப்பாட கைல கொடுத்தாரு.

**எஸ்.எல்.எம். ஹனிபா**

வாப்பாவும் தோளில கிடந்த துண்ட தலையில போட்டு பவ்வியமா வாங்கிட்டாரு.

என்டெ கைல களக்கம்பும், மீன் கோர்வையும். வாப்பாட கைல வெள்ளெச்சி.

பயத்லெ வெள்ளெச்சி தோணிக்குள்ள ஒடுங்கிட்டு. புட்டிலெ பறவெ பக்கிசாரங்களெல்லாம் மேகத்திலரிந்து இறங்கி வந்து கண்ணாக்காடுகளில மிதக்கத் தொடங்கிட்டு.

நடு ஆத்திலரிந்து புட்டியெப் பாத்தென். மரங்கள்ற கைகள்ள பெரிய பெரிய வெள்ளெப் பூக்கள். கொண்டல் காத்தில அசைந்து அசைந்து சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு, சாய மயிலே சாய்ந்தாடு, ராத்தா படிச்சித் தாற பாட்டு காதுக்குள்ள வந்து போனது.

கொக்குகளும் பறவைகளும் சாய்ந்தாடம்மா, சாய்ந்தாடம்மா சாய மயிலே சாய்ந்தாடு.

எங்கடெ கால்கள் ஊர்க் கரையைத் தொட்டபோது ஆமையரப்பாட புட்டியெ பொழுது நெருப்புத் தண்ணிக்குள்ள போட்டிருந்தது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தாத்தாவின் அறியாமைகள்

காகம் பறந்து பறந்து கத்தினா
கடிதம் வருமென்றும்
அரிச்சரிச்சிக் கத்தினா யாரோ
வரப்போறா வென்றும் தாத்தா
சொன்னதை நம்பி நானும்

காகம் கத்துமிடமெல்லாம்
கடிதம் தேடுவேன்
விடுமுறை தினங்களென்றும்
பாராமல் தபாற்காரனைத் தேடினேன்...

நடுச்சாமம் நாய் ஊளையிடும்போது
பேய் கவ்விச் சென்றுவிடும் என்று
தாத்தா
கடும்பயம் காட்டுவார்
பக்கிள் கத்தும்போதும் யாரோ மவுத்தென்பார்

போற பயணத்தில் பூனை குறுக்கறுத்தா
பூகம்பமாம் என்று புறுபுறுப்பார்
பூனை குறுக்கறுத்தால்
அன்று வீட்டை விட்டே
வெளிவரமாட்டார்

ஊசி, உப்பு, முட்டை இரவில்
இரவல் கொடுக்காதே தரித்திரியமென்று
தாத்தா தடுத்ததெல்லாம் ஓர் அறியாமை
இரவில் குப்பையில் ஊசி விழுந்தால்
ஆபத்தென்று தெரியாமல் சொன்னதெல்லாம்
இன்னுமே எனக்குள் புரியாமை...

கலைதாசன் ஹக்கீம்

# தாயன்பு



தாயே!
என் உயிரை மதித்து
உன் உயிரை துச்சமாக நினைத்து
என்னை உலகுக்கு அறிமுகம் செய்தாய்
உன்னைப்போன்று பாசமுள்ளவர்கள்
இவ்வுலகில் யாரும் இருக்கமுடியாது
கருவறையில் சுமந்து என்னை கடுகளவு கூட
துன்பமில்லாமல் பெற்றெடுத்தாய்
இன்பத்திலும் துன்பத்திலும் கலந்திருந்தாய்
அல்லாஹ்வின் திருநாமத்தை
அளவில்லாமல் கற்றுத்தந்தாய்
உன்னைபோன்று பாசமுள்ளவர்கள்
இவ்வுலகில் யார் தாயே?
உலகம் அறியாத வயதில் ஓரிடம்கூட
தெரியாமல் இருந்தேன் நான்
எல்லாவற்றையும் அறியவைத்தவளும் நீ தான்
உன்னை எப்படிப் போற்றுவதென்று தெரியவில்லை
உன்னைபோற்ற ஒருலகம் போதாது தாயே
உறவென்பது உயிரிருக்கும் வரை
தாயென்பவள் உலகம் அழியும் வரை...

ஏ.ஏ. சல்மான்
புத்தளம்

# விடிவுதேடும் உம்மத் நாம்



அற்புத வாழ்வதை
வீணாய்க் கழிக்கும்
நவயுக மோக
மானிடர் நாம்

ஆசை காட்டி மோசம் செய்யும்
அற்ப வாழ்வின் நாயகர் நாம்
அருமை, பெருமை, கருணை மறந்து
சிறுமை வறுமையே
கதியான மானிடர் நாம்

யூதர் சதியே
நம் கதியென்று
கத்திக் கதறி
நாட்கள் கடத்தும்
நாணமில்லா மானிடர் நாம்

உண்ணப் பஞ்சம்
இட்டு வாழப் பஞ்சம்
இறை நினைவுக்குப் பஞ்சம்
மறந்தோம் நாம் இறைதஞ்சம்

சூது, வாது வாழ்வாக
மாது பின் தாழ்வாக
தூது உம்மத் நாம் இழிவாக
நாணிக், கோணி, வாடி இங்கு!

மறந்தோம் நினைக்க இறைவனை
பிறந்தோம் நிலைநிறுத்த ஈமானை
இழந்தோம் ஏகத்துக்காய் கலிமாவை
கிடக்கின்றோம் வாடி, வாடி விடிவுக்காய்

எம். பாரிக்

# திரண்டல்கள்

உயிர் மொழி

வறுமையின் இரும்புக்கரத்தால்
பிடிக்கப்பட்டு
சீதனப்பேய்களால் வீடுகளில்
முடங்கும் சகோதரிகள்
எதிர்காலம் குறித்த கேள்விக்குறிகளுடன்

வெளிநாட்டு வேலைவாய்ப்பு
நிறுவனங்களின் ஆசைவார்த்தைகள்

பணம் என்ற பகைப்புலம்
எம் வாழ்வின் நிர்ணயங்கள்


வாழ்வில் வசந்தத்திற்கான
எதிர்பார்ப்புகளில் எஞ்சியிருப்பது
வெறும் ஏக்கங்கள் மாத்திரமே
எம் கனவுகள் வெறும் கானல் நீர்

நாம் இப்போது மனிதர்களல்ல

வியர்வையை எரிபொருளாக்கி
இயங்கும் இயந்திரங்கள்

இப்பொதெல்லாம்
வாழ்க்கை ஓடம்
பிடிமானமின்றியே
பயணிக்கிறது
தாயகம் மீள்வதற்கான
அவாவுறுதல்களுடன்...

ஜானிஸ்



# வறுமை

தம்பி வறுமை கண்டு
விதியென உருகி - உன்
விழி நிரம்பி ஆறாக
ஓடுவதேன்???

வரலாற்று பதிவுகள் - உனக்கு
காட்டிடவில்லையா?
வறுமையில் வாழ்ந்த
வீரப் புருஷர்களின்
வரலாற்றுக் கதைகளெல்லாம்...

உலகை வென்ற உத்தமப் புருஷர்
எம் உம்மி நபி
வயிற்றினில் கல்லைக் கட்டி
பசி போக்கியவர்...
வெளிச்சம் தந்த எடிசன்
புகையிரதத்தில் புத்தகம் பொறுக்கினார்...
மாவீரன் நெப்போலியன்
மண்குடிசையில் அவதரித்தவர்...
புவி ஈர்ப்பின் ஐசக்
பாதை விளக்கில் பாடம் படித்தவர்...

வறுமை என்று
வாழ்வை எதிர்ப்பதா?
துவண்டிட வேண்டாம்
சின்னவன் நீ
துணிவுடனே நடைபோடு
நாளைய உலகில்
பார்போற்றுவனாய் உருவாகி விட!

ஆதிபா அஷ்ரப்
மாவனல்லை

# விமர்சிப்பார்!

ஓசியில் பத்திரிகை வாசிப்பார்
ஒரு நாள்கூட தவறமாட்டார்
காசு கொடுத்து வாங்கமாட்டார்
கண்ட இடத்தில் குந்திடுவார்
வாசிகசாலை நுழைந்துவிட்டால்
வாங்கும் மேசையும் அவர் சொந்தம்
நாசியிற் தும்மல் வந்தாலும்
நகரமாட்டார் இருக்கை விட்டு !

பார்வையில் சஞ்சிகை எது படினும்
படித்தே முடிப்பார் பக்கம் விடாமல்
யார் சுவர் நின்றாலும் வெட்கமில்லா
யாசகம் கேட்டு வாங்கிடுவார்
நேர்மை நடத்தை கொண்டவராம்
நெஞ்சுரமுள்ள பலசாலி
ஆர்வமாய் வாசிக்கும் திறனுடையார்
ஆனாலும் தினசரி இது தொழிலே!

மனைவி பிள்ளை தேவையெல்லாம்
மறந்திடுவார் ஒரு நொடியில்
அனைத்து நாளும் நுகர்வதிலே
அவரை வெல்ல யாருமில்லை
கனைத்து இருமி சளி வந்தும்
கவலை கொள்ளார் வாதிப்பார்
நினைவிற் சகல செய்திகளும்
நிலைக்கச் செய்வார் விமர்சிப்பார்
அவர்தான் சந்திப் பேச்சாளர்

மூதூர் கலைமேகம்



# அன்றும் இன்றும் நாளையும்

வாழ்க்கை பகற்கனவு என்றெண்ணி
வாழ்க்கையெனும் தத்துவத்தை
பறைசாற்றுகிறாய் தாயாக,
மகளாக, சகோதரியாக – இன்று

கல்விக்கடல் பறிக்கப்பட்டவளாய்
ஒன்றித்தாய் அடுப்பங்கரையுடன் – அன்று

கல்வியெனும் ஆயுதத்துடன்
வீறுநடை போடுகிறாய் வையகத்தில் – இன்று

திருமணச் சிறையில் அகப்பட்டு
கைதியானாய் – அன்று
திருமணமெனும் சுவனத்தில்
அரசியாக – இன்று

ஆட்சித் தெரிவு
புறக்கணிக்கப்பட்டவளாய் – அன்று
கட்டளையிடும் அதிகாரப் பெண்ணாய்
ஆட்சியியலில் – இன்று

உடன்கட்டையாய்
கணவனுடன் – அன்று
சந்தோசமாய்
மறுவாழ்வில் – இன்று

வீட்டைச் சுற்றும்
பெட்டிப்பாம்பாய் – அன்று
வையகப் பவனியில்
முதலாளிகளாய் – இன்று
சவால் விடுபவளாய்
தரணிக்கு – நாளை


மருதமுனை சஜீத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆப்கானைவிட சிரியா உலகின் மிகப்பெரிய அகதி முகாம்

- ஐ.நா -



சிரியா உலகின் மிகப்பெரிய அகதி முகாமாக மாறி வருவதாக ஐ.நா. தெரிவித்துள்ளது. ஐ.நா. வின் பொது அவைக் கூட்டம் ஜெனீவாவில் நடைபெற்றது. அதில் ஐ.நா. வின் சர்வதேச அகதிகளுக்கான ஹைக்கமிஷனர் ஆண்டனியோ குட்டரஸ்:

பல தசாப்தங்களாக இதர நாடுகளில் இருந்து வெளியேறும் அகதிகளை வரவேற்று புகலிடம் அளிப்பதில் முன்னிலை வகித்த சிரியா மக்கள், தற்போது சொந்த நாட்டை விட்டு வெளியேறும் நிலையிலுள்ளனர். இந்த நிலை நீடித்தால், ஆப்கான் மக்களை விட உலகின் மிகப்பெரிய அகதிகள் சமூகமாக சிரியா மக்கள் மாறுவார்கள் என்றார்.

மூன்று வருடங்களுக்கும் மேலாக சிரியாவில் நீடிக்கும் உள்நாட்டுப் போர் காரணமாக 24 லட்சம் பேர் புகலிடம் தேடி அகதிகளாக அயல் நாடுகளுக்கு செல்கின்றனர். நாட்டின் மக்கள் தொகையில் பாதி எண்ணிக்கையிலான 93 லட்சம் பேர் மனிதநேய உதவிகள் கிடைக்காமல் நரக வாழ்க்கை வாழ்கின்றனர். இந்த நிலை நீடித்தால் சிரியாவின் அகதிகளின் எண்ணிக்கை இவ்வாண்டின் இறுதியில் 40 இலட்சத்தை தாண்டும் என்று ஐ.நா. கூறுகிறது.

இரண்டு இலட்சத்திற்கும் அதிகமான சாதாரண மக்களையும் 45ஆயிரம் புரட்சிப் படையினரையும் சிரியா அரசு தடுத்து வைத்திருப்பதாக ஐ.நா பொதுச் செயலாளர் பான் கீ மூன் குற்றம்சாட்டியுள்ளார். அரசை எதிர்க்கும் புரட்சியாளர்களை சரணடையச் செய்து இரண்டு இலட்சம் பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இதன் முடிவு கூட்டு மரணமாக அமையும். சிரியாவில் மனித உரிமைப் பிரச்சினை அவசர முன்னுரிமையை வேண்டி நிற்பதாக பான் கீ மூன் தெரிவித்துள்ளார்.

சிரியாவின் தெற்கு பகுதியில் ஆயிரக்கணக்கான மக்களுக்கு மூன்று ஆண்டுகளாக எவ்வித உதவிகளும் கிடைக்கவில்லை என்றும் அவர்களுக்கு உதவுவது சர்வதேச சமூகத்தின் கடமை என்றும் பான் கீ மூன் நினைவூட்டினார்.


UNIVERSITY OF WOLVERHAMPTON

15 YEARS

Course fee : Rs. 350,000/= ALL INCLUSIVE

BA (Hons) Top-Up in
Business Management

INTAKE Now on March 2014

- Conducted by expert British lecturers
- Highly reputed and affordable
- Flexible payment scheme
- UGC recognized
- Weekend Classes

Entry Criteria: BTEC HND in Business Management
CIM | CIMA | IBSL | PQHRM | NIBM | ACCA etc. *APL

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

0773 895 318
0777 110 833
Hotline 077 3114105

32, Dharmarama Road, Colombo 6. Tel : 011 255 9255 | www.bcas.lk



தொழில் வழிகாட்டல் பயிற்சி நெறிகள்

LONDON COLLEGE
OF HIGHER STUDIES (PVT) LTD

52, Davidson Road, Colombo- 04

- பயிற்சி நெறியின் பின் கூடுதலான சம்பளம் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு. மடிக்கணனியை பயன்படுத்தி வீட்டிலிருந்தவாறே உலக நாடுகளுக்கு விமானச் சீட்டுக்களை வழங்குவதற்கான தகைமையைப் பெற்றுக் கொண்டு கூடிய இலாபம் அடைந்து கொள்ளவும் முடியும்.
- சாதாரண தர பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான குறுகியகால பயிற்சி நெறி
- விரைவில் தொழில் வாய்ப்புக்கான பயிற்சிகள்.
- சுய தொழில் வாய்ப்புக்கான தகைமைகள்.
- மத்திய கிழக்கு நாடுகளுக்கு கூடிய சம்பளத்தில் தொழில்களை பெற்றுக் கொள்ளும் வாய்ப்புகள்.
- Uk, USA, Canada, Australia, Swiss போன்ற நாடுககளில் படித்துக்கொண்டே ஹோடல்களில் தொழில் வாய்ப்புக்கு ஏற்ப நடைபெறும்.

077 99 65 000
077 50 96 000
Hot Line 0711 60 10 40

London Hotel School
10 சர்வதேச தரத்திலான சான்றிதழ்கள் வழங்கப்படும்
5 - 5 நட்சத்திர ஹோட்டல்களில் பயிற்சிகள்.
மேலும் தகைமையைப் பெற்றுக் கொள்வதற்காக 5 நட்சத்திர ஹோட்டல்களில் பயிற்சி, சம்பளம், டிப்ஸ், உணவு உட்பட சீருடை என்பன வழங்கப்படும்.
Cookery • Front Office & Reception • House Keeping • Vegetable & Fruit Carving • Food & Beverage • Pastry & Bakery
Tourism • Cake Making • English • Italian Cookery

Airline Ticketing Course
- CERTIFICATE IN AIRLINE TICKETING
  3 MONTHS COURSE, 5 CERTIFICATES
- DIPLOMA IN AIRLINE TICKETING
  6 MONTHS COURSE, 7 CERTIFICATES

ENGLISH & IT
Diploma in English Diploma in IT
சாதாரண தரம் பரீட்சை Vழுதிய மாணவர்களுக்கான குறுகிய கால பயிற்சி நெறி
- Speaking
- Reading
- Listening
- Writing

8 Certificates

- MS Office
- Graphics
- Basic Programming
- Internet & E-mail

40% கழிவு

Diploma in Montessori (AMI)
AMI Internationally Recognised Diploma program is designed for aspiring pre-school Teachers and Parents
- Child Psychology
- Sensorial Education
- Practical Life Exercises
- Language Education
- Mathematical Concept
- Hand Work

- 3 Months Teacher Training Course
- Training Method in 3 Languages
- Excellent Local & Foreign Career Prospective
- Get self employed with your own Montessori
- You can obtain 60 points for your Skill Migration Application

Email: info@lchs.edu.lk Web: www.lchs.edu.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed at AJ Prints (Pvt) Ltd. 44, Station Road, Dehiwela.